22 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

416-282-4978



RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்



Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733



Join Our Brokerage - Real Estate Needs

416.315.9397



www.mahendran.ca

Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca



நதி 22 | பாலம் 24 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | DECEMBER 15, 2012


# கனடாவின் புதிய போர்விமானம் F-35?

டிசெம்பர் 12, 2012 இல் வெளியான செய்திகளின்படி F-35 போர் விமானங்களை வாங்க $45.8 பில்லியன் டொலர் செலவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு F-35 போர்விமானங்களை வாங்க $9 பில்லியன் செலவாகும் என தற்போதைய கனடிய பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் மக்கே கூறியிருந்தார்.

இதனால் தற்போதைய அரசு F-35 போர்விமானங்கள் வாங்கும் உடன் படிக்கையில் உடனடியாக கையொப்பம் இடமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் F-35 போர் விமானங்களை வாங்குவதா அல்லது வேறுவகையான போர்விமானங்களை வாங்கலாமா என ஆராய்ந்தே முடிவு எடுக்கும் என பொது சேவைகளுக்கான அமைச்சர் Rona Ambrose டிசம்பர் 12, 2012 இல் தெரிவித்தார்.

கனடாவிடம் தற்போது உள்ள போர்விமானங்கள் 1982 ஆம் ஆண்டில் வாங்கப்பட்ட Hornet எனப்படும் CF-18 போர் விமானங்கள் ஆகும். அப்போது கனடா 72 போர்விமானங்களை கொள்வனவு செய்திருந்தது. இவற்றுள் சில தனது பாவனைக்காலம் முடிவடைந்த படியால் தற்போது விமானப்படை பொருட் காட்சிச்சாலைகளில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. மற்றையவை தமது பாவனைக்காலம் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் கனடாவிற்கு புதிய போர்விமானங்கள் வாங்குவது ஒரு முக்கிய விடயமாக தற்போது பேசப்படுகிறது.

கனடாவிற்கு புதிய போர்விமானங்கள் தேவை என உணர்ந்த, 1996 இல் இருந்த லிபரல் அரசாங்கம் அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, நெதர்லாந்து, துருக்கி, அவுஸ்திரேலியா, நோர்வே, டென்மார்க் ஆகிய எட்டு நாடுகளுடன் சேர்ந்து அமெரிக்காவின் 'Joint Striker Fighter' (JSF) எனப்படும் அதி நவீன போர்விமானம் ஒன்றை ஆராய்ச்சி செய்து, வடிவமைத்து உருவாக்கும் திட்டத்தில் முதலிட்டது. இத்திட்டப்படி இவ்வாறு முதலிட்ட 9 நாடுகளும் இப்போர் விமானங்கள் உற்பத்தி செய்து விற்பனைக்கு வரும் 2016 ஆம் ஆண்டில் இருந்து அடுத்த 25 வருடங்களுக்குள் 3,100 விமானங்களை வாங்குவதாக முடிவு செய்யப்பட்டது. இதன்படி கனடா 65 போர்விமானங்களை 2016ஆம் ஆண்டிலிருந்து அடுத்த 7 ஆண்களில் வாங்குவதாக முடிவு செய்யப்பட்டு $168 மில்லியன் டொலர்களை இப்புதிய போர்விமான ஆராய்ச்சியில் முதலிட்டது. இவ்வாராய்ச்சி யின் விளைவாக வடிவமைக்கப்பட்டதே Lightning II எனப்படும் F-35 போர்விமானம் ஆகும். 2010 இல் நாலு விமானங்கள் செய்யப்பட்டு பரிசோதனைப் பறப்புக்களை மேற்கொண்டு அவற்றின் உற்பத்தி உறுதிசெய்யப்பட்டது.


இதைத் தொடர்ந்து 2010 இல் பாதுகாப்பு அமைச்சராக இருந்த பீற்றர் மக்கே கனடா F-35 போர்விமானங்கள் 65ஐ $9 பில்லியன் டொலர்களுக்கு (விமானங்களின் விலை மட்டும்) வாங்கப்போவதாக அறிவித்தார். அந்த அறிவித்தலை தொடர்ந்து எதிர்கட்சிகள் நாடாளுமன்றத்தில் தமது எதிர்ப்பை காட்ட தொடங்கின. இவ்வாறு 65 போர்விமானங்கள் வாங்கும் திட்டம் அரசாங்கம் வழமையாக கொள்வனவு செய்யும் முறையான கேள்விப்பத்திரம் மூலம் பல நிறுவனங்களிடம் இருந்து விலைமதிப்பை பெற்று தெரிவு செய்யப்படவில்லை என்றும், அரசாங்கம் மற்ற எந்த நிறுவனங்களுடன் விலையை ஒப்பிடாமல் நேரடியாகவே F-35 உற்பத்தி செய்யும் Lockheed Martin நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது எனவும் குற்றம் சாட்டினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கடந்த லிபரல் அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அமையவே தாங்கள் 65 போர் விமானங்களை வாங்க முடிவு செய்ததாக கூறியிருந்தார். இதை தொடர்ந்து இப்போர்விமானங்களின் கொள்வனவு விலை, மற்றும் அதைப் பராமரிக்கும் செலவுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. இவ்விமானங்களை 20 வருடகாலம் பராமரிப்பதற்கு அதாவது விமானியின் சம்பளம், விமானத்தின் எரிபொருள் உட்பட விமானங்களின் விலையுடன் $20 பில்லியன் டொலர் செலவாகும் என கணக்கிடப்பட்டது.


தொடர்ச்சி 02ஆம் பக்கம்






MORTGAGE

Best Rates wih Major Banks/Companies

Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099



Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com

- Residential/Commercial needs
- Purchase/Refinancing/Renewal/Switch
- Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
- Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident

Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு
Real Estate Broker



Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING

MARKVILLE TOYOTA





KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565

கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்

>குமார் ஜெகசோதி <
9 ஆண்டுகள் அனுபவம்

E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை

- 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை




மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

3228 Eglinton Ave. E. #3
416.267.8221

3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்

DENTAL OFFICE



Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON

- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

Allstate Insurance Company Of Canada
Allstate. You're in good hands.
Home & Auto Insurance
வீடு, வாகன காப்புறுதி

Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca
4525 Kingston Road
Unit H5 Scarborough, ON M1E 2P1

அனைவருக்கும் எனது நத்தார் தின நல்வாழ்த்துக்கள்
உங்களுக்கு விரும்பிய கனவு இல்லங்களையோ அல்லது வர்த்தக நிலையங்களையோ உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப அமைத்து தர என்னை அழையுங்கள்.
"வீடு என்பது ஒரு கட்டடம் அல்ல உங்கள் உறவுகளையும், நினைவுகளையும் சுமக்கும் அன்பு இதயம்"
Lourdson Antonipillai
Sales Representative
Direct: 416.738.8824
Bus: 905.201.9977
Fax: 905.201.9229
205 - 7 Eastvale Drive, Markham, ON, L3S 4N8

HomeLife/Future Realty Inc, Brokerage*
*Independently Owned and Operated

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# கனடாவின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பின்னர் அரச கணக்காளர் நாயகம் செய்த கணக்கு பரிசோதனையின் போது F-35 விமானங்களின் செலவினங்களை கணிக்க 42 வருடங்கள் பராமரிப்புக் காலமாக கணிக்கப்பட வேண்டும் என கூறியிருந்தார்.

அமெரிக்க அரசு F-35 போர்விமானங்கள் விற்பனைக்காக பெருமளவில் உற்பத்தி செய்யும்போது கனடிய நிறுவனங்களுக்கு உதிரிப்பாகங்கள் செய்ய $9.8 பில்லியன் டொலர் பெறுமதியான ஒப்பந்தங்கள் கொடுப்பதாக கூறியிருந்தது. இதனால் கனடா இவ் F-35 போர்விமானங்களை வாங்காமல் விட்டால் ஆய்வுகளுக்கு முதலிட்ட $168 மில்லியன் டொலர் உட்பட வருங்கால $9.8 பில்லியன் டொலர் பெறுமதியான உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யும் ஒப்பந்தங்களையும் இழக்கும் என CBC யில் வெளியான அறிக்கை ஒன்று சுட்டிக்காட்டுகிறது.



அதன்படி டிசம்பர் 12, 2012 இல் வெளியான செலவின கணிப்புகளின் படி F-35 போர்விமானங்கள் 65ஐ வாங்கி 42 வருடங்கள் பராமரிக்க $45.8 பில்லியன் டொலர் தேவை என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கனடிய அரசு F-35 போர்விமானங்களின் உற்பத்திக்கான ஆய்வுகளுக்கு $168 மில்லியன் டொலர்களை முதலிடும்போது

இந்த ஐந்தாவது Generation எனப்படும் F-35 போர்விமானங்கள் எவ்வாறு இயங்குகின்றன, அதன் அமைப்பு எப்படி எனப் பார்ப்போம். இப்போர்விமானங்களில்

விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜே பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201,*
*TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. ,*
   *5215 Finch Ave. E. #201,*
   *Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: vlambaram.com*

# கனடாவின்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி


25mm துப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவை ஆகாயத்தில் இருந்து ஆகாயத்தில் பறக்கும் விமானங்களை தாக்கக் கூடியன. ஆகாயத்தில் இருந்து நிலத்தில் உள்ள வாகனங்களையும் தாக்கக் கூடியன. இவ்விமானங்கள் பலவகையான குண்டுகளை தாங்கிச் செல்லவும், இலக்குகள் நோக்கி குண்டுகளைப் போடவும் வல்லன. இவ்விமானங்கள் மணிக்கு 2000 கி.மீ வேகத்தில் பறக்கக் கூடியன. இவ்விமானங்கள் மூன்று பிரிவாக (F-35A, F-35B, F-35C) உற்பத்தி செய்யப்படுகின்றன. F-35A விமானங்கள் ஏறுவதற்கும், இறங்குவதற்கும் மற்றைய போர்விமானங்களுக்கு தேவையான அளவு ஓடுபாதை தேவை. F-35B விமானங்கள் நீளம் குறைந்த ஓடுபாதையில் ஏறவும், நேராக இறங்கவும் வல்லன. F-35C விமானங்கள், விமானம் தாங்கிக் கப்பலில் இருந்து பறக்கவும், இறங்கவும் கூடியன. இப்போர்விமானங்கள் ஒரு இயந்திரத்தையும், ஒரு விமானி ஆசனத்தையும் மட்டுமே கொண்டுள்ளன. இவை றேடாரில் தென்படமாட்டாது. (Stealth Fighter)



கனடிய அரசாங்கம் F-35 போர் விமானங்களை வாங்காவிட்டால் வேறு எவ்வகையான போர்விமானங்களை வாங்கும்? F-35 போர்விமானங்களை உற்பத்தி செய்யும் Lockheed Martin நிறுவனத்திற்கு போட்டி நிறுவனமாக கருதப்படும் Boeing நிறுவனம் 'Silent Eagle' என்றும் 'Super Hornet' எனவும் போர்விமானங்களை செய்கின்றது. இவற்றை விட ஐரோப்பிய நிறுவனங்கள் 'Eurofighter Typhoon' எனவும் Dassault Ratale' எனவும் போர்விமானங்களை செய்கின்றன. இவற்றில் ஒன்றை கனடா F-35 போர்விமானங்களுக்குப் பதிலாக வாங்கலாம் என எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

# தொழில்சார் வேலையாட்களுக்கு குடிவரவு அனுமதி





கனடிய அரசின் புதிய தொழில்சார் வேலையாட்களுக்கான (Skilled Trades) குடிவரவு அனுமதி வழங்கும் திட்டத்தின்படி அடுத்த ஆண்டு 3000 பேருக்கு கனடாவில் குடியேற அனுமதி வழங்கப்பட இருக்கிறது.

இதற்குரிய தகைமைகளாக பின்வருவன தேவை.

1. கனடிய நிறுவனம் ஒன்றில் இருந்து வேலை தருவதற்கான கடிதம் அல்லது கனடிய மாகாண அரசின் தொழில் சார் வேலைக்கான (Trade Certificate) தராதரப்பத்திரம் பெறக்கக்கூடிய தகைமை.

2. ஆங்கில அல்லது பிரெஞ்சு மொழியின் தகைமை

3. அவரது தொழில்சார் பயிற்சியில் குறைந்தது 2 வருடங்கள் வேலை செய்ததற்கான அனுபவம்

4. அவரது தொழில்சார் வேலை மற்றும் அனுபவம் கனடிய National Occupational Clarification (NOC-B) பட்டியல் இடப்பெற்ற ஒன்றாக இருக்க வேண்டும். மேற்கூறியவாறு குடிசார், குடிவரவு, பல்கலாசார அமைச்சர் Jason Kenney டிசம்பர் 10, 2012 இல் தெரிவித்திருந்தார்.

# தமிழர்களுக்கு உதவ ஐ.நா தவறிவிட்டது. -ஜோர் ஆர்க்!

அடிப்படை மனித உரிமைகளை இழந்துள்ள இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவ ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டதென சர்வதேச மன்னிப்புச்சபையின் கனேடிய பிர-திநிதியான ஜோன் ஆர்க் அவர்கள் தெரிவித்துள்ளார். அனைத்துலக மனித உரிமைகள் நாளினை முன்னிட்டு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் கனடாவின் ஸ்காபுறோவில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் பொழுதே இக்கருத்தினை ஜோன் ஆர்க் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருந் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி விரக்தி அடைந்த நிலையில் உள்ள இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வினைக் காண ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் அவர்கள் விரைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை சிறிலங்கா அரசின் செயல் குறித்து சர்வதேச ரீதியில் பாரபட்சமற்ற முறையில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்த ஜோன் ஆர்க் இலங்கையில் அமைதியை ஏற்படுத்தி தமிழ் மக்களையும் பாரபட்சமின்றி நடத்துமாறும் தமது அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தி வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

நா.க.தமிழீழ அரசாங்கத்தின் துணை அமைச்சர் வின் மாகாலிங்கம் அவர்களது தலைமையில் இடம்பெற்றிருந்த இக்கருத்தரங்கில் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்களது கருத்துக்கள் காணொளிவழி இணைக்கப்பட்டிருந்தது. அவைத் தலைவர் பொன் பாலராஜன், வண பிதா சந்திரகாந்தன், ஈழவேந்தன், படைப்பாளிகள் கழகத் தலைவர் நக்கீரன், தமிழர் பேரவைப் பிரதிநிதி பூபாலபிள்ளை ஆகியோர் தங்கள் கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6




happy meal
Renovation Celebration
Celebrate our new exterior look with this special offer* at your McDonald's® restaurants located at Port Union Rd. at Kingston Rd. and Markham Rd. at Progress Ave., Scarborough.
Any Happy Meal®...
just $4.29
plus tax
Happy Meal includes a toy and your choice of:
▪ Hamburger, Cheeseburger or 4 pack McNuggets®
▪ Apple slices or small fries
▪ Child's size fountain beverage, juice, milk or chocolate milk
*Offer valid until Jan. 6, 2013.
©2012 McDonald's
i'm lovin' it

# மோட்கேஜ்-கிளினிக்

வோக்-இன் **சனிக்கிழமை** தோறும் 9.00am -5.00 pm வரை

கிறிஸ்மஸ்க்கு கிரெடிட் காடில gift வாங்கிப்போட்டு அந்த கடனையும் மோட்கேஜுடன் சேர்க்கலாமா? ? ? ?

தற்பொழுது நீங்கள் வைத்திருக்கும் மோட்கேஜ் செக்கன்ட் மோட்கேஜ் , லைன் ஒவ் கிரடிட் எல்லாத்தையும் ஒரு பேமன்ராக மாத்தலாமா ? ?

கொன்சுயுமார் புரபோசலுக்கு கட்ட வேண்டிய காசை வீட்டுக்குளிருந்து எடுத்து கட்டலாமா ?

நல்ல றேட்டில மோட்கேஜ் இருக்கு ஆனால் பிரேக் பண்ணாமல் கொஞ்ச காசு எடுக்கலாமா ?

புதுச்சட்டம் புதுச்சட்டம் எண்டு வீட்டுக்குள்ள இருக்கிற காச எடுக்க ஏலாது எண்டும் சொல்லுகினம் .. அதுக்கு வேற ஏதாவது வழி இருக்கா ??



அழையுங்கள்

**416-644-3555**

**CENTUM Rapid Mortgages Inc.**
FSCO LIC # 10156
Office: T.P: 416-644-3555 Fax: 888-644-3556
211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Mortgage Development Manager & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. 416-259-2002 **"Rapid Response; Rapid Results"**

# விளையாட்டுத் தகவல்கள்

**342**

## இந்திய அரசியலும், கிரிக்கெட்டும் ஒன்று தான்!!!

முதல் இடத்தில் இருக்கும் தெண்டுல்கரை தொட இன்னும் 7 சதம் தேவை.!!! ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் தென் ஆபிரிக்க வீரர் காலிஸ் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். 156-வது டெஸ்டில் விளையாடும் அவருக்கு இது 44-வது செஞ்சூரி ஆகும். தெண்டுல்கர் 190 டெஸ்டில் விளையாடி 51 சதம் அடித்து முதல் இடத்தில் உள்ளார். டெஸ்டில் அதிக சதம் அடித்த 'டாப் 6' வீரர்கள் வருமாறு:-

தெண்டுல்கர் (இந்தியா) - 51 சதம் (190 டெஸ்ட்)

காலிஸ் (தென்ஆபிரிக்கா) - 44 சதம் (156 டெஸ்ட்)

பாண்டிங் (ஆஸ்திரேலியா) - 41 சதம் (166 டெஸ்ட்)

டிராவிட் (இந்தியா) - 36 சதம் (164 டெஸ்ட்)

கவாஸ்கர் (இந்தியா) - 34 சதம் (125 டெஸ்ட்)

லாரா (வெஸ்ட்இண்டீஸ்) - 34 சதம் (131 டெஸ்ட்).

## சொந்தமண்ணில் இந்திய அணியின் தோல்வி

கொல்கத்தா டெஸ்டில் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் "சரணடைந்த" இந்திய வீரர்களை கடுமையாக விமர்சித்துள்ளார் டிராவிட்.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதும் டெஸ்ட் தொடர் நடக்கிறது. முதல் மூன்று டெஸ்ட் போட்டிகள் முடிவில், இந்திய அணி 1-2 என, பின்தங்கியுள்ளது. சொந்தமண்ணில் இந்திய அணியின் தோல்வி குறித்து இந்திய அணி முன்னாள் வீரர் டிராவிட் கூறியது: மும்பை டெஸ்டில் வீழ்ந்த இந்திய அணி, கொல்கத்தாவில் எதிர்ப்பு இன்றி சரணடைந்தது. வீரர்களின் திறமை குறித்து மக்கள் கேள்வி எழுப்ப துவங்கியுள்ளனர். அவர்களுக்கு இதெல்லாம் குறித்து கவலையில்லை. ஐ.பி.எல்., தொடர் மூலம் அதிகளவு வருமானம் கிடைக்கிறது என பேசத் துவங்கி விட்டனர். உண்மையில் வீரர்களிடம் திறமை ஆற்றல் இல்லை. இங்கிலாந்து அணியின் அகாடமி அணிகள், ஒவ்வொரு குளிர் காலத்திலும், பல நாடுகளுக்கு சென்று விளையாடுகின்றனர். இதுதான் அந்த அணியின் வெற்றிக்கு காரணம்.

### எதிர்ப்பு இல்லை:

இந்திய அணியின் சமீபத்திய தோல்வி பலரையும் வெறுப்படையச் செய்துள்ளது. தோற்ற விதம் அப்படி. மூன்று டெஸ்ட் போட்டியிலும் இந்தியா தான் "டொஸ்" வென்றது. மும்பை, இந்திய வீரர்களுக்கு சாதகமாக இருந்தது. கொல்கத்தா பேட்டிங்கிற்கு உதவியது. அப்படி இருந்தும் இந்திய வீரர்கள் சிறிதளவு கூட போராடவில்லை.

ஏமாற்றிய 'சுழல்': பலம், சுழற் பந்து வீச்சு தான். அஷ்வின், பிரக்யான் ஓஜா இணைந்து எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முடியவில்லை. பீல்டிங்கிலும் இந்திய அணி மோசமாக உள்ளது. வீரர்களின் உடற்தகுதி ஏமாற்றம் தரும் வகையில் உள்ளது. சச்சின், கங்குலி, கும்ளே, சேவக் இணைந்திருந்த போது, பல்வேறு வெற்றிகளை பெற்றது. கங்குலி, கும்ளே ஓய்வுக்குப் பின், இது போன்ற வீரர்கள் கொண்ட அணியாக மாற்றும் முயற்சி இப்போது நடக்கிறது 'டெஸ்ட் கேப்டன் பொறுப்பில் இருந்து தோனியை நீக்க முயற்சிகள் நடந்தது உண்மை தான்,'' என, இந்திய அணியின் முன்னாள் வீரர் மொகிந்தர் அமர்நாத் தெரிவித்தார். இந்திய அணியின் வெற்றிக் கேப்டனாக விளங்குபவர் தோனி, 31. இவரது தலைமையில் இந்திய அணி 'டுவெண்டி-20' உலக கோப்பை (2007), 50 ஓவர் உலக கோப்பை (2012) மற்றும் டெஸ்ட் அரங்கில் 'நம்பர்-1' இடம் என வெற்றி மேல் வெற்றிகளை குவித்தது. கடந்த ஆண்டு இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகளுக்கு எதிராக தொடர்ந்து 8 டெஸ்டில் இந்திய அணி தோற்றது. இதையடுத்து அணியின் கேப்டன் தோனியை நீக்க வேண்டும் என, அப்போதைய தேர்வுக்குழுவில் உறுப்பினராக இருந்த, அமர்நாத் தெரிவித்தார். தேர்வுக் குழுத் தலைவராக வர வாய்ப்பிருந்த நிலையில், தோனியை எதிர்த்தார் என்பதற்காக, கடைசியில் குழுவில் இருந்து நீக்கப்பட்டார். தற்போது, சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியிலும் தோல்விகளை சந்திக்கிறது.




இதனிடையே, தோனி குறித்து அமர்நாத் கூறியது: இந்திய அரசியலும், கிரிக்கெட்டும் ஒன்று தான். ஒரு சிலர் போட்டியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பர். இதனால், மற்றவர்கள் பொறுப்புக்கு வர பயப்படுவர். தொடர்ச்சியான தோல்வியால் கேப்டன் பதவியில் இருந்து தோனியை நீக்க, அப்போது முயற்சிகள் நடந்தது உண்மைதான். இதற்கு தேர்வுக்குழுவினர் ஆதரவு தெரிவித்தனர். கடைசியில் சில உள் விவகாரத்தால், அது முடியாமல் போனது. இந்த காரணங்களை இப்போது வெளியில் கூற விரும்பவில்லை. ஆனால், சரியான நேரம் வரும் போது, இந்த நாட்டு மக்களுக்கு அதை வெளிப்படுத்துவேன். மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் தோனி, கேப்டன் பொறுப்பில் இருந்து நீக்கப்படுவார் என நம்புகிறேன். இரண்டு உலக கோப்பை பெற்றுத் தந்ததை விட, டெஸ்ட் போட்டிகளில் என்ன செய்தார். கேப்டனாக இருப்பதால் தான், அணியில் இவருக்கு இடம் கிடைக்கிறது. இவரை அணியில் இருந்து நீக்க, தேர்வுக் குழுவினருக்கு துணிச்சல் இல்லை. தோனியால் தான், திறமையான விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன்களுக்கு, வாய்ப்பு கிடைக்கவில்லை. நான் தோனிக்கு எதிரானவன் அல்ல. இந்திய அணியின் செயல்பாடு திருப்தி அளிக்கவில்லை என்பதால், மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என விரும்புகிறேன். இரண்டு கேப்டன்: டெஸ்ட், ஒருநாள் போட்டிகளுக்கு தனி கேப்டன்களை நியமிப்பது நல்லது. ஒருநாள் மற்றும் "டுவெண்டி-20" போட்டிகளுக்கு விராத் கோஹ்லி, டெஸ்ட் போட்டிக்கு கவுதம் காம்பிரை கேப்டனாக நியமிக்கலாம். சோபிக்காத வீரர்களை நீக்கிவிட்டு, திறமையான இளம் வீரர்களை சேர்க்க வேண்டும்.

தகுதியற்ற வீரர்கள்: தற்போது அணியில் உள்ள சில வீரர்கள் உடற்தகுதி இல்லாமல் உள்ளனர். மாற்று வீரர் இல்லாததால், தொடர்ந்து போட்டியில் விளையாடுகின்றனர். "பார்ம்", உடற்தகுதி இல்லாத வீரர்கள் தாமாகவே முன்வந்து ஓய்வு எடுக்க வேண்டும். உள்ளூர் போட்டிகளில் திறமையை நிரூபித்து மீண்டும் அணியில் இடம் பிடிக்க வேண்டும். இளம் வீரர்கள் திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கும். மீண்டும் இடம்: அடுத்த ஆண்டு பாகிஸ்தான், ஆஸ்திரேலியா போன்ற முன்னணி அணிகளுக்கு எதிராக விளையாட உள்ளோம். ஹர்பஜன் சிங், யுவராஜ் சிங், ஜாகிர் கான் உள்ளிட்ட அனுபவ வீரர்கள் திறமையை நிருபித்து, மீண்டும் அணியில் இடம் பிடிக்க வேண்டும். சச்சின் சிறந்த வீரர். இவர், நீண்ட நாட்களாக விளையாடி வருகிறார். தற்போது "பார்மின்றி" தவிக்கும் இவரால், சிறப்பாக செயல்பட முடியவில்லை. விரைவில், "பார்மை" மீட்பார் என நம்புகிறேன். இவ்வாறு அமர்நாத் கூறினார்.

கோல்ப்: கோல்ப் ரேங்கிங் பட்டியலில் 5 ஆண்டுகளுக்குப் பின் "நம்பர்-1" இடத்தை இழந்தார் அமெரிக்காவின் டைகர் உட்ஸ். சர்வதேச கோல்ப் கூட்டமைப்பு, புதிய ரேங்கிங் பட்டியலை வெளியிட்டது. இதில், அமெரிக்காவின் டைகர் உட்ஸ் (8.13 புள்ளிகள்), 2 வது இடத்துக்கு தள்ளப்பட்டார். இவரை ஒரு சில புள்ளிகளில், பின்னுக்குத் தள்ளிய இங்கிலாந்தின் லீ வெஸ்ட் உட் (8.29 புள்ளிகள்) முதலிடத்தை கைப்பற்றினார். இதன் மூலம் 5 ஆண்டுகளாக "நம்பர்-1" இடத்தில் நீடித்து வந்த டைகர் உட்சின் சாதனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

16 ஆண்டுக்குப் பின்: ரேங்கிங் பட்டியலில் முதலிடத்தை கைப்பற்றிய வெஸ்ட் உட், 16 ஆண்டுகளுக்குப் பின் இப்பெருமை பெற்ற முதல் ஐரோப்பிய வீரர் என்ற பெருமை பெற்றார். இதற்கு முன், கடந்த 1994 ம் ஆண்டு இங்கிலாந்தின் நிக் பால்டோ முதலிடத்தை கைப்பற்றியிருந்தார்.

**எஸ். கணேஷ்**



## அமைதியை...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்நிலை அமைதி என்பது ஒரு வகை இரசாயனம். ஒரு மனிதர் மனத்தளவில் பதட்டமாகிறார் என்றால் அவருக்கு சில மருந்துகளைக் கொடுக்கிறார்கள். அதாவது மருந்தின் வழியாக ஒருவித இரசாயனம் அவருக்குள் செலுத்தப்படுகிறது. மகிழ்ச்சி, சோகம், பதட்டம், ஏக்கம் எல்லாமே ஒருவகையான இரசாயனம் தான். ஒரு மனிதன் தனக்குள் சரியான இரசாயனத் தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் அதற்கென்று ஒரு நாளில் சில நிமிடங்களை ஒதுக்கினால் போதும். அமைதியும் ஆனந்தமும் உங்களுக்குள் இயல்பாகவே தோன்றும். தனி மனிதர்கள் அமைதியானவர்களாக உருவாகாத வரையில் கலாச்சாரத்தில் அமைதி இருக்காது. உலகத்தில் அமைதி இருக்காது. தங்களை மாற்றிக் கொள்ள தனி மனிதர்கள் தயாராகிறபோது அவர்கள் தொடர்புகொள்கிற வெளியுலகிலும் அதே அமைதியை உருவாக்க முடிகிறது.

யோகாப் பயிற்சியின் மூலம் உலக நாடுகளில் யுத்தங்களைத் தடுத்து அமைதியை ஏற்படுத்த முடியுமா என்று சிலர் கருதலாம். இந்த உலகின் வலிமை மிகுந்த நாடுகளையெல்லாம் தலைமை தாங்கி வழிநடத்துபவர்கள் தனி மனிதர்கள் தானே தவிர பிசாசுகள் அல்ல. தங்கள் மனிதத் தன்மையோடு தங்களை அடையாளப் படுத்திக் கொள்ளாமல் தங்கள் சமூகத்துடனோ, சமயத்துடனோ, தேசத்துடனோ சிலர் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறனர். அவர்கள் தங்கள் மனிதத் தன்மையோடு அடையாளப்படுத்திக் கொள்ள வாய்ப்பளித்ததால் எந்தச் சிக்கலையும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். உள்நிலையில் அமைதியில்லாதபோது எல்லாச் சின்ன விடயங்களும் பிரம்மாண்ட மோதல்களாக ஊதிப் பெரிதாக்கப்படுகிறது.

இந்த உலகில் பொறுப்புள்ள இடங்களில் இருப்பவர்களை அமைதி நிறைந்த மனிதர்களாக மலரச் செய்தால் ஒரு கலாச்சாரமாக உருவாக்குவது காலப் போக்கில் சாத்தியம் ஆகும்.

# மாறுகின்ற VS மாறாத அடமானக்கடன்

## *Variable mortgage Vs closed mortgage*

அண்மைக்கால நினைவில், குறைந்த அடமானக்கடன் வட்டி வீதத்தை கொண்ட சூழ்நிலை காணப்படுகின்றது. இந்நிலைப்பாடு குறிப்பிட்ட காலமாக நிலைத்துள்ளது. சிலசில சந்தர்ப்பங்களில் மத்திய நிதி அமைச்சரும், மத்திய வங்கி ஆளுனரும் வட்டிவீதத்தைப்பற்றி சில வார்த்தைகளை உச்சரித்த போதிலும் நிலைமை மாறாது உள்ளது. இந்நிலைமை குறைந்தது அடுத்த வருடம் முழுக்க தொடரலாம் எனத்தான் அண்மையில் வெளிவந்து கொண்டு இருக்க பொருளாதார செய்திகள் வெளிப்படுத்துகின்றது. ஆனால் எதுவும் நடக்கலாம்.

கடந்த சில வருடங்களிற்கு முன்பு மாறாத அடமானக்கடனை (Closed Mortgage) ஐ விட மாறுகின்ற அடமானக்கடன் (Variable Mortgage) மிகவும் விரும்பத்தக்கதாக காணப்பட்டது. இதற்கு நிதி நிறுவனங்களின் தாராளமான கழிவுகள் (Discount) காரணமாக இருந்து முதன்மை வட்டி வீதத்திலிருந்து (Prime Rate) 0.85 வரையான இறக்கம் கழிவு கொடுக்கப்பட்டது. இடைக்காலத்தில் இந்நிலைமை முதன்மை வட்டிவீதம் + 0.80 என்ற நிலைமை ஏற்பட்டது. இப்பொழுது சில குறிப்பிட்ட நிதிநிறுவனங்கள் மட்டுமே முதன்மைவட்டிவீதம் - 0.20 என்ற வட்டி வீதத்தைக் கொடுக்கின்றது. இதே நேரத்தில் 5வருட மாறாதவட்டிவீத (Closed Mortgage) கடன் 2.99% இறக்கும் 3வருட கடன் 2.79% இற்கும் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் 2012 ஆம் ஆண்டில் அனேகமான ஆதன வாங்குனர்கள் மாறாத வட்டிவீதத்திற்கான அடமானக்கடனை பெறுகின்றார்கள். இருந்த போதிலும் மாறுகின்ற கடனா அல்லது மாறாத அடமானக்கடன் வட்டிவீதமா சிறந்தது என்பது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட நிதி நிலைமையைப் பொறுத்தே முடிவு எடுப்பது சிறந்ததாகலாம். அண்மையில் The Globe and Mail இன் தகவலின்படி, Fixed Rate மற்றும் Variable Rate பெற்றவர்களில் Fixed Rate அடமானக்கடன் பெற்றவர்களே அதிகமாகக் காணப்படுகின்றது. Fixed Rate 65% ஆனவர்களும் Variable Rate 28% ஆனவர்களும் Combination (Fiexd rate + Variable rate) 7% ஆனவர்கள் இரண்டும் சேர்ந்த அடமானக் கடனையும் பெற்றுள்ளார்கள்.

**VARIABLE vs. FIXED RATE MORTGAGES IN 2012**

*How preferences break down for various age groups:*

FIXED-RATE

| 18-34 | 35-54 | 55 + | TOTAL |
|---|---|---|---|
| 70% | 63% | 64% | 65% |

VARIABLE OR ADJUSTABLE-RATE

| 18-34 | 35-54 | 55 + | TOTAL |
|---|---|---|---|
| 22% | 30% | 30% | 28% |

COMBINATION

| 18-34 | 35-54 | 55 + | TOTAL |
|---|---|---|---|
| 8% | 7% | 6% | 7% |

THE GLOBE AND MAIL » SOURCE: MARITZ SURVEY FOR CAAMP

# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 380

முன்னைய தகவல்களுடன் ஒப்பிடும்போது மாறாத கடன் (Fixed rate) பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதனை அண்மைக் காலத்தில் காணக்கூடியதாக உள்ளது.

**குறிப்பு** - செவ்வாய்கிழமை டிசம்பர் 04, 2012 இல் கூடிய மத்தியவங்கி ஆளுனர்கள் கனடிய வட்டிவீதத்தை மாறாமல் 1% என்ற எண்ணிக்கையிலேயே வைத்துள்ளார்கள். செப்ரெம்பர் 08, 2010 ஆம்திகதியிலிருந்து கடந்த 28 மாதங்களாக வட்டிவீதம் மாறாமல் 1% ஆகவே காணப்படுகின்றது. இன்றைய முதன்மை வட்டிவீதம் 3% ஆகவே உள்ளது.

(மத்திய வங்கியின் வட்டிவீத் +2% = முதன்மை வட்டிவீதம் + 2% = முதன்மை வட்டி வீதம்)


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

HOMELIFE Higher Standards

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

*Raja Mahendran,* P.Eng.
Broker / Owner



5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969 & Traders Blvd #29, Mississauga - Tel.:905.712.2666

அனைவருக்கும் இதயம் கனிந்த நத்தார் தின நல்வாழ்த்துக்கள்



**NEILSON & FINCH**

*Semi Detached house for sale.*



*Just listed. Recently renovated. 2 Story finished bsmt. Kitchen + washroom. (2 Kitchen, 3 washrooms). Possible entrance to bsmt. 1 attached garage parking + 1 out side parking. Central air.*

**CONDO. FOR. SALE**
**KENNEDY & HWY 401**

*1+ Den condo. 3 Years new. 1 Parking. Close to HWY 401, mall. Asking Price $269,900.*

# மதுபோதையில் வாகனம் ஓட்டினால் என்ன நடக்கும்?

## கனடிய தகவல் தொடர் 186

தற்போது கிறிமஸ் காலம்! மது அருந்துவதனை தனிநபர் வாழ்வில் தடுக்க கனடாவில் எதுவித சட்டங்களும் இல்லை. அது சகலரும் அறிந்த விடயம். அது அவரவர் சுதந்திரம். ஆனால் மதுபோதையில் கொஞ்சமாகத்தான் அருந்தியுள்ளேன் என எண்ணிக்கொண்டு வாகனம் செலுத்தினால் என்ன நடக்கும்? கொஞ்சமாக மது அருந்தியுள்ளோம் எனத்தான் நினைப்போம். ஆனால் பொலிசாரின் அளவு மீற்றரில் ஒருவர் மது அருந்திய நிலைமைக்கு ஏற்ப காட்டிவிடும். ஏனெனில் இதனால் ஏற்படும் விபத்துக்களும் மரணங்களும் ஏராளம். இதனை அறியவில்லையானால் அறிந்து கொள்ள வேண்டிய கிறிஸ்மஸ் கால தகவல் தொடர்.

**மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபட்டால் முதல்கட்டம் என்ன நடக்கும்?**

கௌரவமாக வீதியில் வைத்து கைவிலங்கு பூட்டி பொலீஸ் நிலையத்திற்கு அழைத்து செல்வார்கள். படங்கள் பல கோணங்களில் மதுபோதையில் வாகனம் ஓட்டியவரை பிடித்துக் கொள்வார்கள். கைவிரல் அடையாளங்கள் எடுத்துக் கொள்வார்கள். ஊதும் பரிசோதனை செய்து (Breathalyzer Test) எந்த அளவுக்கு மதுபானத்தின் அளவு உடலில் உள்ளது என்பது துல்லியமாக மதிப்பிட்டு கொள்வார்கள். அதாவது நீதிமன்றத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்தியிருந்தார் என்ற குற்றசாட்டினை நிரூபிக்க வேண்டிய சகல தகவல்களையும் தயார் செய்து கொள்வார்கள்.

மதுபோதை முறியும்வரை ஆறுதலாக பொலீஸ் நிலைய சிறைசாலை கம்பியினுள் உறங்க வைப்பார்கள். மதுபோதை முறிந்தவுடன் நீதிமன்றத்திற்கு சமூகம் அளிக்கும் திகதி நிர்ணயம் செய்து, சமூகம் அளிக்க வேண்டிய பத்திரங்கள் யாவற்றிலும் கையொப்பங்கள் வாங்கிவிட்டு வெளியே போக விடுவார்கள்.

வெளியே போகவிடும்போது சாரதி அனுமதிப்பத்திரம் மூன்று மாதங்களுக்கு பறிமுதல் செய்யப்படும். (ADL Suspension - Administrative Drivers License Suspension) கைவிலங்கு பூட்டி அழைத்துக் கொண்டு போகும் போது வீதியில் அநாதரவாக விடப்படும் தங்கள் வாகனத்தினை கட்டி இழுத்து கொண்டு போய்விடுவார்கள். பின்னர் மறுநாள் கட்டி இழுத்து போன செலவுகள் (Towing Charge), வாகனத்தினை பாதுகாப்பாக வைத்திருந்த செலவுகள் (Vehicle Storage Charge) என ஒரு தொகையினை செலுத்தி வாகனத்தினை திரும்பப் பெறவேண்டும்.

**இரண்டாவது கட்டத்தில் என்ன செய்ய வேண்டிவரும்?**

பொலீஸ் நிலையத்தில் கைச்சாத்திட்ட மாதிரி நீதிமன்றத்திற்கு குறிப்பிட்ட ஒவ்வொரு தவணைகளிலும் ஏறி இறங்க வேண்டும். இவ்வாறு சமூகம் அளிக்கத் தவறினால் கைது ஆணை (Arrest Warrant) பிறப்பிக்கப்பட்டு பொலீஸ் தேடி வந்து கைது செய்யும் நிலைமையினை உருவாக்கி ‘நீதிமன்றத்தினை அவமதித்தது’ (Condemn to the Court) என்ற இன்னொரு குற்றச்சாட்டுக்குள் அகப்பட வேண்டிவரும்.




தொடர்ந்து வழக்கிற்காக அலைவதும் அத்துடன் சேர்ந்து இந்த வழக்கில் ஆஜராவதற்கு கிரிமினல் வக்கீல் ஒருவரை ஒழுங்கு செய்தே ஆகவேண்டும். அதற்கு ஒரு செலவு $4000 - $5000 டொலர்வரை மொத்தமாக உருவாகலாம்.

**மூன்று மாதத்திற்கு என தற்காலிகமாக பறிமுதல் செய்யப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரத்தினை திரும்ப எப்படி பெறுவது?**

மூன்று மாதகாலம் முடிவடைந்ததும் மாகாண போக்குவரத்து அமைச்சின் அலுவலகம் போய் மீண்டும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற மனு (License Reinstatement Application) வழங்கி விசாரணையின் தீர்ப்பு நாளில் திரும்ப ஒரு வருடத்திற்கு சாரதி அனுமதிபத்திரம் பறிமுதல் செய்யும் வரை தற்காலிகமாக பெறலாம். அதாவது மீண்டும் நீதிமன்றத் தீர்ப்புநாளில் பறிமுதல் ஆகும் வரை தற்காலிகமாக வாகனம் செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது எனலாம்.

மீண்டும் சாரதி அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள $150 டொலர் கட்டணம் செலுத்த வேண்டும்.

**தொடர்ந்து நீதிமன்றத்தில் கிரிமினல் பிரிவில் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் தீர்ப்பு என்னவாகும்?**

1. முதல்முறை பிடிபட்டவராக இருந்தால் $500 - $5000 டொலர் வரை ஒரு பணத்தண்டனை கிடைக்கும். இரண்டாம் முறை தொடர்ந்து, மூன்றாம் முறை என்றால் அதிகமான பணத்தண்டனையும், சிறைத் தண்டனையும் தீர்க்கப்படும்.
2. தற்காலிகமாக மூன்றுமாதம் பறிமுதல் செய்யப்பட்டு மீள வழங்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரம் மீண்டும் ஒரு வருடத்திற்கு பறிமுதலாகும். இக்குற்றசாட்டு இரண்டாம் முறை அல்லது தொடர்ந்து மூன்றாம் முறை என்றால் அதிக காலம் பறிமுதல் ஆகும்.
3. மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தினை உருவாக்கி அது இன்னொருவரின் உடல் காயத்திற்கு அல்லது மரணத்திற்கு காரணமாக அமைந்து விட்டால் அது மேலதிக இன்னொரு குற்றசாட்டு உருவாக்கப்பட்டு தீர்ப்பு என்பது அதிக ஆபத்தில் போய் முடியும்.

கொஞ்சம் அதிக காலம் சிறை செல்வது தவிர்க்க முடியாததாக இருக்கும். இப்படி அகப்பட்டு சிறையில் இருப்பவர்கள் கனடாவில் ஏராளம்.

**தடை செய்யப்பட்ட காலம் முடிவடைந்து மீண்டும் சாரதி அனுமதிபத்திரம் பெற வேண்டுமாயின் எப்படி அதற்குரிய அணுகுமுறைகளை எடுத்து செல்ல வேண்டும்?**

சாரதி அனுமதிபத்திரத்தினை மீள பெற்று மீண்டும் வாகனமோட்ட வேண்டும் என விரும்பினால் மாகாண அரசினால் நடத்தப்படும் கட்டாய பயிற்சி திட்டம் ஒன்றுக்கு (Mandatory Alcohol Education & Treatment Program) தங்கள் சொந்த செலவில் ($578 + வரிச்செலவு (GST) $178) பணம் கொடுத்து பதிவு செய்து இந்த பயிற்சி திட்டத்திற்கு போய் மது அருந்துவதும், மது அருந்திவிட்டு வாகனமோட்டுவதில் உள்ள ஆபத்துகளை புரிந்துவிட்டேன் என்ற சான்றிதழ் பெற வேண்டும்.

இப்பயிற்சி நெறிதிட்டத்திற்கு போகவேண்டிய நிலையில் இருந்தால் அவர்களுக்கு உதவியாக இதோ இவை தொடர்பான விபரங்கள். சென்று பணம் செலுத்தி பயிற்சி திட்டத்தில் சேர்ந்து சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தால் கால தாமதம் இல்லாமல்



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

Sitham Sam Shanmugam (Sales Rep)
HomeLife/GTA Realty Inc.
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

MERVIS & HWY 401
2 Story detached home for sale. Very demand area.

Daisy Mart
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

LAND VALUE
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

Scarborough Big lot's Investment
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

GAS STATION
North of Barrie with property. Good income.
Store + Apartment

# மனநோய் குணமாக சிகிச்சை முறைகள்

மனிதனின் வாழ்க்கையைத் தடுமாற வைக்கும் நோய்களில் இதுவும் ஒன்று. சாதாரணமாக மனநோய்களின் சொல்லையும் செயலையும் பார்த்தால் நமக்கும் பரிதாபமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நோயை இயற்கை மருத்துவம், யோகா, தியானம் போன்ற பயிற்சிகளின் மூலம் முற்றாகக் குணப்படுத்த முடியும். இதற்கு வெறிநோய், பையித்திய நோய், பித்த நோய், கிறுக்கு நோய் என்ற பெயர்களும் உண்டு.

### இந்த நோய் வரக் காரணங்கள்

1. சுவையான உணவுகளை அளவு கடந்து உண்ணல்
2. பல நாட்களாக பட்டினி கிடத்தல்
3. போதைப் பொருட்கள், தூக்க மாத்திரைகள் அதிகமாக உட்கொள்ளுதல்
4, பணத்தின் மீதும், கைக்கு எட்டாத பொருட்கள் மீதும் அபார ஆசை
5. அடிக்கடி கோபம், கவலை, மிக்க மகிழ்ச்சி
6. குடும்ப சூழ்நிலை, தோல்வியை ஏற்க முடியாமை
7. அளவு கடந்த காம இச்சை

இது போன்ற காரணங்களால் உடல் நிலையும் மனநிலையும் பாதிக்கப்பட்டு இந்நோய் தோன்றலாம். அத்துடன் பரம்பரை மூளைக்கோளாறு, தீராத நோய்கள், பித்தம் அதிகமாகி உடற்கூறு சார்ந்து மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றம், மூளையில் கட்டி, சத்தற்ற உணவு, விற்றமின் (Vitamin) பற்றாக்குறை மண்டையில் அடிபடுதல் போன்றவற்றாலும் இந்த நோய் ஏற்படும்.

### இதன் வகைகள் 5

அவையாவன வாத மனநோய், பித்த மனநோய், சுப மனநோய், கலப்பு மனநோய், சோக மனநோய்

### வாத மனநோய்


உணவில் வெறுப்பு, வாத தோஷம் அதிகமாகி ஆடுதல், பாடுதல், அழுதல், சிரித்தல், வாயில் வந்ததை பேசுதல்

### பித்தமனநோய்

உடலில் பித்த தோஷம் அதிகரிப்பதால் உடலும் மனநிலையும் பாதிப்படையும். பல கொடுமைகளைச் செய்யத்தூண்டும். உடுத்த ஆடைகளை அவிழ்த்து எறிவர், கடிந்து பேசுவர், குளிர்ந்த இடம், நிழல் என்பவற்றை விரும்புவர், பழுதடைந்த உணவுகளையே விரும்பி உண்பர்.

### சுபமனநோய்

சுப தோஷமுடையவர்கள் எந்த நேரமும் சிந்திப்பர். புத்திகெட்டு அறிவுகெட்டு மனம் கலங்குதல் மறுபால் மனிதரிடம் (ஆண்-



பெண்) அதிகமாக ஆசைப்படுதல் ,வாயில் எச்சில் வடிதல், பேச்சு மாறாட்டம், கிறுக்கு குணங்கள் உடையவராக காணப்படுவர்.

### சோக மனநோய்

இது மூளையைப் பாதிக்கக்கூடிய விஷ உணவுகளை உண்பதால் அதிக இரசாயன மருந்துகளை உபயோகிப்பதன் பக்க விளைவுகளாலும் இந்த நோய் உருவாகும். அத்துடன் இதனால் ஐம்புலன்களின் செயல்பாடுகள் குறையும். உடல் களைப்படைதல் கண் சிவத்தல் போன்றவை குணங்களாகும். மேற்கூறியவை பலவும் கலந்து வந்தால் அது கலப்பு மன நோயாகும்.

நிவாரணம்

1. வெண்தாமரை பூவை கசாயம் செய்து 48 நாட்கள் குடித்துவர இந்நோய் குணமாகும்.
2. அகத்திக் கீரையை வாரத்திற்கு இருநாட்கள் சமைத்து சாப்பிட இந்நோய் தீரும்
3. வல்லாரைக் கீரையை அரைத்து பாலில் கலந்து உண்ண இந்நோய் குணமாகும்.
4. கடுக்காய் தோல், நெல்லிக்காய் தோல், தூள் கஸ்தூரி மஞ்சள், வெள்ளை மிளகு, வேப்பம் விதை இவற்றை சமஅளவு எடுத்து பசுவின் பால்விட்டு அரைத்து தலையில் தேய்த்து குளிக்க இந்நோய் குணமாகும்.
5. சிறிது மஞ்சள், சீரகம், கறிவேப்பிலை




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


## வீட்டில் மேலும் சுதந்திரமாக வாழலாம்.

**ஆரோக்கிய வீடாக மேம்படுத்துவதற்கான வரிச்சலுகை (Healthy Homes Renovation Tax Credit) இதற்குஉதவும்.**

65 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் கொண்ட முதியவர்களும் அவர்களுடன் வாழும் குடும்ப அங்கத்தினரும் தமது வீட்டை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் இலகுவாக உபயோகிப்பதற்குமான திருத்தவேலைகள் செய்து $1,500 வரையிலான பணத்தை வரிச்சலுகையாகப் பெறலாம். இது அவர்களுடைய வருமானத்தில் தங்கியிருக்கவில்லை. இவ்வரிச்சலுகையை பின்வரும் திருத்த வேலைகள் செய்வதன் மூலம் பெறலாம். பாதுகாப்பிற்கு பிடிக்க உதவும் கைத்தடி (support bars), படிகள் அற்றபாதை (ramps) அல்லது கதவு திறந்து நடந்து உள்ளே போக இடம்கொடுக்கும் குளியல் தொட்டிகள் (walk-in bathtubs). உங்கள் வரிச்சலுகையைப் பெற இவ்வாறான திருத்தங்களுக்கு செலவழித்த பற்றுச்சீட்டை வைத்திருந்து உங்கள் வருமானவரிப் பத்திரங்கள் பூர்த்திசெய்யவும்.



ontario.ca/healthyhomes • 1-866-668-8297 • TTY 1-800-263-7776

ஒன்ராரியோ அரசினால் இதற்குரிய கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# GTA Square இல் அமைந்துள்ள Heros Catering உணவகத்தின் ஆதரவில் வெளிவரும் கணிதம் சம்பந்தமான போட்டி

## செயல்முறை

01. கிடையான (Horizontal), நிலையான (Vertical) பெட்டிகள் ஒவ்வொன்றும் (1 - 4) வரையான இலக்கங்களால் நிரப்பப்படல் வேண்டும். ஒரு எண் ஒரு தடவை மட்டுமே பாவிக்க வேண்டும்.

02. தடிப்பான கறுப்பான கோடுகளாலான பெட்டிக்குள் இடதுபக்க மேல் மூலையில் காட்டப்படும் எண் மற்றும் செயல்பாடு (கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல்) எந்த ஒழுங்கிலாவது கணக்கிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் உள்ள இலக்கம் பெறப்படல் வேண்டும்.

03. தனியானபெட்டியில் வரவேண்டிய இலக்கம் தரப்பட்டுள்ளது.


**விடைகள் விளம்பர பப்ளிகேஷன்ஸ் இற்கு *December 12* இற்கு முன்பாக தொலை-நகல் *(Fax)*, அஞ்சல் *(Mail)* மின்னஞ்சல் *(E-mail)*** மூலம் **அனுப்பி வைக்க வேண்டும்.**

**சரியான விடையை எமக்கு அனுப்பியவர்களுள் ஒரு அதிஷ்ட சாலிக்கு $10 பெறுமதியான *Voucher* வழங்கப்படும். இந்த *Voucher* ஐ *Heros Catering* உணவகத்தில் பாவிக்கலாம். இதற்கு காசு பெறுமதி கிடையாது.**
(* Some conditions may apply)

• **போட்டி சம்பந்தமான விளக்கங்களுக்கு *(Any questions)*** 416.282.8059 **இல் தொடர்புகொள்ளவும்.**

போட்டி இலக்கம் 5இல் வெற்றிபெற்றோர் Lakshiga.K

### போட்டி இலக்கம் - 6




### விடை- போட்டி இலக்கம் - 5

| | | | |
|---|---|---|---|
| 4 | 1 | 2 | 3 |
| 1 | 2 | 3 | 4 |
| 2 | 3 | 4 | 1 |
| 3 | 4 | 1 | 2 |

***Instructions:*** 1. Each row and each column must contain the numbers 1 through 4 without repeating.
2. The numbers within the heavily outlined boxes, called cages, must combine using the given operation (in any order) to produce the target numbers in the top-left corners.
3. The number in the single-box cage is given.

# மதுபோதையில்...

**08ஆம் பக்கத்தொடர்ச்சி**

பெற்றுக்கொண்டிருப்பார்கள்.

ரொறொன்ரோவில் உள்ள இந்நிறுவன முகவரி
***CENTRE FOR ADDICTION AND MENTAL HEALTH***
***33, RUSSEL ST., ROOM - T316***
***TORONTO, ON M5J 2S1***
தொலைபேசி - 1.888.814.5831
இணையதளம் - www.remedial.net
மின்அஞ்சல் - back_on_track@camh.net

இப்பயிற்சி திட்டத்தினை ஆங்கிலத்தில் 'Back on Track Program' என அழைப்பதுண்டு. அதாவது 'திரும்பவும் வழிக்கு வருதல்' என தமிழில் மொழிப்படுத்தப்படலாம்.

ஒரு நாளில் இப்பயிற்சி முடிந்துவிடும். ஆறு மாதத்திற்குப் பின்னர் குடிபோதையில் வாகனம் செலுத்திய மனிதன் மாறிவிட்டானா? என்பதனை பரிசோதனை செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பார்கள். தோற்றியே ஆகவேண்டும்.

இப்பயிற்சி நெறிகள் நேர்முக பரீட்சைகள் யாவும் ஆங்கிலம், பிரெஞ்சு மொழியில் மட்டும் நடைபெறும். மொழி ஒரு தடையாக இருப்பவர்கள் தங்களுக்கு ஒரு மொழி பெயர்ப்பாளரை அழைத்து வருதல் வேண்டும்.

**"திரும்பவும் வழிக்கு வருதல்'** (Back on Track Program) **என்ற பயிற்சி நெறித்திட்டம் முடிந்த பின்பு சாரதி அனுமதிப்பத்திரம் திரும்பப் பெற என்ன செய்ய வேண்டும்?**
நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு காலம்வரை என குறிப்பிடப்பட்ட குறைந்தது ஒரு வருடம் முடிவடைந்த பின்பு இப்பயிற்சி நெறித்திட்டம் முடிந்த சான்றிதழ்களுடன் சாரதி அனுமதி பத்திரத்தினை மீளப்பெற முயற்சிக்கலாம்.

மீளப்பெற முயற்சிக்கும் போது நீதிமன்றத்தினால் தீர்க்கப்பட்ட தண்டனை பணமும் முழுவதுமாக செலுத்தியிருத்தல் வேண்டும். மீண்டும் ஆரம்பத்திலிருந்து வருவது போல் எழுத்துப்பரீட்சை (Written Test) வீதிப்பரீட்சைக்கு (Road Test) தோன்றி சித்தியடைதல் வேண்டும். ஆனால் ஒன்று! வாகனத்தில் சாரதியின் ஆசனத்தில் இருக்க வேண்டுமாயின் உடலில் மதுபோதையின் அளவினை மதிப்பிடும் கருவி (Ignition Interlock) வாகனத்தில் பொருத்துதல் வேண்டும்.




**மீண்டும் சாரதி அனுமதிபத்திரம் பெற்று வாகனம் செலுத்துபவர் வாகனத்தில் கட்டாயம் பொருத்த வேண்டும் என உள்ள கருவி** (Ignition Interlock) **என்றால் என்ன? எவ்வளவு செலவு உருவாகும்?**
முதல்முறை பிடிபட்டவர்கள் மீண்டும் வாகனம் செலுத்த வேண்டும் என விரும்பினால் ஒரு வருடத்திற்கேனும் இக்கருவி வாங்கி வாகனத்தினுள் பொருத்திவிடல் வேண்டும் என்பது நிபந்தனையாகும். உடலில் உள்ள மதுபோதையின் அளவு என்பது எவ்வளவு உள்ளது? மதுபோதையில் உள்ளவரை வாகனம் ஓட்ட அனுமதிக்கலாமா? என்பதை அளவிடும் கருவியாகும்.

வாகனம் ஓட்ட ஆரம்பிப்பவர் மது அருந்தியிருந்தால் இக்கருவியில் உள்ள ஊது குழலில் ஒருமுறை ஊதிப்பார்க்க வேண்டும். மதுவின் அளவு எல்லையினை தாண்டி விட்டால் வாகனத்தின் இயந்திரம் இயங்காது.

சாரதி அனுமதிபத்திரத்தினை மீளப் பெறும் வீதிப்பரீட்சைக்கு தோற்றும் போதும் இக்கருவி பொருத்திய வாகனத்தில் மட்டுமே இத்தகைய நிலையில் உள்ளவர்கள் வீதிப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும் என கனடாவின் சட்டங்கள் வலியுறுத்துகின்றன. இக்கருவி பொருத்திய வாகனமாக இல்லையேல் வீதிப்பரீட்சையிலும் தோற்றமுடியாது. இக்கருவி பொருத்தினால் மட்டுமே வாகனமோட்டுபவருக்கு தொடர்ந்து வாகன காப்புறுதியும் கிடைக்கும். வாகனமும் ஓட்டலாம். மாகாண போக்குவரத்து அமைச்சின் வாகனங்களின் பதிவிலும் இது பொருத்தப்பட்டுள்ளது என்பது இருக்கும். சாரதி அனுமதி பத்திரத்திலும் இருக்கும் பொலீசாரும் இலகுவாக அடையாளம் கண்டு கொள்ளலாம். இக்கருவி பொருத்தாமல் வாகனம் செலுத்தியது பிடிபட்டால் $200 - $1000 டொலர்வரை தண்டனை பணம் செலுத்த வேண்டிவரும்.

ஒரு வருடம் அல்லது குறிப்பிட்ட நிபந்தனைக் காலம் என முடிவடைந்த பின்பு இதனை வாகனத்திலிருந்து அகற்றலாம் என்ற ஒரு நிலைமை வந்தபின்பு வாகன பதிவு நிலையத்திற்கு (Motor Registration Division) அறிவித்துவிட்டே இக்கருவியினை வாகனத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

இக்கருவியினை வாகனத்தில் பொருத்திக் கொள்ள வேண்டிய நிலையில் ஏதாவது இருந்தால் அவர்கள் அழைக்கவேண்டியது

GUARDIAN INTERLOCK SYSTEM,
தொலைபேசி - 1.866.658.6374
இக்கருவியினை வாகனத்தில் பொருத்தி வைப்பதற்குரிய செலவு வருடம் ஒன்றுக்கு சுமார் $2,000 டொலர் வரை ஏற்படலாம்.

**இத்தவறு என்பது ஒரு கிரிமினல் குற்றமாக பதிவில் போகும்போது கனடாவில் தொடர்ந்து எத்தகைய பாதிப்பினை உருவாக்கும்?**
கனடாவில் பதிவில் இருக்கும் கிரிமினல் குற்றம் என்பது எதற்குகந்த இடங்களில் எப்படி? எப்படி நின்று

**தொடர்ச்சி 18ஆம் பக்கம்**

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
***Cell: 613 850 9931***

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



**நந்தா ஐயாத்துரை**

***Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555***

# அமைதியை கலாசாரம் ஆக்குங்கள்

உலகெங்கும் அமைதியை பற்றி பேச்சு நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. அமைதியை யாரும் உருவாக்க முடியாது. மோதல்கள் தான் மனிதர்களின் உருவாக்கம். மோதல்களை உருவாக்கா மல் விட்டாலே அமைதி தானாக நிகழும். உலகில் பலவகையான மோதல்கள் நிகழ்கின்றன. தனி மனிதன் தனக்குள்ளேயே சில மோதல்களை உணர்கிறான். அது வெளியிலும் நீள்கிறது. குடும்பத்தோடு பக்கத்து வீட்டோடு நிகழும் மோதல்களே சமூகங்களுக்கிடை யிலும் தேசங்களுக் கிடையிலும் மதங்களுக்கு நடுவிலும் கூட நிகழ்கிறது.

### அதிக மோதல்களுக்கு காரணம் மதங்களே

இந்த உலகுக்கு மோதல்கள் புதிதல்ல. மனித குலம் தோன்றிய காலம் தொட்டு மோதல்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. சண்டைகளை அவ்வப் போது சரி செய்யத்தான் பார்த்திருக்கிறார் களே தவிர நிரந்தரமான தீர்வுக்கு யாரும் முயற்சித்ததில்லை. சண்டை வருகிறபோது சமாதானம் ஏற்படுத்துகிறார்கள். சிறிது காலத்திற்கு பிறகு அது மீண்டும் வெடிக்கிறது. அமைதியின் உறைவிடங்க ளாய் கருதப்படும் மதங்களின் பேரிலேயே அதிக அளவு மோதல்கள் உலகெங்கும் ஏற்படுகின்றன.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

எனவே, அவ்வப்போது சண்டைகளை சரி செய்வது பற்றி மட்டும் சிந்திக்காமல் நிரந்தரமான தீர்வை நோக்கி நகர வேண்டும். அமைதியை ஒரு கலாச்சாரமாகவே உருவாக்க வேண்டும் என்று கருதினால் முதலில் ஒன்றைப்புரிந்து கொள்ளவேண்டும். ஒரே இரவில் கலாச்சாரத்தை உருவாக்கிவிட முடியாது. தீர்மானம் இயற்றுவதாலோ சட்டம் நிறைவேற்றுவதாலோ கலாச்சாரங்கள் உருவாவதில்லை. ஒரு முழு தலைமுறை அமைதியில் வாழுமேயானால் அடுத்த தலைமுறையில் அமைதி ஒரு கலாச்சார-மாக மலர வாய்ப்பிருக்கிறது. எனவே ஒரு சிக்கலுக்கு உடனடியாக எதையோ செய்ய வேண்டும் என்று யோசிப்பதை விட நிரந்தரத் தீர்வு என்ன என்று சிந்திப்பதே நல்லது.

### நஷ்டம் பிறகு பதட்டம் பிறகு மோதல்

மனிதர்களைப் பொறுத்தவரை எது நிகழ்ந்தாலும் அது ஒருவருக்கு ஆதாயம் தருவதாகவும் இன்னொருவருக்கு நஷ்டம் தருவதாகவும் தான் அமையும். காலங்கால மாகவே உலகெங்கும் இந்தக் கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. குடும்பங்கள் மத்தியில் என்றாலும் தேசங்களுக்கு மத்தியில் என்றாலும் நஷ்டம் ஏற்படுகிற போது கோபமும் பதட்டமும் ஏற்படுமே யானால் அங்கே அமைதி ஏற்பட வாய்ப்பில்லை. எல்லா மனிதர்களுக்குமே வாழ்வின் சில தருணங்களில் சில பாதகங்களும் அநீதிகளும் ஏற்படத்தான் செய்கின்றன. அப்போதெல்லாம் மனிதர் கள் பதட்டமடை கிறபோது மோதல்கள் எழுவது இயற்கை.

அமைதியான மனிதர்கள் உருவாகும்வரை அமைதியான உலகம் என்பது நிறைவேறாத கனவாகத்தான் இருக்கும். இன்று அமைதி குறித்துப் பேசுகிற உலக நாடுகள் கூட தங்களுக்கு சூழ்நிலை பாதகமாக இருந்தால் அமைதி குறித்துப் பேசுவார்கள். சூழ்நிலை சாதகமாக இருந்தால் போர் குறித்துப் பேசுவார்கள்.

### இல்லாததைப் பகிர்ந்து கொள்வோம்!

சோவியத் யூனியனில் கம்யூனிஸம் சிறந்து விளங்கியபோது அது குறித்து கேள்விப்பட்ட மார்க் ட்வெயின், அந்தக் கொள்கை பற்றி அறிந்து கொள்ள சோவியத் நாட்டிற்குச் சென்றார். இருப்பதை பகிர்ந்து உண்பது என்கிற கோட்பாடு அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. சோவியத் நாட்டின் கிராமப்புறத்து வீதி ஒன்றில் கைகளில் இரண்டு கோழிகளோடு சென்று கொண்டிருந்த ஒரு விவசாயி அவர் கண்களில் பட்டார். அவரிடம் சென்று, 'தோழரே! உங்களிடம் இரண்டு வீடுகள் இருந்தால் என்னிடம் ஒன்றைக் கொடுத்து விடுவீர்களல்லவா? என்றார் மார்க் ட்வெயின். அவர் ஆமோதித்தார். 'தோழரே! உங்களிடம் இரண்டு வாகனங்கள் இருந்தால் என்னிடம் கொடுத்து விடுவீர்களல்லவா?' என்றார். அந்த விவசாயி 'ஆம்' என்றார். மார்க் ட்வெயின் மிகவும் உற்சாகமாகி, அப்படியானால் உங்களிடமிருக்கிற இரண்டு கோழிகளில் ஒன்றை என்னிடம் கொடுத்து விடுவீர்கள் தானே' என்றதும், அந்த மனிதர் அதிர்ந்து போய் 'என்ன உளறுகிறீர்கள்! என்னிடம் இருப்பதே இரண்டே கோழிகள் என்றாராம்.




இந்தக்கதை, மனிதர்களின் மனஇயல்பைக் காட்டுகிறது. தங்களிடம் இல்லாததைப் பகிர்ந்து கொள்ள மனிதர்கள் தயாராக இருக்கிறார்களே தவிர இருப்பதைப் பகிர்ந்து கொள்ளமாட்டார்கள். அதுமட்டு மல்ல இல்லாதவர்கள்தான் சமரசம் பற்றியும் சமாதானம் பற்றியும் பேசுகிறார்கள். இருப்பவர்கள் தங்களுக்கு வேண்டியதை பெறுவதிலேயே குறியாய் இருக்கிறார்கள். இன்றைய உலகின் 90% வளங்கள் 5% மனிதர்களின் கைகளில் இருக்கின்றன. இப்படி இருக்கும்போது அமைதி என்பதே மிகவும் சிரமமான விடயம்.

### கோபத்தில் எடுக்கும் முடிவு அபத்தமாகவே இருக்கும்.

அமைதியை ஒரு கலாச்சாரமாக உருவாக்குவது என்று சொன்னால் நிகழ்கால உலகின் நிதர்சனங்களை வைத்து நாம் மதிப்பிட முடியாது. அடுத்து 50 அல்லது 100 ஆண்டுகளில் நிகழப் போவதைப் பற்றியே நாம் பேசுகிறோம். இது நிகழவேண்டுமானால் ஒரு மனிதன் அமைதி நிறைந்த உயிராய் ஆவது எப்படி என்று பார்க்க வேண்டும். இப்படிச் சொன்னால் மிக மெதுவாகவும் நிதானமாக வும் மனிதர்கள் இயங்க வேண்டும் என்று பொருளல்ல. இன்றைய இளைஞர்கள் இதனை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். செயல்படுவது என்றால் அதிரடியாக இயங்குவது, வன்முறையாக இயங்குவது என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குள் இருக்கும் திறமை வெளிப்படும் விதமாக செயல்பட வேண்டுமென்றால் முதலில் உங்களுக்குள் அமைதி இருப்பது அவசியம். நீங்கள் கோபமாக இருக்கிற போதுதான் மிக அபத்தமான முடிவுகளை எடுக்கிறீர்கள்.

கோபத்தின் போது உங்களுக்குள் என்ன உணர்கிறீர்கள்? அசௌகரியத்தைத்தான் உணர்கிறீர்கள். தனக்குத்தானே அசௌகரியத்தை ஏற்படுத்திக் கொள்ள கூடியவரை அறிவாளி என்றா அழைக்க முடியும். உள்தன்மையில் அமைதி நிலவினால் மிகக் கடுமையான சூழ்நிலை களைக் கூட உங்களால் திறம்படக் கையாள முடியும். உங்களுக்குள் அமைதியை ஏற்படுத்த முடியாதபோது உலகத்திற்குள் அமைதியை எப்படி உருவாக்க முடியும்.

சிறு குடும்பப்பிரச்சினை கூட



**சத்குரு வாசுதேவ்**

### உங்களை 20 வருடங்கள் கோபத்தில் வைத்திருக்கிறது

உலக அமைதி பற்றி பேசுபவர்கள் ஒரு விநாடி கூட தங்களுக்குள் அமைதியாக இருக்க முடிவதில்லை என்றால் அது மிகப்பெரிய வேடிக்கையாகத்தான் இருக்க முடியும். இன்னும் சிலபேர் ஒரு கேள்வி கேட்பதுண்டு. நம்மைச் சுற்றி அநீதியும் அநியாயங்களும் நடைபெறுகிறபோது அமைதியாய் இருப்பது எப்படி என்று கேட்பார்கள். உங்களைச் சுற்றி அநியாயங்கள் நடைபெறுகிறதுபோதுதான் இன்னும் அமைதியாய் இருக்க நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் பதட்டமான சூழலில் அமைதியிழப்பது சூழ்நிலையை மேலும் சீர்குலைக்குமே தவிர சரிசெய்யாது.

அப்படியானால் அமைதியாய் இருப்பது எப்படி? இதனை விஞ்ஞான பூர்வமாக பலரும் அணுகுவதே இல்லை. சூழ்நிலையை எப்படியாவது சமாளிக்கவே பலரும் நினைக்கிறார்கள். தங்களைச் சுற்றியிருக்கும் அனைத்தும் சரியாக இருந்தால் அமைதியாக இருக்க முடியும் என்று நினைக்கிறார்கள். நீங்கள் எவ்வளவு வல்லமை வாய்ந்தவராக இருந்தாலும் வெளிச்சூழல் என்பது முழுமையாக உங்கள் கையில் இல்லை. யார் மீதாவது எதற்காவது கோபப்பட எல்லோரிடமும் ஏதோ ஒரு காரணம் இருக்கிறது. நீங்கள் கோபப்பட வேண்டுமென்றால் அதற்கு பெரிய யுத்தம் நிகழவேண்டும் என்று அவசியமில்லை. உங்கள் குடும்பத்தில் நடக்கும் சிறுபிரச்சினை கூட இருபது வருடங்களுக்கு உங்களை கோபமாகவே வைத்திருக்கும்.

வெளிச்சூழ்நிலையால் உங்கள் அமைதியையும் அமைதியின்மையையும் தீர்மானிக்க முடியுமென்றால் நீங்கள் யாருக்கோ அடிமையாக இருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். எனவே உங்களுக்குள் என்ன நிகழ வேண்டு மென்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டுமென்றால் அதற்கொரு தொழில்நுட்பம் இருக்கிறது. இன்று நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன் வெளியே இருக்கிற உஷ்ணத்தைக் கூட்டவோ குறைக்கவோ உங்களால் முடியும். அதுபோல் உள்நிலையையும் உங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு வழிசெய்யும் தொழில்நுட்பம் தான் யோகா.

### தனிமனிதர் முதலில் அமைதியை தங்கள் இயல்பாக்கிக் கொள்ள வேண்டும்

தொடர்ச்சி 06ஆம் பக்கம்



# MIDTOWN Honda

**3400 Dufferin Street**
**Toronto, ON M6A 2V1**

**Across from Yorkdale Mall**

**www.midtownhondausedcars.com**

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

FREE **$500** Dealership Service Credit
WHEN YOU PURCHASE A USED VEHICLE
Promotion Ends on Dec 31st 2012
From Tony Siva

FREE **$650** Dealership Service Credit
WHEN YOU PURCHASE A NEW VEHICLE
Promotion Ends on Dec 31st 2012
From Tony Siva

## $1,000 Holiday CASH when you Finance or Lease 2012 CIVIC & CR-V

from Dec. 01st to Dec. 31st

## FOR NEW CARS Interest Rate Starting at 0.9%

**2012 Civic** LX AUTO — $0 down @ 1.99% — $138.97/bw — FINANCE FOR 84 MONTHS

**2012 CR-V** LX 2WD — $0 down @ 4.99% — $198.87/bw — FINANCE FOR 84 MONTHS

## NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

Interest Rate as Low as 1.99% up-to 6.39% ONLY!!!
Please come in.

# 2008 and up used cars

**Civic**
30 in stock
2008 and up @ 3.49% for 72 months
Biweekly payment Starting from
**$72.**

**Accord**
20 Left
2008 and up @ 3.49% for 72 months
Biweekly payment Starting from
**$113.**

**CR-V**
10 in stock
2008 and up @ 4.99% for 72 months
Biweekly payment Starting from
**$128.**

**Acura RDX**
Only 2 Left
2008 and up @ 5.99% for 60 months
Biweekly payment Starting from
**$188**

**Odyssey**
5 in stock
2008 and up @ 5.99% for 60 months
Biweekly payment Starting from
**$171.**

**Acura TL**
5 Left
2008 and up @ 5.99% for 60 months
Biweekly payment Starting from
**$176**

**Acura MDX**
4 in stock
2006 and up Starting from
**$15,999**

**USED CARS Interest Rate Starting at 1.49%**

Acura Honda Toyota

**MIDTOWN HONDA Used Car**

*Year End Clearance!*

**$0 down**

**DON'T MISS OUT!**

**HONDA certified used vehicles come with 6 Years or 120,000 km Warranty**



Please see me before you buy a used car, don't pay too much!

**Tony Siva**
ரோனி சிவஞானம்
**647-269-0749**
tonymidtown@hotmail.com

**120 USED VEHICLES IN STOCK Visit my website www.midtownhondausedcars.com**

# ஓடும் நீர் உறைவதில்லை 157

## என்ன வரம் வேண்டும்?

வரம் ஒன்று வேண்டும் என்றால்
என்ன வரம் கேட்பாய் குழந்தாய்?
மாணவனிடம் கேட்டேன்
வளமான கல்வி என்றான்

வரம் ஒன்று வேண்டும் என்றால்
என்ன வரம் கேட்பாய் தம்பி?
இளைஞனிடம் கேட்டேன்
அழகான மனைவியும்
ஒழுங்கான தொழிலும் என்றான்

வரம் ஒன்று வேண்டும் என்றால்
என்ன வரம் கேட்பாய் கண்ணே?



துணையிடம் கேட்டேன்
நாமும் குழந்தைகளும்
நான்கு பேர் முன்னிலையில்
நன்றாக வாழ வேண்டும் என்றார்

வரம் ஒன்று வேண்டும் என்றால்
என்ன வரம் கேட்பீர்கள் ஐயா?
வயோதிபரிடம் கேட்டேன்
வாழும் காலம் சிறிதானாலும்
வலுவான உடல் வேண்டும் என்றார்

எங்கிருந்தோ ஒரு குரல்....
வரம் ஒன்று வேண்டும் என்றால்
என்ன வரம் கேட்பாய் நீ? என்றது

கேள்வியை உருவாக்குவதே கேள்வியாதலால்
எதைக் கேட்பது? எத்தனையைக் கேட்பது?

அதனால் .....
"கேள்வியே இல்லாத வாழ்க்கை" என்றேன்
"உன்னிடமே அது உள்ளது உணர்ந்துகொள்"
என்றது அந்தக் குரல்

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

## மனிதக் கிளி

காட்டுக் கிளியைக்
கூண்டில் அடைத்து
கதவருகே வைத்திருந்தான்
என் நண்பன்

கதவைத் திறந்து
"வணக்கம்" என்றேன்
'வணக்கம்' என்றது கிளி
'வணக்கம்' என்றான் நண்பன்

"நலம் எப்படி?" என்றேன்
"நலம் எப்படி?" என்றது கிளி
"நலமாய் உள்ளேன்" என்றான் நண்பன்
"நலமாய் உள்ளேன்" என்றது கிளி



சிறிது நேரம் உரையாடிவிட்டு
"சென்று வரட்டுமா?" என்றேன்
சிறகுகளை விரித்தபடி
"சென்று வரட்டுமா?" என்றது கிளி

கிளி ......
குரல் மட்டும் சொந்தம்
வார்த்தைகள் அதன் சொந்தமல்ல
ஆனாலும்
சொல்வதைச் சொல்வதில்
சோர்வடைவதில்லை.

நடந்து சென்ற பாதையில்
திறந்த ஒரு மண்டபம்
திரண்டிருந்தது மக்கள் கூட்டம்
பொழிந்துகொண்டிருந்தது
வார்த்தை மழை

எட்டிப்பார்த்தேன்
மனப்பாடம் செய்த தத்துவங்களை
மழையாகக் கொட்டிக்கொண்டிருந்தது
ஒரு மனிதக் கிளி

மனிதக் கிளி.......
குரல் மட்டும் சொந்தம்
வார்த்தைகள் சொந்தமல்ல
ஆயுள் முழுவதுமானாலும்
சொன்னதைச் சொல்வதில்
சோர்வடைவதுமில்லை.

## என் பேரன் என் ஞானக் குரு

என் பேரன் அதீஷ்
இயற்கையின் முழுப் பிரதிபலிப்பு அவர்
இலை ஒன்று அசைந்தால் போதும்
இமயமாய் சிரிக்கின்றார்

அசைபவற்றில் முழு ஆனந்தம்
அசைப்பதிலும் பரமானந்தம்
அதிர்வு அவர் இன்ப மயக்கம்
அதிர்வு தானே பிரபஞ்ச இயக்கம்



பாடல் புரிவதில்லை தாளம் புரிகிறது
தாளம் தப்பாமல் ஆடல் புரிகின்றார்
தாளத்தில் தானே இயற்கை இணைகிறது
தாளத்தால் தானே இதயமும் வாழ்கிறது

நேற்றைய நினைவுகள் அவரிடம் இல்லை
நாளைய கனவுகள் எதுவுமே இல்லை
வாழும் இரகசியம் இது தான் என்று
வாழ்வால் தினமும் நினைவூட்டுகின்றார்

தன்னை அறிந்தவர் என் பேரன் அதனால்
தனது பெயர் அவருக்கு இன்னொரு பொருள்
"அதீஷ் சாப்பிடுது" "அதீஷ் துப்பீட்டுது"
"அதீஷ் குடிச்சுட்டுது" "அதீஷ் கொட்டிட்டுது"

"நான்" என்ற சொல்லு நாக்கைத் தொடாததால்
"நான்" என்ற அகந்தை பேரனிடம் இல்லை
"நான்" இன்றி வாழ்பவர் ஞானி ஆதலால்
அந்த ஞானி, என் பேரன், என் ஞானக் குரு.

**KG Master**-www.kgmaster.com
- www.facebook.com
- kgmaster.yourlifecoach


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

மஹராஜியின் உரைகள்

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் | Saturdays at 11:00 am |
| (416) 431-5000 | Rogers Cable Channel - 20 |
| 1 877 707 3221 | Bell Express vu Channel - 219 |



# சிறுநீரக நோய்க்குறிகள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

கடந்த இதழ் தொடர்ச்சி....

சில குழந்தைகள் அதாவது 10, 12 வயதினை உடையோர் படுக்கையில் உறங்கும் வேளை சலம் கழிவது தெரிவதில்லை. நாளடைவில் இக்குறைபாடு நல்ல நிலைக்கு வந்து விடும். இந்நிலையில் உள்ளோர் படுக்கச் செல்லும் முன் தண்ணீர் குடிக்க வேண்டும். இனிப்பு வகை பொருட்களைத் தவிர்த்து பூச்சிநிலை உடலில் இருந்தால் அதற்குரிய சிகிச்சை பெறவும் வேண்டும்.

இதில் பெற்றோர் முக்கியகவனம் செலுத்த வேண்டும். அதாவது சலம் கழிவதற்கு தங்கள் குழந்தைகளை எழுப்பி உரிய இடத்திற்கு சென்று சலம் கழிக்கச் செய்தல் வேண்டும். அப்படி நடந்தும் சலம் கழிப்பதற்கு தடையாக இருந்தால் வைத்தியரிடம் சென்று காட்டி சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். நற்பயன் பெறலாம்.

குழந்தையைப் பெற்றெடுத்த தாய்மார் சிலருக்கு இருமும் போதும் அல்லது தும்மும் போதும் சிறுநீர் துளிகள் வெளியேறுவதும் உண்டு. மற்றும் பாரமான பொருட்களை குனிந்து தூக்கும் போதும் இந்நிலை ஏற்படலாம். இந்நிலைகளை சாதாரணமாக கைக்கொள்ள வேண்டும்.

முதியோருக்கு பெரும்பாலும் ஆண்களுக்கு புறோஸ்ரேட் (Prostatic) பெருப்பதினாலும் அல்லது சிறுநீர்ப்பையில் அறுவை சிகிச்சை செய்திருந்தாலும் ஏற்பட இடம் உண்டு என அறியப்படுகின்றது.

சிலநோயாளர்களுக்கு சல ஒழுக்கு ஏற்படுவதுண்டு. சிகிச்சை பெறுவது முக்கியமாகும். பெரும்பாலும் பிறப்பில் சிறுநீரகப்பை, சிறுநீரகவடிகுழாய் குறைபாடு அதாவது சிறுநீர் வடிகுழாயில் துவாரம் காணப்படுதல் இது எப்பகுதியிலும் ஏற்படலாம். அடிவயிற்றில் காயம் ஏற்படுவதினால் சிறுநீரகப்பகுதியில் அழற்சி நிலை, நரம்பு மண்டலக்குறைபாடு, சிறுநீர்ப்பையில் கற்கள், புறோஸ்ரேட் (Prostatic) பகுதியில் புற்றுநோய் தோன்றி இருந்தால் அது சலப்பையை அழித்து விடலாம் எனவும் அறிய முடிகின்றது.

மேலும் இன்னும் சிலருக்கு சிறுநீர் சுரந்து சிறுநீர்ப்பையை அடைத்து வரமுடியாமல் தேங்கி நிற்கும் நிலை, தொழிற்சாலைகளில் தவறுதலாக விழுந்து இடுப்பு எலும்பு முறிவு ஏற்படல், வெள்ளை வெட்டைநோய், அளவுக்கு மிஞ்சிய மதுபாவனை, முள்ளந்தண்டில் மயக்க ஊசி ஏற்றும்நிலை, சிலமருந்து (ஆங்கிலமருந்து) போன்றவற்றினாலும் ஏற்படலாம் என அறிய முடிகின்றது. எனவே இந்நிலையில் வைத்தியர்களின் ஆலோசனை பெறுவதுடன் சிகிச்சையும் பெற்றுக்கொள்வது முக்கியமாகும்.



இன்னும் சிலருக்கு ஆண்குறியின் முன்புறத்து பகுதி சுருங்கி இருக்கும் நிலை. பெண் உறுப்பு முனையில் உள்ளதோல் பகுதி நீண்டிருத்தல், துவாரம் குறுகியதாக இருத்தல் போன்றோருக்கு சிறுநீர்கழியும் போது சொட்டு, சொட்டாக கழியலாம் என்பதனையும் ஞாபகத்தில் வைத்திருந்தால் காரணத்தை அறிய முடியும். சிறுநீருடன் இரத்தம் கழிதல் பெரும்பாலும் நுண்கிருமித் தாக்கநிலை, சிறுநீரககற்கள், புற்றுநோய் சிறுநீர் கழியும் காயம் சிறுநீர் பையில் காசநோய் ஒட்டுண்ணி, உடலில் உள்ள உறுப்புக்களில் தாக்கமான நோய் நிலை போன்றவற்றால் ஏற்படலாம்.

இரத்த உறைவு மாரடைப்பு வியாதிக்கு சாதகமாக அமையலாம். இந்நிலையிலும் சிலருக்கு இரத்தம் சலத்துடன் செல்லலாம் எனவும் கூறப்படுகின்றது.

'நீர்க்கோவை' - இதனை ஊதுகணை எனவும் அழைப்பதுண்டு. இந்நிலை இரத்தோட்டத்தை விட அதிகரித்துக் காணப்படும். தேங்கி நிற்கும் இந்நிலையை உடையவரை பார்க்கும் போது நடக்கும் தருணத்தில் கால்வீக்கம் அடையும். கணுக்கால் எலும்புப் பகுதியில் விரலைவிட்டு அமர்த்திப் பார்வையிடும்போது பள்ளமாகத் தெளிபடும். சில நிமிடம் தாமதித்து பழைய நிலைக்கு வரும்.

சிலர் துயில்விட்டு எழும்பும் போது அவர் முகத்தை நாம் பார்க்கும் போது அவர்களின் கண்களின் மேற்புறம் மற்றும் கீழ் இமைகளில் வீக்கம் காணப்படும். இந்நிலைகளை பெரும்பாலும் சிறு நீரக நோய், இரத்த சோகை, புரதச் சத்து குறைந்த ஆகாரம், இருதயம் சோர்ந்து நீர்த் தேக்கநிலை, கல்லீரல் செயல் தன்மை குறைந்த நிலை போன்றவற்றால் முக்கியமாக காணப்படலாம்.

உடல்நிலை பெலவீனப்பட்டு நுண் கிருமிகளினால் எமக்கு வியாதிகள் ஏற்படுகின்றன. இப்படியான நிலை சிறுநீரகத்தில் ஏற்பட்டு குளிர்காய்ச்சல் தென்படும். இதே போன்று மலேரியா வியாதியிலும் காணப்படும் இந்நிலையில் இரத்தப் பரிசோதனை செய்து என்ன வியாதி என்பதை வைத்தியர்கள் கண்டு கொள்வர். இதில் கண்டு கொள்ளமுடியாத சந்தர்ப்பத்தில் வேறுவித பரிசோதனை செய்து நோயை நிர்ணயிப்பார்கள். இப்படி நிலை மற்றும் புற்றுநோய், சிறுநீரகத்தில் உருவாகி இருந்தாலும் அல்லது காசநோய் காரணத்தினாலும் சுரம் நிலை ஏற்படலாம் எனவும் அறியக்கிடக்கின்றது.

இரத்த சோகை (Anemia) - இது வயிற்றில் ஒட்டுண்ணி, புழுக்கள் காணப்படல், இரும்புச்சத்து குறைதல் போன்ற நிகழ்வால் வரும் எனக்கருதினாலும் முக்கியமாக எரித்ரோபாய்டின் (Erythropoietin) என்ற சத்து குறைபாடே என ஆய்வுகள் கூறுகின்றன.

சிறுநீரகம் பழுதடைந்த நிலையில் இரத்த சோகை காரணத்தால் ஏற்பட்டது என்பதை காரணகாரியங்களினால் கண்டு கொள்ள முடியும் எனவும் அறிய முடிகின்றது.

அதாவது நுண்கிருமித் தொற்றால் எதிர்ப்புத்தன்மை குன்றி செவ்வணுக்கள் (R.B.C) அழிந்திருக்கும். இரும்புச்சத்து குறைந்தோ இல்லாமலோ காணப்படும். இரைப்பையில் உள்ள சீதப்படலம் சுருக்கமடைந்து அமிலத்தன்மையும், அகக்காரணியும் குறைந்து காணப்படும் எனவும் சிறுநீர்கழிக்கும் போது இரத்தம் கலந்து இருக்கும் எனவும் இரத்தத்தின் சிவப்பு அணுக்கள் (R.B.C) அதிகமாக அழிந்த நிலை தென்படும் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.

இரத்த அழுத்தம் குறிக்கப்பட்ட அளவிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். அதிகரிப்பின் இரத்தக்குழாய்கள் பெலவீனப்பட்டு இருதயமும் பெலவீனப்படும் தளர்வு நிலையை ஏற்படுத்திவிடும் எனவும் அறிய முடிகின்றது. எனவே எதற்கும் வைத்தியர்களின் ஆய்வு முக்கியமாகும். அவர்கள் நன்கு பரீட்சித்து ஆய்வு செய்து ஆரம்பநிலையில் வியாதி நிலையை குணப்படுத்திக் கொள்வார்கள்.

எனவே வியாதிகள் தங்களுக்கு ஆரம்பிக்கும் போது தாமதியாமல் வைத்தியர்களிடம் செல்வது தங்களைப் பொறுத்ததாகும். இதனால் உயிர்த்தாக்கத்தை தவிர்த்துக் கொள்ள முடியும்.

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.707.4378



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis


Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# காலத்தோடு வளரும் கணினிகள் -11

கடந்த இதழில் இரண்டாந் தரச் சேமிப்பகங்களைப் பற்றி எழுதியிருந்தேன். சிப் டிறைவ(Zip Drive) எனப்படும் ஒரு நெகிழ் தட்டைப் போன்ற தொழில் நுட்பம் கொண்ட இன்னொரு வகையும் உண்டு. இது 100 MB தொடக்கம் 250 MB கொள்ளளவுடைய தகவலைச் சேமிக்கத் தக்கவை. இதை உருவாக்கியவர்கள் iomega என்ற நிறுவனத்தினர். இது பற்றிய மேலதிக தகவல்களை http://www.iomega.com/index.html என்ற இணையத்தளத்தில் காணலாம். முக்கியமான தகவல்களை பைக் அப் (Back up) செய்து கொள்வதற்கு இது பெரிதும் உதவுகிறது. நெகிழ் தட்டுக்களைக் காட்டிலும் இருமடங்கு தடிப்புக் கொண்டதாக உள்ளது.

கணினி ஒன்று தொழிற்படுவதற்குத் தேவையான அடிப்படைக் கருவிகளாக (Essential devices) மையச் செயற் பாட்டகம், விசைப்பலகை (கீபோர்ட் key-board), திரையகம் என்பவற்றைக் குறிப்பிட்டிருந்தேன். இவற்றில் விசைப் பலகையைப் பற்றிச் சற்று விரிவாகக் கவனிப்போம். கணினியில் உள்ள விசைப் பலகையானது பல எழுத்துக்கள், எண்கள், அடையாளச் சின்னங்கள் கொண்ட பட்டன்களின் (keys) தொகுப்பால் உருவாக்கப்பட்டுள்ளது. விசைப்பலகை அமைப்பில் முக்கிய பகுதி தட்டச்சு இயந்திரத்தில் (Type Writer) உள்ள அமைப்பைப் போன்று காணப்படுகிறது. பொதுவான விசைப்பலகை QWERTY வகையைச் சார்ந்ததாகக் கூறப்படுகிறது. விசைப்பலகையில் உள்ள ஒரு பட்டன் அழுத்தப்படும்போது அடையாளம் (Code) உருவாக்கப்பட்டுக் கணினியின் உள்ளே அனுப்பப்படுகிறது. கணினியின் உள்ளே டேட்டாவை அனுப்புவதற்குரிய ஒரு வழிமுறையை விசைப்பலகை வழங்குகிறது. இதனாலேயே விசைப்பலகையில் A-Z எழுத்துக்கள், 0-9 வரையான எழுத்துக்கள் மற்றும் பல அடையாளச் சின்னங்களும் உள்ளன. இவற்றை விடவும் பல விசேட பட்டன்களும் உள்ளன. கணினிக்குப் புதியவர்கள் இவற்றை நன்கு அறிந்து கொள்ளுதல் அவசியமாகின்றது. சில பட்டன்களில் (character) கீழும், இன்னொன்று மேலுமாக இரண்டு அடையா-ளச் சின்னங்கள் இருக்கும். Shift key இனை இந்த பட்டன்களுடன் சேர்த்து அழுத்தும்பொழுது மேலேயுள்ள அடையா-ளச் சின்னம் கிடைக்கும். அடையாளச் சின்னங்களைக் கவனித்தால் ! என்பது ஆச்சரியக் குறியாகும் (Exclamation mark), @ என்பதை at sign என்போம். மின் அஞ்சல் முகவரியில் இதனைப் பொதுவாகப் பயன்படுத்துவோம். # என்பதை hash sign அல்லது pound sign என்றும். $ இனை dollar sign என்றும் % இனை percent-age sign என்றும், ~ என்பதை tilde sign என்றும் அழைப்போம். ^ என்பதை carat




sign என்போம். 2^3 என்று எழுதினால் 2இன் 3ம் அடுக்கு என்று கருத்து. & sign, id and sign அல்லது ampersand என்போம். * (star sign) பெருக்குதலுக்குப் (multiplication) பயன்படுத்துகின்றோம். (என்பதை open bracket sign என்றும்) closing bracket sign என்றும், [ open square bracket குறியீடு என்றும் ] close square bracket குறியீடு என்றும் { open curl bracket sign என்றும் } close curl bracket sign என்றும் அழைப்போம். – (minus sign) கழித்தல் (deduction) , + (plus sign) கூட்டல், = equal sign, / slash sign, பிரித்தலைக் (division) குறிக்கும், \ back slash sign, ? question mark, < less than, > greater than போன்ற குறியீடுகளுடன் " inverted comma, ' apostrophe, comma, ; semicolon, : colon போன்ற அடையாளச் சின்னங்களும் விசைப்பலகையில் உண்டு. Enter அல்லது Return key உறுதிப்படுத்தலுக்கும் (confir-mation), Esc key (Escape key) தவிர்த்தலுக்கும் (cancellation) பயன்படுத் தப்படும். கணினியில் ஒரு கட்டளையை வழங்கி விட்டு Esc key இனை அழுத்தினால் நாங்கள் வழங்கிய கட்டளை மீளப்பெறப் படும். விசைப்பலகையின் வலது பக்கத்தில் காணப்படும் cursor movement keys பகுதியில் left arrow, right arrow, up arrow, right arrow ஆகியவற்றுடன் PgUp( Page Up), PgDn(Page Down) போன்ற பட்டன்கள் இருக்கும். Alt (Alternate key), Ctrl(Control key) ஆகியனவற்றின் பயன்பாடு மென் பொருட்களைப் பொறுத்து மாறுபடும். விசைப்பலகையின் மேல் வரிசையின் வலது புறத்தில் காணப்படும் PrtSc (Print screen) என்ற key மிகவும் முக்கியமானது. இந்த பட்டனுடன் Shift இனைச் சேர்த்து அழுத்தும் பொழுது திரையகத்தில் (screen) உள்ளதை கணினி படமாக எடுத்துக் கொள்ளும். இதன் பின்னர் Ms Word போன்ற மென்பொருட்களில் Ctrl V இனை அழுத்தும் பொழுது எடுக்கப்பட்ட படம் document இல் paste ஆகும். திரையகத்தில் காணுவதை அச்சுப்பதிவு செய்து கொள்ள PrtSc key மிகவும் பயனுள்ளதாகும். விசைப்பலகையின் மேல்வரிசையின் இடது பக்கத்தில் காணப்படும் F1 முதல் F12 வரை உள்ள பட்டன்களை Function keys என்போம். இவற்றின் பயன்பாடு மென்பொருளைப் பொறுத்து மாறுபடும். Tab key Tabulation இற்கும், Caps Lock cap-ital letters இற்கும் உதவும். இப்பொழுது கணினியைப் புதிதாக பயன்படுத்துபவர் களுக்குத் தேவையான விசைப்பலகை பற்றிய விபரங்கள் இந்தக் கட்டுரை மூலமாகக் கொடுத்து உள்ளேன். ஒரு விசைப்பலகையை எடுத்து நன்கு கவனித்தால் விசைப்பலகையில் உள்ள பட்டன்கள் பற்றிய குறிப்புக்கள் மனதில் பதிந்து விடும். தற்காலத்தில் வருகின்ற விசைப்பலகைகள் USB drive மூலம் இலகுவாக கணினியுடன் இணைக்கப்படக் கூடியவையாக வருகின்றன. வயர்லெஸ் (Wireless) விசைப்பலகைகளும் பாவனை



யில் உள்ளன. கணினியைப் பயன்படுத்துவோர் கட்டாயமாக அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படை விடயங்கள் பலவற்றைப் பற்றி இதுவரை இந்தத் தொடர் கட்டுரையில் எடுத்து வந்துள்ளேன். இந்தத் தொடர்கட்டுரையைத் திரும்பத் திரும்ப வாசித்தால் முக்கியமான அம்சங்கள் மனதில் பதிந்து விடும். கணினி பற்றிய அறிவைத் தொடர்ந்து விருத்தி செய்வோம்.

என் அன்புக்குரிய வாசகர்களே! தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com



# கூட்டுப் பொறுப்பும் தனித்துவமும்



உலகம் ஒரு கிராமம் எனும் வகையில் பூமிப்பந்து உலகமயமாகி விட்டது. பூமி முழுவதிலும் மக்கள் வாழும் இடங்களெல்லாம் என்னென்ன நடக்கிறதோ அவை அனைத்தும் அன்றன்றே அனைவருக்கும் தெரியவரும் அளவுக்கு தொழில் நுட்பவசதி வளர்ந்து விட்டது.

தனித்தனியாக கலைகள், விஞ்ஞான அறிவு, மெஞ்ஞான தத்துவங்கள், வளர்ந்துவந்த பிரதேசங்களிலிருந்து அனைத்து உலகத்திலும் பரந்து, உலகப் பொதுமையைப் பெற்றுவிட்டது. அத்துடன் அவை எங்கே பிறந்தன என்பதே தெரியாத அளவுக்கு மக்கள்மயமாகி விட்டன.

அறிந்த அவ்வளவிலும் ஏற்பன ஏற்று இணைந்து நடப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். 'சாரை தின்னும் ஊருக்குப் போனால் நடுமுறி நமக்கு' எனும் பழமொழி சமூகப் பண்பாட்டை எடுத்துக் கூறுவதாக அமைந்திருந்தது. அதனை ஏற்றுக்கொள்ள முடியாவிடின் எழுத்தெழுத்தாகப் பிரித்து வெவ்வேறு அர்த்தங்களைப் புகுத்தி ஒரு உயர்ந்த பொருளைக்காட்டுவதாக பொருள் கொடுத்து அமைவது உலகவழக்கு.

'ஊரோடுகின் ஒத்தோடு', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என சமூக ஒற்றுமையை கூறும் நல்ல விழுமியங்களாகக் கருதப்பட்டவை எல்லாம், தனித்துவத்தைக் கொண்டு வருவதற்காக மாற்றிப் பொருள் கொள்ளத் தக்கதாக மூளைகள் வேலை செய்கின்றன.

தேசங்கள் அனைத்தும் தாம் சமூக மயமாக்கலை ஆதரிப்பதாக ஐ.நா.சபை, பொதுநலவாய நாடுகள், நேசநாடுகள், முப்பெரும் நாடுகள் என்றெல்லாம் கூட்டுச் சேர்ந்தாலும் தேசங்களோ, நாடுகளோ தத்தம் தனித்துவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் மிக அவதானமாகக் காயை நகர்த்துகின்றன. அதுமாத்திரமல்ல நாடுகளுள்ளே இருக்கும் பிரதேசங்கள், பிரதேசங்களுக்குள்ளே இருக்கும் ஊர்கள் தத்தமக்குரிய பண்புகள், கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்களைக் கைவிடாதும் மற்றவற்றின் மீது திணிக்கவும் முயல்கின்றன.

நுட்பமாக அவதானித்தால் ஊர்களிலுள்ள குறிச்சிகள், குறிச்சிகளுள்ளே இருக்கும் வீடுகள், வீடுகளுள் இருக்கும் தனித்தனி நபர்கள் இடையே பொதுமை காணப்பட்டாலும் தத்தம் தனித்துவத்தை முன்னெடுத்து நிறுவவே விரும்புவர்.

உதாரணமாக தீபாவளிக் கொண்டாட்டத்தை எடுத்துக் கொள்வோம். தீபாவளி என்னவோ தேசம் முழுவதும் அனுசரிக்கும் கொண்டாட்டம். ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒவ்வொரு கதை இருக்கும். எல்லாரும் ஒரே கதையைக் கூறுவதாகத் தெரியவில்லை. பொதுவாக நரகாசுரன் வதம் எனக் கூறப்பட்டாலும் வேறு கதைகளும் இதிகாசங்களில் காணப்படுகின்றன.

விஷ்ணுபகவான் வாமனரூபத்தில் வந்து மகாபலிச்சக்கரவர்த்தியை வதம் செய்த நாள் எனவும், இராமபிரான் அயோத்திக்குத் திரும்பிய நாள் எனவும் நரகாசுரனை வதம் செய்த நாள் எனவும் திருமகள் நாராயண-னைத் திருமணம் செய்த நாள் (பாற்கடலை கடைந்த போது) எனவும் பல்வேறு கதைகள் வெவ்வேறு பிரதேசங்களில் கூறப்படுகின்றன.

இவ்வாறு நான்கு விதமான கதைகளை நாம் அறிவோம். இன்னும் எத்தனையோ யாருக்குத் தெரியும்? இனி, இக்கொண்டாட்டத்தில் பொதுவான அனுட்டிப்பு எண்ணெய் தேய்த்து, வெந்நீரில் தோய்ந்துகுளித்து, புத்தாடை அணிதல் இவற்றைவிட வீட்டுக்கு வீடு கூட தனித்துவமான கிரியைகள் உண்டு. சிலர் அன்று அசைவம் சமைப்பர். சிலர் கந்தசஷ்டி தொடர்வதால் சைவமாக இருப்பர்.

கோவில்களுக்கு நல்லெண்ணையும் கோடித் துண்டும் கொடுப்பர். காலையில் பிட்டும் முட்டைப் பொரியல் அல்லது முட்டைக் குழம்பு, ரசம்; மதியம் ஆட்டிறைச்சிப் பிரட்டல், பொரியல், குழம்பு, எலும்பு ரசம் என அமர்களமாக இருக்கும். வேறு பிரதேசத்திலிருந்தோ, குறிச்சி யிலிருந்தோ விவாகம் செய்திருந்தால் அவர் தமது பழக்க வழக்களைக் கொண்டுவருவார். அங்கு "ஆடு குளிர் என்று நாங்கள் கோழிதான். காலையில் இடியப்பமும் கருவாட்டுச் சம்பலும்



உண்போம்." 'சரி' அதையும் செய்வோம். இப்படி பொதுமைப் பட்டாலும் அவரவர் தமக்குப் பிடித்ததையே உண்டு தனித்துவம் பேணுவர்.

உணவு ஒன்றை எடுத்து உதாரணம் காட்டப்பட்டது. சிலர் சத்தவெடி போட்டுத் தம்மகிழ்ச்சியை காட்டுவர். பிள்ளைகள் சத்த வெடிக்கும் பயப்படுவதால் வாணங்களைக் கண்ணுக்கு குளிர்ச்சியாக விடுவர். இதுபோன்றே பேசும் மொழி. யாழ்ப்பாணத்தில் ஒரு கிராமத்தில் ஏவல் வினைக்கு போறியோவே! வந்திட்டயோவே! என ஒரு வே போடுவார்கள். அதுபோல் தமிழ்நாட்டு தின்ன வேலியில் 'வே' போட்டுப் பேசுவர். இத்தகைய குறிச்சிகளின் மொழி வேறுபாடுகளை தாமரைச்செல்வி, செங்கையாழியான், K.S பாலச்சந்திரன் நாவல்களில் காணலாம்.

கூட்டுப்பொறுப்பு, பொதுமைப்படுத்தல், தனித்துவம் என்பன பற்றி வாசற்புறத்தில் அமர்ந்து அலசிக்கொண்டிருந்தபோது, வானத்தில் ஒரு கூட்டம் பறவைகள் பறந்து கொண்டிருந்தன. என்ன அழகு! இடக்கிடை இடம் மாறிப் பறந்தனவே தவிற ஒன்றாகவே உயர உயரப் பறந்தன. சிறிது நேரத்தில் அம்புகள் போலவும் பின்னர் புள்ளிகள் போலவும் தென்பட்டன. பின் அந்தக்கூட்டம் மெல்ல மெல்ல இறங்கத்தொடங்கின. சிறிது இறங்கியதும் இரண்டாகப் பிரிந்து எதிராகப் பறக்கவே ஒரு கூட்டம் கண்ணிலிருந்து மறைந்தது. மற்றது இறங்கும் போதே மூன்றாகப் பிரிந்தன.

ஒவ்வொரு கூட்டத்திலும் ஏறக்குறைய பத்து இருந்தன. இன்னும் கீழே இறங்கிய போது மூன்று மூன்றாகப் பிரிந்தன. கீழே இறங்கிய போது வட்டமிட்டு தனித்தனியாக பிரிந்து நிலம் நோக்கி இரை தேட இறங்கிவிட்டன.

கூட்டாக புறப்பட்டு பொறுப்பாக பறந்து உணவுத்தேடலில் தனித்துவம் வந்து விட்டது.

மக்கள் மத்தியில் கூட்டுப்பொறுப்புககள் ஏற்பட்டிருந்தாலும் பிறநலம் பரவி இருந்தாலும் அதற்குள்ளும் தத்தம் தனித்துவத்தை நிலை நாட்டவே எவரும் முயற்சிப்பர். வசதிகள், வாய்ப்புக்கள் குறைபாட்டால் போட்டி, பொறாமை எனும் குணங்கள் தலைநீட்டத்தொடங்கிவிடும்.







**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at *Scarborough & Stouffville*

**Contact: 647.340.9490 / 647.831.0363**

**Free Real Estate Class**

Free Realestate Class Call:

**416.321.6969**

**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***

கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில்
தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்

2%* முதல்

# SKN FINANCIAL

(Pawn Brokers)

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

முழுக்காப்புறுதி செய்யப்பட்ட ஒரே நிறுவனம்

## 416-269-5393

GOLD LOAN

உங்கள் பெறுமதியான நகைகளை விற்க வேண்டாம்!
மிகக் குறைந்த வட்டிக்கு எம்மிடம் அடகு வைத்து உங்கள் உடனடிப் பணத்தேவையைப் பூர்த்தி செய்த பின்னர் நகைகளை மீட்டுக் கொள்ளலாம்.

ஏற்கனவே அடைவில் இருக்கும் உங்கள் நகைகளைக் குறைந்த வட்டியில் மீள் அடைவு செய்ய நாம் உதவுவோம்.

- அவசரப் பணத் தேவையா?
- புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- புதிய மனை வாங்குவதில் பணச் சிக்கலா?
- உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்கு பல விதமான திட்டங்கள் உள்ளன!
- வட்டித் தொகைக்கு வரி விலக்குப் பற்றுச் சீட்டு வழங்கப்படும்

**உங்கள் நகைகளுக்கு பாதுகாப்பு, குறைந்த வட்டி, நிறைந்த பெறுமதி, அன்பான சேவையைக் கனடாவில் வழங்கும் ஒரே நிறுவனம்.**

5 நிமிடங்களில் உங்கள் கையில் பணம்
இன்றே நாடுங்கள்

## SKN FINANCIAL

(Pawn Brokers)

4-2677 Eglinton Ave. East
Scarborough, ON M1K 2S2 (Eglinton & Brimley)

SKN FINANCIAL is operated by
SKN CONSUMER FINANCE LTD.

* 2% per month equivalent to 24% per annum
Terms and conditions may apply

PRINT FAST.ca :: 416 752 3278

# நால்வர் நான்மணி மாலை

அகவல்

வாழி எம்மான் மாணிக்க வாசக
காழி யர்கோன் அப்பரின் காலம்
தோழர் வரலா றவற்றைத் துருவி
ஆழ ஆய்ந்தவர் அறுதி யிட்டனர்
எனினும் நின்றன் வாழ்க்கையில் ஏனோ
புனைவுகள் அதிகம் புதிர்களும் அதிகம்
ஆவியைப் பிழியும் அருமணி வாசக
மூவர் முதலியர் முன்னோ பின்னோ
யாதுன் காலம் ஐயனே
பேதை தெளிவு பெறும்வழி உண்டோ? (32)

வெண்பா

உண்டு திருமுலைப்பால் ஒப்பில்லா ஞானத்தைக்
கொண்டவருட் பிள்ளையரே கோமகள்தான் - கண்டுன்னைப்
பாலன் எனநினைக்கப் பாண்டியன்நோய் தீர்த்தீரே
ஆலவா யானருளா லே. (33)

கட்டளைக் கலித்துறை

அருள்பெற்ற நாவர சையரே ஆண்டவர் ஆடல்கண்டு
மருளுற்ற இந்தப் பிறப்பு வருத்தும் வலிமறந்து
வரதரின் ஆடலின் மாண்பில் மகிழுமிவ் வாழ்வையெண்ணி
பெருமைகொள் நின்றனின் பெற்றியை யானென்ன பேசுவதே. (34)

விருத்தம்

பேசருந் தொண்டர் மேன்மை
பேசவைத் தெங்கள் வாழ்வின்
மாசுகள் களைந்த வள்ளல்
வையகம் வந்து முன்னர்
ஆசைவைத் தவர்க்கு வாழ்வை
அளித்தநல் லழகர் தோழர்
ஈசருக் கவரை எண்ணி
இல்லறம் இயற்று வேனே. (35)

அகவல்

இயற்ற லின்றி இறைவன் அருளால்
இயற்கை யாகவே ஊறிய இன்ப
வாசகந் தன்னை வையகத் தார்க்கு
வழங்கிய வாதவூர் மாணிக்க வாசக
பாவை பாடிய பக்குவப் பாங்கதும்
கோவை பாடிய கொள்கையும் மற்றவர்
ஆடல்கள் பாடிய அழகையும் ஆய்கையில்
மாதொரு பாகர் மீதினில் வைத்த
காதலைத் தெளிவுறக் காட்டத்
தீதிற் பெண்களே சிறப்பெனத் தெரியுதே. (36)

வெண்பா

தெரியாத வற்றைத் தெரியுமெனச் சொல்வார்
அரிதான வற்றை அறியார் - திருஞான
சம்பந்தர் தேவாரச் சாரம் அறிவார்தம்
சம்பந்தம் கொள்ளல் தகும். (37)

கட்டளைக் கலித்துறை

தகவிலர் தக்கவர் நல்லவர் தீயவர் தன்மைகளை
அகமதிற் கொள்ளாத அப்பர்தம் பக்குவம் யாரறிவார்
பகையதும் நட்பதும் அற்ற பரமனைப் பத்திசெய்யும்
சுகமதில் தோய்ந்தவர் தொண்டைத் தொடர்பவர் தூயவரே. (38)

விருத்தம்

தூயவன் தொண்டர் போற்றி
சுந்தரத் தோற்றம் போற்றி
தாயினும் சிறந்த மேன்மைத்
தம்பிரான் தோழர் போற்றி
ஏயர்கோன் சேர மானார்
இணையிலா நண்பர் போற்றி
தோயவே வையம் தொண்டத்
தொகைதந்தார் போற்றி போற்றி. (39)

அகவல்

போற்றி வாசக மழையே போற்றி
போற்றி தென்னவன் புகழே போற்றி
பொய்யடி மையிலாப் புலவன் என்றே
துய்யடி யாலே சுந்தரர் சொல்லியும்
நம்பி யாண்டார் நம்பிகள் ஏனோ
நம்பி வேறோர் பொருளினை நாட்டி
தூய தொண்டத் தொகையில் நீக்கினர்
ஆயினும் அறுபத்து நான்காம் அடியவர்
என்றே நின்னை ஏத்தி
நன்றே வணங்குவர் நானிலத் தமிழரே. (40)

நால்வர் நான்மணி மாலை முற்றும்.



கவிஞர் வி. கந்தவனம்

# மதுபோதையில்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

நின்று அறுக்கும் என்பது ஒன்று இரண்டல்ல. ஏராளம்.

1. வாழ்வில் சில தொழில் முன்னேற்றங்கள் தடைப்படும். தொழில் அனுமதிப்பத்திரம் எதுவும் பெறமுடியாது.
2. குடிவரவு விசாரணையில் இருந்தால் அங்கு அகதி அந்தஸ்து கோரிக்கை ஏற்கப்படுவது என்பது சிரமம். பிரஜா உரிமை பெறவே முடியாது.
3. எல்லை கடந்து அமெரிக்காவிற்கு போகமுடியாது.
4. ஆயுள்காப்புறுதி ஒப்பந்தம் கூட பெறுவதில் சிரமங்களும் தடைகளும் ஏற்படும்.
5. மீண்டும் அனுமதிப்பத்திரம் எடுத்து வாகனம் ஓட்ட முயலும் போது வாகனக்காப்புறுதிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் என்பது இந்த குற்றசாட்டு வரலாற்றினால் அதி உச்ச விலையாகவே இருக்கும்.

இவை மட்டுமல்ல பல்வேறு விடயங்களில் தடைகளும் பிரச்சினைகளும் ஏற்படும். இக் குற்றப்பதிவு எங்கே தடையாக இருக்கும் என சொல்லமுடியாமல் எந்த இடத்திலும் சிரமம் கொடுக்கும். என்றும் பாரிய தடைக்கல்லாகவே அமையும். தெரியாத்தனமாக மாட்டுப்பட்டு இன்று கனடாவில் அவதியுறும் படித்தவர்கள், பெரிய உயர் பதவியில் இருப்போர், பெருந்தொழில் செய்வோர் என ஏராளம் பேர் விரக்தியின் விளிம்பில் வரிசையில் உள்ளனர்.

எனவே ஒரு உறுதியான முடிவு! எல்லோர் மனதிலும் இருக்க வேண்டியது. அதாவது! மது அருந்தினால் வாகன சாரதியின் ஆசனத்தில் உட்காரகூடாது. திருப்பு வளையத்தினை (Steering) தொடக்கூடாது. வாகன சாரதியின் ஆசனத்தில் உட்காருவதாக இருந்தால் மது அருந்த கூடாது.

ஏனெனில் வாகன சாரதியின் ஆசனம் என்பது ஆண்டவன் சன்னிதானம் போன்றது. புனிதமானது.

### முக்கிய குறிப்பு

மது அருந்திய ஒருவர் வாகனமோட்டி செல்லும் போது தமது நிலைமை என்பது தடுமாற்றமாக உள்ளது என தெரிந்தால் வாகனத்தினை ஓரமாக நிறுத்திவிட்டு கார் திறப்பினையும் கையில் எடுத்துக் கொண்டு பின் ஆசனத்திற்கு போய் மதுபோதை தெளியும் வரை தூங்கலாம். அந்த நிலையில் இருக்கும் போது மது போதையில் வாகனமோட்டியவர் வாகனம் தொடர்ந்து செலுத்தமுடியாத நிலையில் பின் ஆசனத்தில் அமைதியாக தூங்குகின்றார் என இலகுவாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் புரிந்து கொண்டாலும் அவரால் கைது செய்யவோ குற்றம் சாட்டவோ முடியாது.

# மனநோய்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பவற்றைச் சேர்த்து அரைத்து தினமும் சிறிதளவு எடுத்து ஒரு மாதம் சாப்பிட இந்நோய் தீரும்.
6. தினமும் எலும்மிச்சை பழத்தை பிழிந்து தலையில் தேய்த்து முழுகிவர இந்நோய் குணமாகும்.
7. சீரகத்தை எலும்மிச்சம் பழச்சாற்றுடன் ஊறவைத்து தூள் செய்து சாப்பிட இந்நோய் குணமாகும்.

### யோகா, தியானப் பயிற்சி நிரந்தர தீர்வாகும்

மனநோயாளிகளுக்கு எவ்வகையான மருத்துவமுறைகளும் முழுமையான தீர்வாக அமையாது. இவர்களுக்கு 'எண்ண மாற்று' சிகிச்சை முறைதான் (Though Changing Practice) சிறந்த வழிமுறையாகும். இதற்கு யோகாசனத்தில் சில மருத்துவமுறையிலான பயிற்சிகள் உள்ளன. இதன் மூலம் மூளைக்குச் செல்லும் நரம்பு மண்டலங்கள் அனைத்தும் செம்மைப்படுத்தப்படுகின்றன. இருதயத்திலிருந்து தலைப்பகுதிக்குச் செல்லும் இரத்த ஓட்டம் சீரடைகின்றன.

அடுத்து சுவாசத்தைச் சீராக்கும் மூச்சுப் பயிற்சிமுறைகள் முக்கியமாக கபாலபாதி பரமாரி, அனுலோமா விலோமா பயிற்சிகள் மனதிற்கு அமைதியையும் மூளைக்குப் புத்துணர்ச்சியும் தரக்கூடியது. முடிவாக தியானம் (Meditation) அதிலும் ஆழ்நிலை தியானப் பயிற்சி தினமும் இருமுறையாவது 10 முதல் 20 நிமிடங்கள் பழகி வரும்போது அனைத்துவிதமான மனநோய்களிலிருந்தும் பூரணமாக விடுபட்டு அந்த நோயாளிகள் மறுவாழ்வு பெறுவது உறுதி.

இவ்வாறான பயிற்சிகளை ஆரம்பத்தில் ஒரு யோகாசன நிபுணரின் துணையோடு கற்றறிந்து சில நாட்கள் விடாமுயற்சியுடன் கடைபிடிப்பது தான் சிறந்த பலனைத் தரும்.

# கனேடியத் தமிழ் ஊடக வரலாற்றில் பல்வேறு திருப்பங்களை ஏற்படுத்திய தமிழ் சி.என்.என் இன் ஊடக நண்பர்களுடனான சந்திப்பு!

தமிழ் சி.என்.என் செய்தி இணையத்தளம் 5/12/2012 அன்று அனைத்து ஊடக நண்பர்களுடனான கருத்துப் பரிமாறல் ஒன்றை நடாத்தியது. குறித்த சந்திப்பு மிகப்பெரிய வெற்றி அடைந்துள்ளது. கனடாவில் முதன் முதலாக அனைத்து தமிழர் ஊடகங்களும் ஓர் அணியில் இங்கு திரண்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

கனேடிய தமிழ் ஊடக வரலாற்றில் Board of Directors எனப்படும் இயக்குனர்கள் சபையினை வைத்திருக்கும் ஒரே ஒரு அமைப்பாக தமிழ் சி.என்.என் செய்தி நிறுவனம் விளங்குகின்றது.

இங்கு இயக்குனர்கள் சபையை தமிழ் சி.என்.என் செய்தி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரான திரு. அகிலன் உலகுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

இயக்குனர் சபையில் தமிழ் பண்பாட்டு விவகாரங்களுக்கு திரு.சா.வே.பஞ்சாட்சரமும், சட்டத் துறை ஆலோசகராக சட்டத்தரணி திரு. நாதன் ஸ்ரீதரனும், மக்கள் தொடர்பாளராக திரு.வி.எஸ்.துரைராசாவும், பேச்சாளராக திருமதி சுகந்தி ராஜனும், நிதிப் பொறுப்பினை எஸ்.ஜே சோதி அவர்களும், பல்கலாச்சார விவகாரங்களுக்கு Catharine Fait உம், விளம்பரங்கள் தொடர்பான விடயங்களுக்கு கவிதா சிவரூபனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்நிகழ்வில் பங்கேற்ற அரசியல் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் போன்ற சமூகத்தின் அனைத்து தரப்பினருடைய கருத்துக்களையும் உள்வாங்கி இயக்குனர்கள் சபையினால் இறுதி முடிவெடுக்கப்பட்டு தொழிற்படுகின்ற மக்கள் ஊடகமாக தமிழ் சி.என்.என் விளங்குகின்றது.

தமிழ் சி.என்.என் இணையத்தளத்தின் மூலம் கிடைக்கின்ற இலாபம் முழுவதனையும் இயக்குனர்கள் சபையின் வழிகாட்டுதல்களுக்கு அமைய போரினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரங்களை இழந்துள்ள மக்களின் மறுவாழ்வுக்காக வழங்கப்படும், என்பதனையும், இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளயும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்



















## நீங்கள் விரும்பும் தொலைக்காட்சி கேளிக்கை பொதிகள்

### றோஜேர்ஸ் வழங்கும் பரபரப்பூட்டும் புதிய தொலைக்காட்சி நிகழ்ச்சிப்பொதிகள்

றோஜேர்ஸ் டிஜிட்டல் தொலைக்காட்சி சேவைக்கு நீங்கள் பதிவுசெய்யும்பொழுது நடிப்பாற்றல், நாடகம், தொடர் நிகழ்ச்சிகள், செய்தி, விளையாட்டு, இன்னும் பல நிகழ்ச்சிகளை பொதிகளாகப் பெற்றுக்கொள்ளலாம். எமது முழுமையான புதிய கேளிக்கை நிகழ்ச்சிப்பொதிகளுள் உங்களுக்கு விருப்பமானவற்றை தெரிவுசெய்யவும். இன்றே பதிவுசெய்யவும்!

புதிய பொதிகள் தமிழ் பிறெஸ்டீஜ் பொதி
$46 46[1]/mo.

புதிய பொதிகள் தமிழ் இலீட் பொதி
$30 30[1]/mo.

இன்னும் பல பொதிகளையும் தெரிவுசெய்யலாம்.

இங்கு காட்டப்பட்டவை எல்லாம் மாதக் கட்டடணங்கள் ஆகும்.

றோஜேர்ஸ் டிஜிட்டல் தொலைக்காட்சி சேவை மூலம் நீங்கள் தொலைக்காட்சி இன்பத்தில் திளைக்கலாம்: டிஷ் தேவையில்லை • சீரற்ற காலநிலையிலும் தெளிவாகவும் தடங்கலின்றியும் பார்த்து மகிழலாம். • ஆண்டு முழுவதும் வெவ்வேறு சேவைகளை முன்கூட்டியே இலவசமாகப் பார்க்கலாம்.

இன்றே பதிவுசெய்யவும் தொலைபேசி: 1 855 271-4612

இணையம்: rogers.com/MyTamilEntertainment நேரில் உங்கள் உள்ளூர் றோஜேர்ஸ் நிலையத்துக்கு நேரில் செல்லவும்.

Creating World-Leading Internet Experiences. ROGERS™

Offer available to Rogers Digital TV customers in cable serviceable areas in Ontario and subject to change without notice. Basic Cable and Digital/HD Box required to receive Digital/HD programming. Channel availability may vary by region. Taxes extra. 1 Includes where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1% of the recurring TV monthly service fee. © 2012 Rogers Communications.

# HomeLife/GTA Realty Inc. இன் வருடாந்த ஒன்று கூடலும் பரிசளிப்பும்

HomeLife/GTA Realty Inc. இன் வருடாந்த ஒன்று கூடலும் பரிசளிப்பு விழாவும் டிசெம்பர் 12, 2012 அன்று மாலை 7:00 மணிக்கு ஸ்காபரோ 648 Star Boulevard இல் அமைந்துள்ள, Star Walk உணவகத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஸ்காபரோ, மிசிசாகா அலுவலகங்களிலிருந்து முகவர்களும் குடும்பத்தவர் மற்றும் மற்றும் தொழில்துறை நண்பர்களும் என மண்டபம் நிறைந்து காணப்பட்டது.

இம்முறை முதலாவது முகவராக (Top Producer) ஆக நெல் கேதாரநாதனும் இரண்டாவது, மூன்றாவது முறையே ராஜ் பரமசாமி, சிவ சிவஞானம் ஆகியோர் தமது கேடயங்களைப் பெற்றுக்கொண்டனர்.

மற்றும் முக்கியமாக Tridel நிறுவனம் வழங்கிய Best Sales Rep. Awards முறையே Sanjay Parisha, Siva Sivagnanam, Thana Suseenthira ஆகியோர் பெற்றார்கள். Concord City வழங்கிய Best Sales Rep. Awards முறையே Ananthan Arunasalam, Vahini Nithianandan ஆகியோர் பெற்றார்கள்.



























**HomeLife/GTA Realty Inc.Brokerage***

*Independently Owned & Operated

Tel.:416:.321.6969

Tel.:905.712.2666

# 'நீர்ப்பறவை' - திரை விமர்சனம்

**- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**



தினம் தினம் தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லையில் சுட்டுக் கொல்லப்படும் அவலம்தான் நீர்ப் பறவையின் கதை. ஆனால், அதனை ஓர் ஆவணப்படம் போல் இல்லாமல், ஒரு அழகான காதல் பின்னணியில், தமிழக மீனவனின் வலியை அனைவரும் உணரும் வகையில் பதிவு செய்கிறது இப்படம். மீனவரான லூர்துசாமி, கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லும் போது நடுக் கடலில் தனியாக மிதந்து கொண்டிருக்கும் ஒரு படகைப் பார்க்கின்றார். அதில், கிளிநொச்சியை சேர்ந்த தம்பதியினர் இலங்கை கடற்படையால் சுடப்பட்டு இறந்து கிடக்கின்றனர். அவர்கள் அருகில் ஆண் குழந்தை ஒன்று அழுது கொண்டிருக்கிறது. லூர்துசாமி, அந்தக் குழந்தையை எடுத்து வர, அவரது மனைவி சரண்யா தாயுள்ளத்தோடு அதனை வளர்க்கிறார். குழந்தை வளர்ந்து பெரியவன் ஆனதும் நண்பனுடன் சேர்ந்து குடித்து கெடுகிறான். ஒரு கட்டத்தில், ஊரில் பார்க்கும் அனைவரிடமும் பொய் சொல்லி பணம் பெற்று குடிக்கும் அளவு பெரிய குடிகாரன் ஆகிவிடுகிறான். தேவாலயத்தில் தொண்டு செய்துவரும் அனாதை அருட் சகோதரியின் வளர்ப்பு மகள் சுனேனா, தேவாலய காணிக்கையாக வீடுகளில் வாங்கி வருவதையும் பொய் சொல்லி பணம் பெற்று குடிக்கிறான். பாதிரியாரிடம் பாவம் மன்னிப்பு கேட்கிறோம் என்று சொல்லி அவரிடமும் பொய் சொல்லி பணம் கேட்கிறான். ஒரு நாள் குடித்துவிட்டு படகில் படுத்து இருக்கும்போது, கண்டிக்கும் தந்தையின் முதலாளி காதை போதையில் கடித்து விடுகிறான். இதனால், தந்தையின் வேலை போய்விடுகின்றது. குடியால் இவன் தொல்லை தாங்க முடியாமல் போக, போதை மறு வாழ்வு மருத்துவமனையில் சேர்க்கின்றனர். அங்குள்ள பணியாளர்களை அடித்துவிட்டு தப்பி வந்து குடிக்கிறான். அவனை திருத்துவதற்காக சுனேனா அவன் தலையில் கை வைத்து ஜெபம் செய்கிறாள். அவன், அவளை விரும்பத் தொடங்குகிறான். காதலால் கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்குகிறான். மீண்டும் போதை மறு வாழ்வு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்று புது மனிதனாக திரும்பி வருகிறான்.

சுனேனாவை மணம் முடித்து வைக்க வேண்டுகிறான். ஆனால், அவளது வளர்ப்புத் தாய், வேலை இல்லாத உனக்கு பெண் தரமாட்டேன் என்கிறாள். எனவே, கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல தீர்மானிக்கிறான். ஆனால் அங்கே, 'நீ அகதி. மீனவ சமுதாயம் இல்லை. எனவே, உனக்கு கடலில் மீன் பிடிக்க வேலை தரமாட்டோம்' என்கின்றனர். பிறகு, கரையில் மீன் சுமந்து கூலி வேலை பார்த்து கூலியாக மீன்களைப் பெற்று விற்று பணம் சேர்க்கிறான். மீன் இனப் பெருக்கத்திற்காக மீன் பிடிக்க 45 நாட்கள் தடை உள்ள காலத்தில், உப்பளத்தில் வேலை பார்க்கிறான். உப்பள முதலாளியின் தங்கை விரும்புவதாக சொன்னதும், தனக்கு ஊரில் காதலி உள்ளாள் என்று உண்மை சொல்கிறான்.

தொடர்ச்சி 30ஆம் பக்கம்


வாய்ப்பும்...வளர்ச்சியும்...
சூப்பர் வருமானம் தரும் EMini S&P500
சில மணி நேரத்தில் வீட்டில் இருந்து கொண்டு $100 இல் இருந்து $1000 வரை சம்பாதிப்பது எப்படி?




முதலீட்டீன் ரகசியங்கள்:
வெற்றிகரமான முதலீடு குறித்து சில முக்கிய ரகசியங்கள் உண்டு. இந்த ரகசியங்கள் பின்பற்றுவதற்கு எளிமையானவை. ஆனால் பலராலும் பின்பற்றப்படாதவை . நீங்கள் அந்த ரகசியத்தை பின்பற்றினால் நிச்சயம் ஜெயிப்பீர்கள். மகாபாரதத்தில் அபிமன்யுவின் கதை நம் எல்லோருக்கும் தெரியும். சக்கரவியுகத்தை அமைத்துக் கொண்டு எதிரிகளை துவம்சம் செய்தவன். ஆனால் அப்பேற்பட்ட வீரனுக்கு அந்த சக்கர வியுகத்திலிருந்து எப்படி வெளியே வருவது என்று தெரியாமல் போனதுதான் விதி.
முதலீட்டாளர்களாகிய நாமும் சரியான நேரத்தில் முதலீடு செய்கிறோம். ஆனால் எப்போது வெளியே வருவது என்று தெரியாததால் இழப்பைச் சந்திக்கிறோம். ஒரு முதலீட்டிலிருந்து எப்போது வெளியே வருவது? நம் தேவையும் எதிர்ப்பார்ப்பும் நிறைவேறிவிட்டால், அடுத்த நிமிடமே அதை காப்பாற்றிக்கொண்டு வெளியே வர வேண்டும். அதை கற்றுக் கொடுக்க நாங்க ரெடி, கற்பதற்கு நீங்க தயாரா? அழையுங்கள் CanBull Futures Trading!

EMini S&P500 டெக்னிக்கல்ப் பார்வை:
1400 WILL PENETRATE TO 1429 AND 1468 TO MAKE A NEW HIGH 1474 & 1487 TO REACH 1505!
1363 WILL SLIDE DOWN TO 1315 AND 1295 TO HIT THE PREVIOUS LOW 1252 & 1100
குறிப்பு: பங்கு சார்ந்த ஃபண்டுகளில் சந்தை ரிஸ்க் உள்ளது என்பதைக் கவனத்தில் கொண்டு முதலீட்டு முடிவை எடுக்கவும்.

THE 5 RICHEST MEN IN THE WORLD




LIVE CHAT ROOM & LIVE FLOOR TRADING

தேவை - பணம்
தேடல் - CanBull Inc
வெற்றி - நிச்சயம்


GTA SQUARE
222-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

# சார்பியல் - 9

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

மாக்ஸ்வெலின் சமன்பாட்டில் மின்காந்த அலைகள் செல்வதற்கு ஒரு ஊடகம் தேவைப்படவில்லை. மின்னதிர்வுகளும், காந்தவதிர்வுகளும் மாறிமாறித் தொடர்ச்சியா-கத் தங்களை உருவாக்கிக் கொண்டே இருக்க, மின்காந்த அலை நகர்கின்றது. இவை ஏற்படுவதற்கு மின்காந்தப் புலம் மட்டும் இருந்தாலே போதும். இந்த மின்காந்தப் புலத்தினை மின்னதிர்வு களினதும், காந்த அதிர்வுகளினதும் இயல்பினால் வெளியானது தானாகவே தன்னுள் உருவாக்கிக் கொள்ளுகின்றது. இதற்கு ஈதர் என்ற ஊடகம் ஏன் தேவை என்று அயன்ஸ்ரைன் கேட்டபோது மாக்ஸ் வெல்லினால் கூட அதனை மறுக்க முடியாதிருந்தது. அப்போதிருந்த அறிவியல் வாதிகள் எல்லோரும் அயன்ஸ்ரைனின் வாதத்தை ஒப்புக் கொண்டார்கள். நியூட்டனின் மீது இருந்த அளவுக்கதிகமான மதிப்பே மாக்ஸ்வெல்லை நியூட்டனின் ஈதர் கருத்தினை உறுதிப்படுத்த வைத்திருக்கும் என்பது ஆய்வாளர்களின் கருத்து. சரி, இப்போது ஈதர் இல்லை என்பது முடிவாகி விட்டது. ஈதர் இல்லாத வெற்றிட வெளியில் லோறன்சின் முடிவுகளை பாவிக்கையில், இயற்பியலின் பெரும் திருப்பம் உண்டாகியது. நேர மெதுமையாக்கல், நீளக்குறுக்கம் என்பவற்றிக்கு இல்லாத ஈதர் எப்படி காரணமாக இருக்க முடியும். இதுதான் அயன்ஸ்ரைனை தெளிவாக உலகத்தினருக்கு இனம் காட்டியதுடன் சார்பியலும் தோன்றிடக் காரணமாகியது.

நான் முன்னர் குறிப்பிட்டு இருந்தபடி, கலிலியோவின் சார்புக் கருத்தில் தனது பொறிமுறை விதிகளை இணைத்து நியூட்டன் செவ்வியலில் சார்புக் கொள்கை ஒன்றினைக் கூறியிருந்தார். அந்தச் சார்புத் தத்துவத்தில் தான் மைக்கல்சன் - மோர்லியின் பரிசோதனை முடிவுகள் போன்ற ஒவ்வாமை-களைக் கண்ட அயன்ஸ்ரைன் திருத்தங்கள் கொண்டுவந்தார். சார்புத் தத்துவமென்றோ சார்பியல் என்றோ தனது திருத்தங்களை அயன்ஸ்ரைன் குறிப்பிடவில்லை. மின்காந்த அலையான ஒளியின் மாறா வேகத்தினை அடிப்படையாகக் கொண்டு, InVariance Theory 'மாறிலிக் கொள்கை' என்ற தலைப்பிலேயே தனது முடிவுகளை அவர் கொடுத்திருந்தார். நாளாவட்டத்தில் அவரது இக்கொள்கையானது விஞ்ஞானிகளினால் சார்புத் தத்துவம் எனக் கூறப்படத் தொடங்கியது. குறிப்பாக ஆன்றி புயின்கரும் குவாண்ரம் கொள்கையின் கதவுகளைத் திறந்தவருமான மாக்ஸ் பிளாங்குமே சார்பியல் எனும் பெருக்கு வித்திட்டவர்கள் என்கிறார்கள். நாங்களும் இப்போது பழக்கத்தில் இருக்கும் சார்புத் தத்துவம் என்றே கூறுவோம். சார்புத் தத்துவம் இரண்டு பகுதிகளைக் கொண்டது என முன்னரே நான் குறிப்பிட்டு இருந்தேன். முதலில் அயன்ஸ்ரைன் சிறப்புச் சார்புத்




தத்துவத்தினையே கூறியிருந்தார். பின்னராக அச்சிறப்புச் சார்புத் தத்துவத்தின் பொதுமை வடிவாக பொதுச் சார்புத் தத்துவத்தினைக் கொடுத்தார். ஆனாலும் இரண்டுமே தனித்தனியான சிறப்புத் தன்மைகளைக் கொண்டவை. நாங்களும் முதலில் சிறப்புச் சார்புத் தத்துவத்தினைப் தெரிந்து கொண்டு பொதுச் சார்புத் தத்துவத்தினைப் பார்ப்போம்.

முன்னதாக, விளம்பரம் வாசகர்களுடன் டிசெம்பர் மாதம் வந்தாச்சு. வழக்கமான விடுமுறை தினங்கள், கிறிஸ்தவர்களின் நத்தார் கொண்டாட்டங்கள் எல்லாம் ஆரம்பித்து இருக்கும். பரபரப்பாகவும்



உற்சாகமாகவும் ஓடியாடித் திரிந்து கொண்டிருப்பீர்கள். ஒன்று கூடல்கள், அன்பளிப்புகள் கொடுத்து வாங்கல்கள், நத்தார்த் தாத்தவின் குதூகலங்கள் என்று ஒரே அமர்க்களமாகத்தான் இருக்கும். இந்த நேரத்தில் எனது நத்தார் வாழ்த்துக்களும், விடுமுறை வாழ்த்துக்களும் விளம்பரம் நிறுவனத்தினருடன் சேர்ந்து அனைவருக்கும் உரித்தாகுக. அடடா, இன்னொன்றும் உள்ளதே! அந்த மாயன் கலண்டர், டிசொம்பர் 20, 2012 என்று ஒன்று இருக்கிறதே! அதனைத் தாண்டித்தானே நத்தா, என்கிறீர்களா! பயப்படாதீர்கள். டிசெம்பர் 20 ஒன்றுமே செய்யாது. பாருங்கள், முன்னவை போலவே இதுவும் புஸ்வாணமாகப் போயிடும். தைரியத்துடன் இருங்கள். வழமை போலவே சகலதும் நன்றாக நடக்கட்டும், நடக்கும். சிறப்பான புதுவருடத்தில் மீண்டும் சந்திக்கிறேன் சிறப்புச் சார்புத் தத்துவத்துடன்.


**- கனி -**
416.261.1348
leptons@hotmail.ca




உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


Train to be a ...
Community Service Worker With CO-OP




Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome
Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA
OACC PROUD MEMBER ontario association of career colleges
You may qualify for SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179
Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
citi COLLEGE
www.CitiCollege.ca
Financial Assistance may be available to those who qualify

தமிழ் இலக்கியத் தோட்டம்
TAMIL LITERARY GARDEN

# நாஞ்சில் நாடனுக்கு இயல் விருது

கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கும் 2012-ம் ஆண்டுக்கான இயல் விருது, மூத்த தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவரும், நாஞ்சில் நாட்டு வட்டார மொழியைத் தமிழ் இலக்கிய வாசகர்களிடையே பிர-பலப்படுத்தியவருமான நாஞ்சில் நாடனுக்கு வழங்கப்படுகிறது. இந்த வாழ்நாள் சாதனையாளர் விருது, கேடயமும் 2500 கனடிய டாலர்கள் மதிப்பும் கொண்டது. சுந்தர ராமசாமி, கே.கணேஷ், வெங்கட் சாமிநாதன், பத்மநாப ஐயர், ஜோர்ஜ் எல் ஹார்ட், தாசீசியஸ், லட்சுமி ஹோம்ஸ்ரோம், அம்பை, ஐராவதம் மகாதேவன், கோவை ஞானி, எஸ்.பொன்னுத்துரை, எஸ்.ராமகிருஷ்ணன் ஆகியோரைத் தொடர்ந்து, இவ்வருடம் நாஞ்சில் நாடன் அவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

ஜி.சுப்பிரமணியம் என்ற இயற்பெயர் கொண்ட நாஞ்சில் நாடன், பம்பாய் தமிழ் சங்கம் வெளியிட்டு வந்த “ஏடு” இதழில் தன் இலக்கியப்பணியைத் தொடங்கினார். 1975-ம் ஆண்டு வெளிவந்த “விரதம்” சிறுகதையில் தொடங்கி, முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதிவருகிறார். இருபத்தைந்து வயதிலேயே வேலை நிமித்தமாக சொந்த ஊரை விட்டுச் சென்றிருந்தாலும் இவரது படைப்புகளில் நாஞ்சில் நாட்டு மக்களும், மொழியுமே பிரதானமாக வெளிப்படுகின்றன. இவர் சங்க இலக்கியங்களிலும் கம்பராமாயணத்திலும் நல்ல பயிற்சியும் ஈடுபாடும் கொண்டவர். இதுவரை 6 நாவல்கள், 9 சிறுகதைத் தொகுப்புகள், 6 கட்டுரைத் தொகுப்புகள், 2 கவிதைத் தொகுப்புகள் என வெளியிட்டுள்ளார்.



சிறுகதைகளுக்கான இலக்கியச் சிந்தனை விருது (1975, 1977, 1979), தமிழக அரசின் சிறந்த நாவலுக்கான விருது (1993), கண்ணதாசன் விருது (2009), கலைமாமணி விருது (2009) எனப் பல்வேறு விருதுகளைப் பெற்ற இவர், “சூடிய பூ சூடற்க” சிறுகதைத் தொகுப்புக்காக 2010-ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதையும் பெற்றுள்ளார். இவரது நாவல்களும், சிறுகதைகளும் தமிழ்நாடு, கேரளா மற்றும் டெல்லியிலுள்ள பல்கலைக்கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை 14 பேர் இவரது படைப்புகளை முன்வைத்து முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவரது “தலைகீழ் விகிதங்கள்”, “எட்டுத் திக்கும் மதயானை” நாவல்கள் திரைப்படங்களாக்கப்பட்டுள்ளன. தவிர, இயக்குநர் பாலாவின் “பரதேசி” திரைப்படத்திற்கு வசனமும் எழுதியுள்ளார்.

“அங்கீகாரம் மூலம் எழுத்தாளன் உருவாவதில்லை. ஆனால் எழுத்தாளன் திரும்ப எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே ஒன்று அங்கீகாரம் மட்டுமே” என்று சொல்லும் நாஞ்சில் நாடன் அவர்களுக்கு, 2012ம் வருடத்து இயல் விருது எதிர்வரும் ஜூன் மாதம் ரொறொன்ரோவில் வழங்கப்படும்.



**Free Real Estate Class**

Free Realestate Class

Call:

**416.321.6969**






Siva Mailvaganam Direct: 416 230 2991

Fax: 416 298 4664 Email: Rajah.Siva@yahoo.ca

80 Nashdene Rd Unit B 25-26 Ontario M1V 5E4

Build An Investment & Protection For Your Loved Ones



BONUS: Arrange The Best Auto & Home Insurance Rates In The GTA

| AGE | FEMALE | | MALE | | TAX FREE MONEY |
|---|---|---|---|---|---|
| | PER MONTH | MAX COST | PER MONTH | MAX COST | |
| 25 | $125.55 | $30,091 | $153.29 | $36,789 | $250,000 ++ |
| 30 | $170.68 | $40,992 | $193.71 | $46,470 | |
| 25 | $198.55 | $47,652 | $271.26 | $65,102 | $500,000 ++ |
| 30 | $288.61 | $69,266 | $350.50 | $84,127 | |

20 YRS PAY OUT PLAN

- Super Visa (100% REFUNDABLE)
- RRSP (SAVE 40%)
- RESP (SAVE UP TO $9200)
- Critical Illness Insurance (100% CASH BACK)
- Life Insurance
- Non-Medical Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Travel Insurance

RBC Royal Bank IA Pacific BMO Canada Life Manulife Financial Assumption Life

We're Hiring! Telemarketer, one who can speak Tamil & English. Please contact 416 230 2991

GLORIOUS PRINT 905 471 2500

# ‘நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்’

## திரை விமர்சனம்

நாளை திருமண வரவேற்பு, அதற்கு அடுத்த நாள் கல்யாணம்... இந்நிலையில் புதுமாப்பிள்ளை நண்பர்களின் அறைக்கு வருகிறார். பொழுதுபோக கொஞ்ச நேரம் கிரிக்கெட் ஆடலாம் என்று கிளம்புகிறார்கள். பறந்து வந்த பந்தை பிடிக்கும் போது கீழே விழுந்து புதுமாப்பிள்ளைக்கு பின் தலையில் அடிபட்டுவிடுகிறது. அதிலும் குறிப்பாக ‘மெடுலா’வில் அடிபட்டு விடுவதால், கல்யாணம் செய்யப் போகும் காதலி உட்பட கடந்த ஒரு வருடங்களில் நடந்த எல்லாவற்றையும் மறந்துவிடுகிறார். மேலும், இப்போது அவர-்டம் சொல்வதையும் உடனுக்குடன் மறந்து போய்விடுகிறார். இந்தப் பிரச்சினை பெண் வீட்டுக்குத் தெரிந்தால் திருமணம் நடத்தவிட மாட்டார்கள். நண்பர்கள், இது விரைவில் சரியாகிவிடும் என்ற நம்பிக்கையில் கல்யாணப் பெண்ணிடமும் வீட்டாரிடமும் மறைத்து கல்யாணத்தை நடத்தி வைக்க ஏற்பாடு செய்கின்றனர். எப்படியாவது திருமணத்தை நடத்திவிட நண்பர்கள் படும்பாடுதான் மொத்த படமும்.

**- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

இதனை நகைச்சுவையுடன் சொல்லி, இறுதியில் அழகான நட்பை நம் கண் முன் காட்டி நெகிழ வைப்பதுடன், இது நிஜக் கதை என்று வேறு இறுதியில் போட்டுக் காட்டுகிறார்கள். படம் துவங்கியது முதல் தொடங்கி முடியும் வரை சிரிப்புத்தான். சில இடங்களில் குலுங்கி குலுங்கியும் பல இடங்களில் விழுந்து விழுந்தும் சிரிக்க வேண்டியிருக்கும். படத்தில் அவ்வளவு நகைச்சுவை.

புதுமாப்பிள்ளையாக விஜய் சேதுபதியும், அவரது நண்பர்களாக ராஜ்குமார், விக்னேஷ், பகவதி பெருமாள் ஆகியோரும் நடித்திருக்கிறார்கள். ‘பீட்சா’ படத்தைப் போலவே இதிலும் விஜய் சேதுபதி புகுந்து விளையாடியிருக்கிறார். பக்கத்து வீட்டு பையன் போல பாந்தமாக இருந்தாலும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சின்ன சின்ன முகபாவங்களில் கலக்குகிறார். ‘என்ன ஆச்சு, கிரிக்கெட் விளையாண்டோம், நீ பால் போட்ட, இவன் அடிச்சான். பால் மேல போச்சா’ நான் கேட்ச் பிடிக்கப் போனேன். அப்ப கால் சிலிப் ஆயிருச்சா? அதுக்கப்புறம்



என்னாச்சி?” என்று கேட்டபடியே, ‘பின்னாடி அடிபட்டிருச்சு இல்லையா? மெடுலாவில அடிபட்டிருக்கும் அதான். இப்ப ஒண்ணும் ப்ராப்ளம் இல்லை, கொஞ்சம் நேரத்தில சரியாயிரும்” என்று ஐந்து நிமிடத்திற்குகொரு இதையே சொல்லிக் கொண்டேயிருக்கிறார். சொன்ன வசனங்களையே படம் நெடுக திரும்ப திரும்ப சொன்னாலும் பார்வையாளர்களை முடிந்தவரை சோர்வடையாமல் வைப்பதற்காகவே இவரை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.

திருவாசகத்தில் இறைவனைத் தேசனே! என்றும் மாணிக்கவாசகர் அழைத்து வணங்கினார். கடவுள் நல்ல தேசத்தைப் போன்றவன் என்றும் கருத்துண்டு. தேசனே! தேனார் அமுதே சிவபுரனே என்பன அவருடைய வாக்கியங்கள். கடவுள் தேசத்திற்குச் சமமானவன் என்பது போன்றே தேசமும் கடவுளுக்குச் சமமானது. கடவுளைத் தொழுகின்ற நாம் தேசத்தையும் தொழ வேண்டும். கடவுளைத் தேடுகின்ற நாம் தேசத்தையும் தேடவேண்டும். தேசத்தைத் தேடுதல் என்ற தேடலில் நமக்கு இரண்டு கடமைகள் உண்டு. வாழவைக்கும் தேசத்தைத் தொழ வேண்டும். பேணவேண்டும். வாழ்ந்த தேசத்தை எண்ண வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். வாழ்ந்த தேசம் இருக்கிறது தானே இதிலே என்ன தேடல் வேண்டியிருக்கிறது? என்ற கேள்வியும் சிதைந்து போய் கிடக்கறதே இனித் தேடி என்ன பயன்? என்ற கேள்வியும் நம்மவர் சிலருக்கு உண்டாகியிருக்கலாம். உனக்கும் நமது நண்பர்களுக்கும் இரண்டாம் கேள்வி இல்லை என்பது எனக்குத் தெரியும். பொதுப்புத்தியின் பேதலிப்புக்காகச் சொன்னேன். படைஎடுப்பும் தடை உடைப்பும் பக்க பலம்களும் பயன் தராமல் போய்விட்டது. நீதியே நீ எங்கு நிற்கிறாய் என்று கேட்டு ஏங்கிய இதயங்கள் எத்தனை? கடவுளையும் தீட்டிய கணங்கள் எத்தனை?

நண்பா!
நம்பிக்கையை விடக்கூடாது. கடவுளையும் விடக்கூடாது. நம்முடைய முயற்சிகளையும் விடக்கூடாது 'அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் இன்றி எடுத்த காரியம் கைகூடாது' என்ற அனுபவ வாக்கியங்களில்' ஆகும் நாள் ஒன்றை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும் என்கிறது. கைகூடாது என்ற சலிப்புக்கு இடம் கொடுக்காதே. கட்டுண்டோம் பொறுத்திருப்போம் 'காலம்' வரும் என்ற பாரதியின் நம்பிக்கை உணர்வை உள்ளத்தில் தேக்கி வைத்திரு. நமது முயற்சிகள் என்றேனே! அவற்றில் முதன்மையானது நமக்குள் இருக்கும் மாயைகளை, மயக்கங்களை விலக்கி நாம் தெளிவடைய வேண்டும். அறிவும் அதன் தெளிவும் முக்கியமானது. தேறலின் தெளிவே சிவபெருமானே! என்கிறது திருவாசகம். மனத்தெளிவுதான் மகிழ்ச்சியை தரும். தெளிவுக்குப் பின்புதான் திழைக்க முடியும். நண்பா! 'ஐந்து பேறிவும் கண்களே கொள்ள' என்ற சேக்கிழாரின் பெரிய புராணத்தில் 'வந்த பேரின்ப வெள்ளத்துள் திழைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்' சுந்தரமூர்த்தி நாயனார் என்றார். நம்முடைய குணங்கள் சாத்துவிகமாக வேண்டும். நமக்குள் இருக்கும் ஐந்து புலன்களும் அவை தோன்றும் பொறிகளும் நமது கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும். ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைந்து செயல் வடிவம் கொள்ள வேண்டும். அப்பொழுதே நாம் மாறிலா மகிழ்ச்சியில் மலரமுடியும். சுயநிர்ணயங்கள், உரிமைகள் கிடைக்கப்பெற்று தாயகம் மலர வேண்டும். யாரெங்கும் பகை கொள்ளாத எம்மவர்களின் தன்னாட்சி மலர வேண்டும். இவற்றிற்கு இரண்டு காரியங்கள் நடந்தாக வேண்டும். ஒன்று அவர் மனம் மாற வேண்டும். அல்லது அவர் ஆட்சி மாறவேண்டும். என்ன யோசிக்கிறாய்? ஆட்சியில் இருப்பவர்கள் நல்லவர்களாய் இருக்க வேண்டும். இல்லையேல் மந்திரதந்திரங்களையாவது அவர்களை நல்லவர்களாக்க வேண்டும்' என்ற ஏதென்ஸ் நகரத்து சோக்கிரட்டீசின் மாணவன் பிளாட்டோ சொன்னது நினைவுக்கு வருகிறதா?


நண்பா!
திருவாசகத்திலே மாயைப்படையை வெல்வதற்கு மணிவாசகர் பிரபஞ்சப்போர் நிகழவேண்டும் என்றார். திருப்படை எழுச்சி எழுந்து பரவவேண்டும்



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

Accounting & Tax Services



• Book keeping • Preparation of monthly & year - end financial statements • Filing of annual corporate returns • Payroll • Periodical HST & WSIB returns • Personal tex planning & preparation of returns • CRA audit representation

Guru: 647.400.8730 / Nithi: 416.219.4902
E-mail: accounting.taxservices@hotmail.com

# துப்பாக்கி

இராணுவ சேவையிலிருந்து 40 நாள் விடுமுறைக்கு வீடு வருகின்ற கதாநாயகனின் கதை இது. தொடக்கத்தில் இது சாதாரண விடுமுறையில் இருப்பது போல் இருக்கும். பின்னர் தீவிரவாதிகளை இரகசியமாக துரத்தும் வேலையாக மாறுகிறது. முதலில் பெண் பார்க்கும் நகைச்சுவையான கதையாகத் தொடங்குகிறது. பின்னர் பஸ்ஸில் செல்லும் போது ஒரு பணப்பை காணாமல் போகிறது. பொலீஸ் திருடன் விளையாட்டுப் போல், பஸ்ஸை கதாநாயகன் நிறுத்துகிறான். எதிர்பாராதபடி பஸ்ஸில் குண்டு திடீரென வெடிக்கிறது. திருடனை பிடிக்க நினைத்த கதாநாயகன், தீவிரவாதியை பிடிக்கத் தொடருகிறான்.

குண்டு கொண்டுவந்தவரின் மூலம் கதாநாயகன் ஒரு 'Sleeper Cell' குழுவை கண்டு பிடிக்கிறான். கதாநாயகனும் அவரது இராணுவ நண்பர்களும் அவர்களில் சிலரை அழிக்கின்றனர். இதனால் Sleeper Cell இன் தீவிரவாத தலைவரின் நோக்கம் கதாநாயகனுக்கு எதிராக மாறுகிறது. தீவிரவாதி கதாநாயகனின் நண்பர்களை கண்டுபிடிக்கிற திட்டம் ஒரு பக்கமும், தீவிரவாதியை கண்டுபிடித்து, Sleeper Cell ஐ உயிரைக் கொடுத்து அழிக்க முயலும் கதாநாயகனின் திட்டம் மற்றப் பக்கமும் இருக்கிறது. அதற்குப் பிறகு என்ன நடக்கிறது என படம் பார்த்தறிய வேண்டும், ஏன் என்றால் இனி படத்தின் கருத்துக்களைப் பார்ப்போம்.

முதல் Sleeper Cell ஐப்பற்றி பார்ப்போம். Sleeper Cell என்பது சாதாரண மக்கள் என சொல்லலாம். நாட்டின் மீது ஏதோ காரணத்தால் கோபமாக இருப்பவர்களை தீவிரவாதிகள் கண்டுபிடித்து ஒரு வேலையை செய்யச் சொல்லுவார்கள். இவர்கள் ஒரு Sleeper Cell இல் இருக்கும் Sleeper Agent என அழைக்கப்படுவர். இவர்கள் தீவிரவாதிகளிடம் இருந்து உத்தரவு வரும்வரை சாதாரண மக்களாக வாழ்வார்கள். இதிலிருந்து தான் Sleeper Cell எனப் பெயர் வந்தது. எந்நேரத்திலும்,



தீவிரவாதிகளின் கட்டளையை நிறைவேற்றத் தயாராக இருப்பார்கள்.

Sleeper Cell இல் இருக்கும் ஆட்களுக்கு, பொதுவாக அவரது Cell இல் இருக்கும் மற்ற Agent களை பற்றித் தெரியாது. அவர்களுக்கே தாங்கள் தீவிரவாதிகளுக்கு உதவுகின்றார்கள் என்று சிலவேளை தெரியாது. இது தீவிரவாதிகளுக்கு பாதுகாப்பை கொடுக்கிறது.

இதனால் தான் கதாநாயகன் Sleeper Cell இன் தலைவரை தன் உயிரைக் கொடுத்தாவது கண்டுபிடிக்க வேண்டுமென்று நினைக்கின்றான். தலைவரை கொன்றுவிட்டால் Sleeper Cell களுக்கு உத்தரவுவராது. அவர்கள் எப்போதும் 'Sleeper Cell 'ஆகத்தான் இருப்பார்கள். கதாநாயகனின் இந்த உயிர்த் தியாகம் செய்யும் எண்ணமும் இராணுவத்தில் உள்ளவர்கள் செய்யும் தியாகமும் அவர்களது குடும்பமும் தான் துப்பாக்கியின் முக்கிய கருத்து. அளவான கற்பனையுடனும், உண்மை கலந்தும் இருப்பதால் இது ஒரு நல்ல பொழுதுபோக்கு படமாக இருக்கிறது.

அதற்கும் மேலாக இராணுவத்தில் உள்ளவர்கள், நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் உயிர்த் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்று 'துப்பாக்கி' நினைவூட்டுகிறது. அவர்களது குடும்பத்தவர்களும் அவர்களை நாட்டுக்காக இழக்கத் தயாராக இருக்கிறார்கள் எனவும் நினைவூட்டுகிறது. நாங்கள் இராணுவத்தினரையும், அவர்களது குடும்பங்களையும் மதிக்கவும், நன்றி கூறவும், நாட்டுக்கா உயிர் நீத்தவர்களை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் என்பதை 'துப்பாக்கி' அறிவுறுத்துகிறது.



ஞா. ஆரணி

அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# சங்க இலக்கியத்தில் காதல் காட்சிகள்



**- த. சிவபாலு -**

B.Ed (Hons), M.A

பழந்தமிழ் இலக்கியம் பொருட்செறிவும் கருத்தாளமும் மிக்கவையாக புலவர்களின் திறன்மிகு செய்யுள்ளால் வெளிப்படுகின்றன. அக்காலத்து வாழ்வியலை மிக நுட்பமாக செய்யுட்களில் தந்துள்ளமையை அவற்றை கற்கும்போது தெற்றென விளங்கும் தன்மைத்தன. அன்றில், கவரிமான் போன்றன மக்களின் காதல் வாழ்வியலைச் சித்திரிக்க உதாரணங்களாக எடுத்தாளும் பாங்கு தனிப்பாங்காக உள்ளது. நேரிடையாக வாழ்வியலை அல்லது மக்களது உள்ளக் கிடக்கை களைக்காட்டாது இயற்கையில் உள்ள பறவைகள் விலங்குகளை உதாரணம் காட்டி விளக்குமாற்றாய் அமைகின்றது. நற்றிணையில் வரும் ஒரு பாடலை நோக்குவது பொருந்தும். கீரங்கண்ணனாரின் இப்பாடல் உவமான உவமேயத்தை இயற்கையோடு ஒட்டியதாகக் காட்டி சங்ககால வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

ஞாயிறுஞான்று கதிர்மழுங் கின்றே
எல்லியும், பூவீகொடியிற் புலம்படைந்தன்றே
வாவலும் வயின்தொறும் பறக்குஞ்சேவலும்
நகைவாய்க் கொளீஇ நகுதொறும் விளிக்கும்
ஆயாக் காதலோடு அதர்ப்படத் தெளித்தோர்
கூறிய பருவங் கழிந்தன்று பாரிய
பராரை வேம்பின் படுசினை யிருந்த
குராஇல் கூகையும் இராஅ இசக்கும்
ஆனா நோயடவருந்தி யின்னுந்
தமியேன் கேட்குவென் கொல்லோ
பரியரைப் பெண்ணை அன்றிற் குரலே.

- கிடங்கில் கீரங்கண்ணனார்

தலைவனைக் காணாத தலைவி தனது கவலையை தோழிக்குக் கூறுகின்றாள். சூரியனும் சாய்ந்துவிட்டதே, ஒளிக்கதிர்களின் வீச்சு மறையத்தொடங்கிவிட்டன. இருள் மலர்களை உதிர்த்த கொடியினைப் போல சோர்வுறுவது போன்று இரவு வந்து எனது மனதைத் துன்புறுத்துகின்றதே. வௌவால் எங்கும் பறந்து கொண்டிருக்கின்றதே. உவகை கொள்ளும்போதெல்லாம் ஆண் ஆந்தை தன் பேட்டு ஆந்தையை அழைக்கின்றதே! எனது காதலன் வருவதாகச் சொன்ன காலமும் கடந்துகொண்டிருக்கின்றதே! பட்டுப்போன்ற வேப்ப மரத்தின் மீது கபில நிறமுடைய கூவை ஒன்று இரவெல்லாம் அலறிக்கொண்டிருக்கின்றதே. இவற்றைவிட பருத்துத் திரண்ட அடியினை உடைய பனைமரத்தின் மடலில் இருந்து அன்றில் பறவை தன் துணையைக் கூவி அழைப்பதைக் கேட்டுக்கொண்டு நான் எங்கனம் கேட்டுக்கொண்டு தனிமையில் தூங்குவேன், எனத் தனது காதல் தவிப்பைத் தோழிக்கு உணர்த்துகின்றாள். ஆந்தை தனது துணையைக் கூவி அழைக்கின்றதே. ஆனால் எனது தலைவனோ என்னிடம் அந்த அந்தச் ஆந்தையைப்போல அன்பாய் இல்லையே என்கின்றாள். என்மீது அன்பாய் இருந்தால் என்னை நாடி இந்த இரவுவேளையில் வந்து எனது விருப்பத்தை நிறைவேற்றுவாரே! அவர் வராததன் மர்மம் என்மீது அன்பாய் இல்லை என்பதே என அவள் ஆந்தையையும் அன்றிலையும் உதாரணத்தால் கூறி தனது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றாள் தலைவி.

**Free Real Estate Class**
Free Realestate Class Call:
**416.321.6969**

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

# நானும் மகளும்

என் மகள் பிறந்து மூன்று மாதத்திலேயே அவளுக்கு என் முகம் பரிச்சயமாகிவிட்டது. என் முகத்தை தொட்டிலுக்கு மேலே கண்டதும் உடம்பை தூக்கி தூக்கி அடிப்பாள். தன்னைத் தூக்கவேண்டும் என்ற செய்தியை அப்படித்தான் முழு உடம்பாலும் சொல்வாள். வெகு சீக்கிரத்திலேயே நான் வீட்டை விட்டு வெளியே போகமுடியாமல் போனது. கதவு திறக்கும் சத்தம் கேட்டதும் அந்த திசையில் திரும்பி பார்த்து அழத் தொடங்குவாள். நான் வெளியே போகிறேன் என்பது அவளுக்கு எப்படியோ தெரிந்துவிடும். அதன் பின்னர் அவள் தூங்கும் சமயமாக நான் வெளியே புறப்படும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டேன். மகளுக்கு இரண்டு வயது நடந்தபோது என்னை ஆச்சரியப்படுத்த ஆரம்பித்தாள். நான் எப்போவாவது பயணம் புறப்பட ஆரம்பித்தால் உடனேயே அழத் தொடங்கி திரும்பி வரும்வரை நிறுத்த மாட்டாள். இதனால் என் பயணங்கள் தடைபட்டன. அவளிடம் துணியினால் செய்த ஒரு குரங்குப் பொம்மை இருந்தது. நீண்ட கால்கள் நீண்ட கைகள் கொண்ட மிருதுவான கறுப்பு பொம்மை. பெயர் கூழாங்கல். அதைக் கட்டிப்பிடித்தபடிதான் தூங்குவாள். ஒருமுறை நான் பயணம் புறப்பட்டபோது என் பயணப் பெட்டியில் அந்தக் குரங்கு பொம்மையை எனக்குத் தெரியாமல் ஒளித்து வைத்துவிட்டாள். தனக்கு பதிலாக குரங்கு பொம்மை எனக்கு துணையாக இருக்கும் என்ற நம்பிக்கைதான் காரணம். ஆனால் என்னாலோ போன வேலையை திருப்தியாக பார்க்க முடியவில்லை. பாதியிலேயே திரும்பி வீட்டுக்கு வந்துவிட்டேன்.

**- அ. முத்துலிங்கம் -**

மகளிடம் இன்னொரு திறமை இருந்தது. நான் பயணம் புறப்படப்போவது தெரிந்ததும் அவள் உடம்பு சுடத் தொடங்கும். அவளாகவே வந்து என்னிடம் நெற்றியை தொட்டுப் பார்க்கச் சொல்வாள். பின்பு சுருண்டு படுத்துக்கொள்வாள். நான் பயணத்தை நிறுத்தியதும் சொல்லி வைத்தாற்போல பழைய நிலைக்கு திரும்பி, தன்பாட்டுக்கு விளையாட ஆரம்பிப்பாள். எப்படி உடம்பு உஷ்ணத்தை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறாள் என்பது ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஒரு முறை எனக்கு கையிலே காயம் பட்டு மருத்துவர் கட்டுப் போட்டு விட்டார். அவளுக்கும் அப்படி போடவேண்டும் என அடம் பிடித்தாள். அவளுக்கும் கட்டு போடப்பட்டது. நான் கட்டை அவிழ்க்கும்வரை அவளும் கட்டுப்போட்ட கையுடன்தான் பெருமையாக உலாவினாள். விடுமுறை நாட்களில் என்னுடைய ஒரு சேர்ட்டை எடுத்து 'தோளா மாளா' என மாட்டிக்கொள்வாள். அது அவளுடைய கணுக்காலையும் மறைத்து தரையைக் கூட்டும். அன்று முழுக்க அதை அணிந்தபடியே விளையாடுவாள். அதை போட்டுக்கொண்டே படுக்கைக்கும் போவாள். ஒரு முறை இஞ்சி பிஸ்கட் செய்தாள். அவளாகவே தலை செய்து அவளாகவே கால்களும் செய்து சூட்டடுப்பில் வேகவைத்தது. தலை ஒரு பக்கமாகவும் கைகால்கள் வேறு பக்கமாகவும் கோணல் மாணலாக வந்திருந்தது. ஆனால் அப்படி அவளிடம் சொல்லக்கூடாது. சொன்னால் அணை உடைத்ததுபோல கண்ணிலிருந்து வெள்ளம் பொங்கும். 'ஆஹா, என்ன அழகு. என்ன அழகு' என்று சொல்லவேண்டும். ஆசையாகத் தந்தாள் என்று வாய்வைத்து கடித்துவிட்டேன். பலத்த அழுகை தொடங்கியபோது நான் ஆச்சரிப்பட்டேன். அந்த பிஸ்கட் பார்ப்பதற்குத்தானாம். சாப்பிடுவதற்கு அல்லவாம்.

அவள் எழுதப் பழகியதும் தன் திறமையை புதிய வழிகளில் வெளிப்படுத்த ஆரம்பித்தாள். அப்பொழுதுதான் ஒவ்வொரு எழுத்தாக எழுத்துகூட்டி எழுதத் தொடங்கியிருந்தாள். பேப்பர் துண்டுகளில் குறிப்புகள் எழுதிவைத்து என்னை ஆச்சரியப் படுத்துவதற்குத்தான் முதலிடம். ஒரு வார்த்தை இரண்டு வார்த்தைகளில் நான் உங்களை நேசிக்கிறேன் என்றோ விரைவில் வாருங்கள் என்றோ நான் எடுத்துப் போகும் முக்கியமான அலுவலக பத்திரங்களில் எழுதிவிடுவாள். வசனங்கள் எழுதக் கற்றுக்கொண்டதும் புத்தகங்களிலும் குறிப்பேடுகளிலும் தான்தோன்றித்தனமாக எழுதிவைக்க ஆரம்பித்தாள். ஒரு முறை என் டயரியை திறந்து ஒரு தேதியை தேர்வு செய்து அந்தப் பக்கம் முழுவதும் பெரிய எழுத்தில் 'இந்தப் பக்கத்தில் இன்று ஒன்றுமே எழுத வேண்டாம். என்னைப்பற்றி நினைத்தால் போதும்' என்று எழுதி வைத்தாள். எந்த நேரம் என்ன செய்வாள் என்பதை ஊகிக்கவே முடியாது.

மகளுக்கு ஐந்து வயதாகியபோது அவளுக்கிருந்த அபூர்வ ஞாபகசக்தியை தற்செயலாகக் கண்டுபிடித்தேன். ஞாபகத் திறனின் பிதா என அறியப்பட்டவர் கிரேக்க கவி சிமோனைட்ஸ் என்று சொல்வார்கள். 2500 வருடங்களுக்கு முன்னர் கிரேக்கத்தில் ஒரு விருந்து நடந்துகொண்டிருந்தது. ஒரு சேவகன் செய்தி ஒன்று கொண்டுவந்ததால் அவனைச் சந்திக்க கவி சிமோனைட்ஸ் மண்டபத்துக்கு வெளியே சென்றார். அந்தச் சமயம் விருந்து மண்டபம் இடிந்து விழுந்து விருந்திலே கலந்துகொண்ட அத்தனை பேரும் ஒரே சமயத்தில் இறந்துபோனார்கள். அப்போது சிமோனைட்ஸின் மனக்கண்ணில் விருந்தினர்கள் இருந்த வரிசையும் அவர்கள் முகங்களும் பெயர்களும் ஒழுங்காக ஞாபகத்தில் வந்தன. இறந்த அத்தனை பேரையும் வரிசைப்படி அவரால் ஒப்பிக்க முடிந்தது. அப்படி ஓர் ஆற்றல் இருப்பது அவருக்கு அன்றுதான் தெரிந்தது. யூதர்களுடைய மதநூல் தல்முத் 5422 பக்கங்கள் கொண்டது. மதகுருக்கள் அந்த நூலை மனனம் செய்யவேண்டும். எந்தளவு என்றால் ஓர் ஊசியை எடுத்து முதல் பக்கத்தில் உள்ள ஒரு வார்த்தையின் மேல் குத்தினால் அந்த ஊசி 5422 பக்கங்களையும் துளைத்துக்கொண்டு போகும். மதகுருமார் அந்த ஊசி எந்த எந்த வார்த்தையை துளைத்துக்கொண்டு போனது என்பதை சொல்லவேண்டும். ஞாபகத் திறனை வளர்க்க அப்படி கடுமையான பயிற்சி. என்னுடைய மகள் அப்படி ஒரு பயிற்சியும் எடுக்கவில்லை. ஒருநாள் பாடப் புத்தகத்தை படித்துவிட்டு அதை முழுவதுமாக ஒப்பித்தாள். எந்தப் பக்கத்தில் ஒரு வார்த்தை முடிகிறது அடுத்த பக்கத்தில் என்ன வார்த்தை தொடங்கிறது என்பதுகூட அவளுக்குத் தெரிந்தது. நான் மகிழ்ச்சிப்பட வில்லை. நான் சொன்னேன். 'மனனம் செய்வது நல்லதல்ல. அது சிந்திக்கும் திறனை அழித்துவிடும்.' அவள் அழத் தொடங்கினால் கண்ணீர் முடியுமட்டும் அழுவாள். அன்று முழுக்க அழுது கொண்டேயிருந்தாள். அடுத்தநாள் காலை நான் கண்விழித்தபோது எனக்கு முன்னால் நின்றாள். எத்தனை மணிநேரம் அங்கே நின்றாள் என்பது தெரியாது. இரவு முழுக்க யோசித்து வைத்த ஒரு கேள்வியை கேட்டாள். 'மூளையிலே பதிந்து கிடப்பதை அழிப்பதற்கு நான் என்ன செய்யவேண்டும்?' நான் திடுக்கிட்டுப் போனேன். நியாயமான கேள்வி. நான் சொன்னேன் 'அது தானாக மூளையில் பதிந்தால் நல்லதுதான். நீ சிமோனைட்ஸ்போல அல்லது யூத மதகுருபோல வருவாய்' என்றேன். அவளுக்கு அவர்கள் யார் என்று தெரியாது. ஆனால் நான் புகழ்வது புரிந்தது. நனைந்த கண்களினால் சிரித்தாள். சமாதானம் உண்டாயிற்று. அவள் பாடப் புத்தகங்கள் படிப்பதும் வித்தியாசமானது. மற்றவர்கள் போல மேசையில் அமர்ந்து படிப்பது கிடையாது. அவள் படிப்பது மேசைக்கு கீழ்தான். அந்த பழக்கம் எப்படி ஏற்பட்டதோ தெரியாது. மேசைக்கு கீழே வயிற்றிலே படுத்தபடி படித்துக்கொண்டிருப்பாள் அல்லது எழுதுவாள். அவளுடைய இரண்டு குட்டிக் கால்கள் வெளியே நீட்டிக்கொண்டிருக்கும். அந்தக் கால்களைக் கடந்து நாங்கள் போவதும் வருவதுமாக இருப்போம். வீடு ஒரு பக்கம் தீப்பற்றி எரிந்தாலும் அவளுக்கு தெரியவராது. இடத்தைவிட்டு அசைய மாட்டாள். செய்யும் வேலையில் அத்தனை முனைப்பு. அது எங்களுக்கு பழகிவிட்டது. அந்தக் கால்களைக் காணாதபோதுதான் தேடத் தொடங்குவோம்.

அப்போது என் மகளுக்கு பத்து வயதிருக்கும். இரவு எட்டு மணியானதும் வழக்கம்போல வந்து குட்நைட் சொல்லி விட்டு போய் தன் படுக்கையில் படுத்து விட்டாள். இப்படி போய் படுப்பவள் வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் நாங்கள் காலையில் எழும்பும்போது எங்கள் படுக்கையில் படுத்திருப்பாள். எப்போது வந்து படுத்தாள் என்பது எங்களுக்கு தெரியாது. இத்தனை ஞாபக சக்தி உள்ள அவளுக்கு ஒன்றுமே ஞாபகம் இராது. ஒருநாள் அவள் வழக்கம்போல படுக்கப் போய்விட்டாள். நான் ஏதோ வேலையாக இருந்து படுக்கைக்கு இரவு ஒரு மணியளவில் போனேன். ஆனாலும் வழக்கத்தில் செய்வதுபோல குழந்தைகளைப் பார்த்துவிட்டு போக நினைத்தேன். மகளின் அறைக்கு சென்று கன்னத்தை தொட்டுப் பார்த்தேன். அதிலே கண்ணீர் வழிந்து ஒடிக்கொண்டிருந்தது. சற்றுநேரத்துக்கு முன்னர்தான் அவள் தூங்கியிருந்தாள் என்று நினைக்கிறேன். ஆனால் கண்ணீர் தூங்கவில்லை. அந்த வயதில் அவளுக்கு என்ன அத்தனை துயரம். வீட்டிலே யாராவது ஏதாவது சொன்னார்களா? அல்லது ஆசிரியர்கள் யாராவது திட்டினார்களா? சிநேகிதிகளுடன் பிரச்சினையா? அடுத்தநாள் காலை கேட்ட போது அப்படி ஒன்றும் இல்லை என்று சாதித்துவிட்டாள். ஆனால் ஏதோ ஒரு துயரம் அவளை வாட்டியது. பகிர்ந்து கொள்ள முடியாத துயரம். அதை நினைக்கும் போதெல்லாம் இன்றைக்கும் என் நெஞ்சு பிசையும். ஆச்சரியப்படுத்துவதற்கு அவள் தேர்வு செய்வது பயணப்பெட்டிகள்தான். ஒருமுறை பயணப்பெட்டி உள்பையினுள் சிறு செய்தி எழுதி வைத்துவிட்டாள். அது வழக்கம்போல எனக்கு தெரியாது. நான் பயணத்தின்போது அதைப் பார்க்கவில்லை. அதற்குப் பின்னர் அந்தப் பெட்டியை காவிய படி போன அத்தனை பயணங்களிலும் அது கண்ணில் படவேயில்லை. பத்து வருடம் கழித்து மகள் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்த சமயம் அதை நான் தற்செயலாகக் கண்டேன். அதில் இப்படி எழுதியிருந்தாள். இரண்டு நாள் பயணம் போனபோது எழுதியிருக்கவேண்டும். '2880 நிமிடங்கள். நான் ஒவ்வொரு நிமிடமாகக் கழித்துக்கொண்டு வருகிறேன்.' இதில் ஆச்சரியப்படுத்தும் விசயம் என்னவென்றால் அந்த துண்டை கண்டுபிடித்த வேளை அவள் வெளிநாட்டில் படித்ததால் நான்தான் ஒவ்வொரு நிமிடமாகக் கழித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு தகப்பனுக்கும் மகளுக்கும் இடையேயான உறவு மகளின் திருமணத்துக்கு பின்னர் தேய்ந்து விடுவதில்லை. மாறாக புது வேகம் பிடித்து வளரும். ஆனால் இந்த உறவினைப்பற்றி பழைய இலக்கியங்கள் பேசியதில்லை. புலவர்கள் பாடியதில்லை. ஆனால் தாய்க்கும் மகளுக்குமான உறவு அல்லது மகளுக்கும் செவிலித்தாய்க்கும் இடையே உள்ள உறவு பற்றி நிறைய பாடல்களில் இருக்கின்றன. மனத்திலே ஆழ்ந்த வலியுண்டாக்கும் ஒளவையாருடைய பாடல் ஒன்று உண்டு. மகள் தன் காதலுடன் ஓர் இரவு தாய்க்கு தெரியாமல் ஊரைவிட்டு ஓடிவிடுகிறாள். தாய் அவளைத் தேடிக்கொண்டு அலைந்தபோது ஒரு பாலைவனம் குறுக்கிட்டது. கொடிய மணல் காடு அது. மகளோ இளம் பெண். அவள் எப்படி இந்தப் பாலவனத்தை தாண்டிப் போயிருப்பாள் என்று நினைத்த போது தாயின் மனம் வெம்புகிறது. மகள் பட்டிருக்ககூடிய இடரை நினைத்து நினைத்து அரற்றுவாள். 'அற்றாரைத் தாங்கும் ஐவேல் அசதி அருவரையில் முற்றா முகிழ்முலை எங்ஙனஞ் சென்றனள்.' ஒரு தாயின் மனம் பட்டிருக்கக்கூடிய பதைபதைப்பை புலவர் இரண்டே வரியில் சொல்லிப் போய்விடுகிறார். தகப்பன் மகன் உறவு பழைய பாடல்களில் சொல்லப்படா விட்டாலும் எங்கள் இதிகாசங்களில் அவை நிறையவே சொல்லப்பட்டிருக்கின்றன. ராமன் தன் தகப்பனுடைய வாக்கை காப்பாற்றுவதற்காக 14 வருடங்கள் வனவாசம் செல்கிறான். மகாபாரதத்தில் தேவவிரதன் தன் தகப்பன் சந்தனுவின் ஆசையை நிறைவேற்றுவதற்காக இரண்டு சபதங்கள் செய்தான். 'எனக்கு உரித்தான ராஜ்யத்தை துறக்கிறேன். நான் மணமுடிக்கமாட்டேன்.' தகப்பனுக்காக செய்த எத்தனை பெரிய தியாகம் அது. யயாதி என்ற மன்னன் தன் முதுமைக் காலத்தில் வாலிபத்தை மீண்டும் அனுபவிக்க விரும்பினான். அவனுடைய மகன் புரு தகப்பனின் விருப்பத்தை நிறைவேற்றினான். தகப்பனின் முதுமையை ஏற்றுக்கொண்டு தன் இளமையை கொடுத்தான்.

டாண்டே ஒரு சம்பவத்தை தன்னுடைய Divine Comedy ல் சொல்கிறார். அத்துடன் ஒப்பிடும்போது மேற்சொன்ன மகன்களின் தியாகம் ஒன்றுமே இல்லையென ஆகிவிடும். உகோலினோ ஒரு பிரபு. ஏதோ குற்றத்திற்காக அவனை சிறையிலடைத்து பட்டினி போட்டு விடுவார்கள். அப்பொழுது அவனுடைய மகன்கள் தகப்பன் படும் வேதனையை பார்க்க சகிக்கமுடியாமல் 'அப்பா எங்களை சாப்பிடுங்கள். உங்கள் பசி ஆறட்டும்' என்று சொல்வார்கள். அவர்கள் தகப்பனை எவ்வளவு நேசித்திருப்பார்கள். தந்தைக்கும் மகனுக்குமான உறவு நிறைய சொல்லப்பட்டிருந்தாலும் மகள் தந்தை உறவு பேசப்படவேயில்லை. அப்படி இருந்தாலும் அது அரிதுதான். தகப்பன் மகள் கவிதை ஒன்றை நான் முதலில் படித்தது அம்பையின் நூலில்தான். அந்தக்

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

# நானும் மகளும்

கவிதையை நான் ஒரு நூறு தடவை படித்திருப்பேன். அம்பையின் 'வற்றும் ஏரியில் மீன்கள்' என்ற நூலில் இந்த சந்தால் கவிதை தமிழ் மொழிபெயர்ப்பில் வருகிறது.

பாபா,
உன் ஆடுகளை விற்றுத்தான் நீ
என்னைப் பார்க்க வரமுடியும் என்ற தொலை தூரத்தில்
என்னைக் கட்டி வைக்காதே.
மனிதர்கள் வாழாமல் கடவுளர்கள் மட்டும்
வாழும் இடத்தில்
மணம் ஏற்பாடு செய்யாதே.
காடுகள் ஆறுகள் மலைகள் இல்லா ஊரில்
செய்யாதே என் திருமணத்தை நிச்சயமாக.
எண்ணங்களைவிட வேகமாய்க் கார்கள்பறக்கும் இடத்தில்
உயர் கட்டிடங்களும் பெரியகடைகளும்
உள்ள இடத்தில் வேண்டாம்.
கோழி கூவி பொழுது புலராத
முற்றமில்லாத வீட்டில்
கொல்லைப்புறத்திலிருந்து சூரியன்
மலைகளில் அஸ்தமிப்பதைப்
பார்க்க முடியாத வீட்டில்
மாப்பிளை பார்க்காதே.
..................................................................
எனக்குத் திருமணம் செய்ய வேண்டுமென்றால்
நீ காலையில் வந்து அஸ்தமன நேரத்தில்
நடந்தே திரும்பக்கூடிய இடத்தில் செய்துவை.
இங்கே நான் ஆற்றங்கரையில் அழுதால்
அக்கரையில் உன் காதில்பட்டு நீ வரவேண்டும்.

இந்த கவிதையை எழுதியவர் பெயர் நிர்மலா புதுல். ஒரு தகப்பனுக்கும் மகளுக்கும் இடையில் நிலவும் பாசத்தை இதனிலும் சிறப்பாகச் சொல்ல முடியுமா என்று தெரியவில்லை. தமிழிலே இப்படியான பாடல்கள் உள்ளனவா என்று தேடியிருக்கிறேன். இருக்கலாம். என் கண்ணில்தான் படவில்லை. 2500 வருடங்களுக்கு முன்னர் படைக்கப்பட்ட சீன மொழிக்கவிதைகள் சிலவற்றை ஸ்ரீதரன் மதுசூதனன் மொழிபெயர்த்திருக்கிறார். அவை 'வாரிச்சூடினும் பார்ப்பவரில்லை' என்ற தலைப்பில் சமீபத்தில் நூலாக வந்திருக்கிறது. அதிலே தகப்பன் மகள் உறவைச் சொல்லும் ஒரு பாடல் வருகிறது. மகள் இன்னொரு நாட்டு அரசனை முடித்து அந்த நாட்டுக்கு போய்விடுகிறாள். தந்தை நாட்டின்மீது எதிரி படையெடுத்து வருகிறான். மகள் கணவனிடம் எதிரியை போரில் தடுத்து நிறுத்தச் சொல்லி கெஞ்சியும் கணவன் கேட்கவில்லை. மகள் தனிமையில் குதிரை ஏறி எதிரி நாட்டு அரசனுடன் போர்புரிய விரைகிறாள். ஆனால் கணவனின் அதிகாரிகள் அவளை துரத்திச் சென்று பிடித்துவிடுகிறார்கள். கணவனை சட்டைசெய்யாமல் தந்தை நாட்டுக்கு போர் புரிய விரைந்த அந்தப் பெண் எத்தனை தூரம் தன் தந்தையை நேசித்திருப்பாள்.

சில நாட்கள் முன்பு மகள் எங்களைப் பார்க்க திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் பின்கேட்டு வழியே அதிகாலை வந்தாள். பொஸ்டனில் இருந்து 800 கி.மீட்டர் தூரம் இரவிரவாக பயணம் செய்து வந்திருந்தாள். இன்னும் கொஞ்ச நாட்கள் விடுப்பை நீடிக்கலாம்தானே என்று நாங்கள் கேட்க முடியாது. அத்தனை வேலை தலைக்கும் மேல் இருக்கிறது என்று சொல்வாள். வீட்டுக்கு வந்ததும் பழைய படி குழந்தையாகி விடுவாள். எல்லா வேலையையும் நாங்கள்தான் செய்யவேண்டும். அவளுக்கு விருப்பமான உணவுதான் சமைக்கவேண்டும். அவள் பார்க்கும் தொலைக்காட்சி சானலைத்தான் எல்லோரும் பார்க்கவேண்டும். வேறு ஒருநாட்டில், 1990ல் நான் வைத்திருந்த புத்தக அலுமாரியில் புத்தகங்கள் என்ன ஒழுங்கில் அடுக்கப்பட்டிருந்தன என்பதை இன்றைக்கும் முறையாகச் சொல்வாள். 'மூன்றாவது தட்டில் நாலாவது புத்தகம் Wildlife. இல்லையா? என்றாள். நான் அதை எப்பவோ மறந்துபோனேன். எங்கே அது நினைவில் இருக்கப்போகிறது? Wildlife எழுதிய ரிச்சார்ட் .'.போர்ட் என்னும் ஆசிரியர் சமீபத்தில் எழுதிய வேறு புத்தகம் ஒன்றை பரிசாக தந்தாள். 420 பக்கப் புத்தகம். வந்தது போலவே மகள் ஒருநாள் திடீரென்று கிளம்பிவிட்டாள். அவள் தந்த பரிசுப் புத்தகத்தை நாளுக்கு சில பக்கங்களாக படித்தேன். 383ம் பக்கம் வந்தபோது 10 நாட்கள் கடந்துவிட்டன. அந்தப் பக்கத்தில் ஒட்டுப்பேப்பரில் ஏதோ எழுதி ஒட்டியிருந்தாள். படித்துப் பார்த்தேன். 'அப்பாடா. இந்தப் பக்கத்துக்கு வர இத்தனை நாட்களா? இதை நீங்கள் படிக்கும்போது நான் உங்களை நினைத்துக் கொண்டிருப்பேன். அன்பு மகள்.' அவள் மாறவே இல்லை. மகள்கள் மாறுவது கிடையாது. அவள் வந்து நின்றது மூன்றே மூன்று நாட்கள்தான். நான் அதையே நினைத்துக்கொண்டு வாழ்வேன். அடுத்த வருடம் திடீரென மகள் என்னை நினைத்து வரும்வரை.

சனிக்கிரகத்தில் 10759 நாட்கள்
ஒரு வருடம்.
வியாழனில் 4331 நாட்கள்
ஒரு வருடம்.
செவ்வாயில் 687 நாட்கள்
ஒரு வருடம்.
பூமியில் 365 நாட்கள்
ஒரு வருடம்.
வெள்ளியில் 227 நாட்கள்
ஒரு வருடம்
புதனில் 88 நாட்கள்
ஒரு வருடம்.
ஓ, என் அருமை மகளே
நீ விடுப்பில் வருவது
மூன்றே மூன்று நாட்கள்.
அதுதான் எனக்கு
ஒரு வருடம்.

END

# ஒரே இனச்சேர்க்கை...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

உடலியல், உளவியல், சூழவியல், முறையியல் கூறப்படுகின்றன. ஒரேபால் உள்ளவர்களுக்கு இயல்பாகவே பாலியல் உணர்வு ஏற்பட வாய்ப்புண்டு. ஆணை,



பெண்ணும், பெண்ணை ஆணும் கவர்வதுவே பொதுவான நியதி. ஆனால் இங்கு மாறுபாடான முறையில் கவர்ச்சி ஏற்படுகிறது. ஆண்களில் Testosterone என்னும் ஓமோன் சுரப்பி உள்ளது. பெண்களில் Oestrogen, Progesterone ஆகிய ஓமோன்கள் உள்ளன. இவை பொதுவாக உள்ளதெனினும் இதில் உள்ள அளவுரீதியில் மாறுபாடுகள் காரணமாகவே இம் மாறுபாட்ட கவர்ச்சி நிகழ்கிறது. அத்துடன் பாலியல் ரீதியான பலவீனமும் சேர்ந்து விடுவதால் ஒரே இனக்கவர்ச்சி ஏற்படுகிறது.

ஓரினச்சேர்க்கையாளர்கள் பரம்பரை, வளர்ந்த சூழல், வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவம், பாலியல் கொடுமை என்பவற்றினை நியாயப்படுத்துகின்றனர். இந்த பழக்கத்திற்கு அடிமையாகிப் போனவர்களை மாற்றுவது மிகவும் கடினமே. மதுபானத்திற்கு அடிமைப்படுபவர்களை பரம்பரை, சூழல் தீர்மானிக்கிறது என கூறுபவர்கள் இவர்களை கண்டு பரிதாபப்படுகின்றனர். இதே போன்று இப்படியான காரணங்களை கூறுபவர்கள ஏனையோர் சற்று வெறுப்பாகவே பார்க்கின்றனர். பொதுவாக இளம் பிராயத்து தன்னினக்கூட்டும் பாலியல் ரீதியான வாழ்க்கை முறைகளும், பாடசாலை, பல்கலைக்கழக விடுதி வாழ்க்கை முறைகளும் இவற்றிற்கு மேலும் உதவுவன. பசிவிடாய் போன்று சிலரிடம் இயல்பூக்கம் (Instinct) உள்ளது. இதுவும் தன்னின சேர்க்கைக்கு காரணமாகும்.

பைபிளில் இந்த ஓரினச்சேர்க்கை மறுக்கப்பட்டுள்ளது. 'பெண்ணுடன் பாலுறவு கொள்வது போல் ஆணொடு கொள்ளாதே! அது அருவருப்பு' லேவியராகமம் (லேவியர்) 18.22 பொதுமொழிப்பெயர்ப்பு எனினும் இன்று பைபிளுக்கு புது விளக்கம் கொடுக்கப் புறப்பட்டவர்கள் இதனை ஆதரித்து பிரசாரம் செய்கின்றனர். பைபிள் அந்த பழக்கத்தினை வெறுக்கும்படி தான் கூறுகிறது. இதிலுள்ள பலவீனமான கருத்தினை புரிந்து கொண்டவர்களே இன்று மிகவும் தீவிரமாகியுள்ளனர். தன்னின சேர்க்கையாளர் சட்டரீதியாகவும், தனிமனித சுதந்திர ரீதியாகவும், நாட்டு தலைவர்களை தீர்மானிக்கும் ரீதியிலும் பல நடவடிக்கைகளை எடுத்தமையால் தடையின்றி நடைபெறுகிறது. முஸ்லீம் நாடுகளில் இவ்வாறான நடவடிக்கைகள் சட்டரீதியில் தடையாக இருந்தாலும் மறைமுகமாக நடைபெற்றே வருகிறது.

தன்னினச்சேர்க்கையை கண்டிக்க முடியாத அளவுக்கு நாடுகளில் சட்டங்கள் இதனை அங்கீகரித்து வருகின்றன. இதனால் மருத்துவ முறையில் பாரிய பிரச்சினைகளும் எழுந்தன. நோய்கள், சுகாதாரநலம், மருத்துவ ஆராய்ச்சி, உளநோய் ஆய்வு அனைத்து துறைகளிலும் பல ஆய்வு முறைகள் நடைபெறுகின்றன. எதிர்ப்புகள், சட்டமூல பிரச்சினைகள் என்பன தோன்றினாலும் Gays (ஆண் போகிகள்), Lesbians (பெண்போகிகள்) ஒன்றுபட்டு சர்வதேசதுறையில் ஒரு புது இனமாக வடிவெடுத்து வருகின்றனர். இதனால் கனடாவில் 74 வீதமானவர்கள் இவர்களைப் பற்றி நன்றாக அறிந்துள்ளனர். சில இடங்களில் இத்தகையவர்கள் குடியேற்றங்களை கூட ஏற்படுத்துவதால் Gay landscape எனப்படும் நிலஅமைப்பு கூட உருவாகிறது.

LGBT என்ற குறிப்பு எழுத்து Lesbian, Gay, Bisexual or Transgender என்ற பதத்தினை விளக்க எழுந்தது. ரொறொன்ரோ, வன்கூவர், மொன்றியல் நகரங்களில் இது மிகவும் அறிமுகமாகியுள்ளது. இதற்கு எதிர்ப்பு காட்டுபவர்கள் 'Male and Female he create them' என கடவுளின் படைப்பினை ஏற்றுக் கொண்டு 'Adam and Eve not adam and steave' என பெண் ஆணுக்காக என்பதனையும்

தொடர்ச்சி 38ஆம் பக்கம்


LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# Education

**Review Tutorials - 129**


## CHEMISTRY 12 & IB

(i) Predict the major product/s of the following with $HNO_3/\ H_2SO_4$.




(a) (b) (c)

(ii) Write the major products of the when react with $AlCl_3/CH_3Cl$




(a) (b)

**(12B)** Balance the equation in acidic solution

$FeS + NO_3^- \rightarrow Fe^{3+} + NO + SO_4^-$

## CHEMISTRY 11

**(11A)** A 17.2 g of impure $NaHCO_3$ contains 3g of $KNO_3$. Solubility of $KNO_3$ and $NaHCO_3$ are 32g and 8g. What is the smallest volume of water at 20°C that could be used to remove the impurity and leave pure $NaHCO_3$

**(11B)** A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride. How much $Cl_2$ is produced in grams?

$K_2Cr_2O_7\,(aq) + 14HCl(g) \rightarrow$
$7H_2O(l) + 2KCl\,(aq) + 2\,CrCl_3(aq) + 3\,Cl_2(g)$

## MATH

**(Gr12A)** Determine the solution set for the inequality $x^4 + 9 \le 6x^2$

**(Gr 12B)**

$\log_a x = 3$ **and** $\log_a y = -2$, **determine** $\log_a\left(\frac{x^2}{y^3}\right)$

## PHYSICS

(Gr 11) A piano note, $A_2$ has to be tuned to its proper frequency 110Hz. If you have a tuning fork whose frequency is 220Hz, how should you do the adjustment?

**(Gr12)**

A thin film coated on one side of a glass lens to reduce reflection from lens surface. Determine the minimum thickness of the coating that eliminates the reflection. Assume the index of refraction of the coating material 1.32, and glass 1.5., wavelength of light =550nm, light approximately perpendicular to the lens surface.

**(GR12) BIOLOGY** Describe the functional and evolutionary importance of "introns ".

**Answer key 128**

- **CHEMISTRY 12 & IB**

$C_6H_6 + AlCl_3 \rightarrow C_6H_5CH_3 \rightarrow C_6H_5COOH$

$CH_3\,CH_2CH_2OH + H_2SO_4 \rightarrow CH_3\,CH(OH)\,CH_3 \rightarrow CH_3\,COCH_3$

$CH_3\,CHO \rightarrow CH_3\,CH_2OH \rightarrow CH_3\,COO\,CH_2\,CH_3$
$\qquad\qquad\qquad\qquad\searrow CH_3\,COOH$

(ii) (a)$C_2H_5OH$ –weak base but nucleophilic $SN_1$ favour

$(CH_3)_2CH\text{-}OC_2H_5$ **major**; $CH_3\,CHCH_2$ **minor**


(b) $C_2H_5O^-$ Strong base $E_2$ predominates

$(CH_3)_2CH\text{-}OC_2H_5$ **minor**; $CH_3\,CH{=}CH_2$ **major**


**(G12)** $\sin x \le \frac{\sqrt{2}}{2}\ \ (0, \frac{\pi}{4}) \cup (\frac{3\pi}{4}, \pi)$

- **PHYSICS**

Calculate the deceleration of the car, a = $92.6m/s^2$
$T\sin\theta = F = ma$ ..(1)
$T\cos\theta = mg$ .........(2)
(1)/ (2) $\tan\theta = ma/mg$; $\theta = 84°$




**(GR12)**




(a) T= mg = 900x9.8N

(b) (i) pulling back, (h=15-15cos20)= 0.905m

$\Delta Eg = \Delta mgh = mg\,x0.905$ J= $\Delta E_k = \frac{1}{2}mv^2$; **V= 4.2m/s**

(ii) $T = mg + mv^2/r = 9.9x10^3N$

(c) $V_2$=0, $V_1$ = 4.2m/s

a= $4.2/0.2 = 21m/s^2$; F= ma = 900x21N=$1.9x10^3N$

**BIOLOGY(Gr12)**

Both the 5' and 3' ends are covalently modified during the mRNA synthesis before the mRNA exits the nucleus.

5'cap – modified by addition of 7, methyl guanosine (GTP) that is added to the 5' end. The 3' end, modified by enzymatic addition of a poly-A-tail,
(Poly-A tail – sequence of about 200 adenine nucleotides) to the 3' end of mRNA before it exits the nucleus.

- These modifications inhibit degradation of mRNA in the cytoplasm, may facilitate attachment to the small ribosomal subunit and may regulate protein synthesis by facilitating mRNA's export from the nucleus to the cytoplasm.

***Answer key 128 - next issue***

**Contact: 647 341 3975**
**Dr. A.Sri Krishnaraj PhD**
**E mail: ask@ keentutoringcentre.com**

# ஊராகி...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

என்றார். இது கத்தி இன்றி இரத்தம் இன்றி நடக்கும் யுத்தம். இது வெல்வது சத்தியத்தில் சத்தியம். ஞானவாள் ஏந்தும் சிவபெருமானை அழைத்து முழங்குங்கள் என்றார். இதுமட்டுமா? சிவனின் அறிவாகிய வெண்கொற்றக்குடையைப் பிடித்துக் கொள்ளுங்கள். அவருடைய திருநீற்றுக் கவசத்தை வெற்றியடை வேண்டும் என்று நினைத்தபடி நெற்றியிலே அணிந்து கொள்ளுங்கள். இவ்வாறு செய்து மாயையாகிய படைகள் நம்மிடம் வராது தடுத்து நமது ஊரை நாம் காப்பாற்றிக் கொள்வோம். நமது ஊர் நமது மண் ஆண்டாண்டு காலமாய் நமது ஆளுகைக்குள் இருந்தது. அந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவில்லை என்ற நம்பிக்கையோடு இருந்து இயற்கையாகவே மண்ணுக்குள் மண்ணாகியவர்களும் நம்முடைய மூதாதையர்கள். இதனாலேயே அவர்கள் இறப்பை மறைவை இயற்கை எய்தினார் என்று குறித்துக்கொண்டோம். இன்று செயற்கை எய்தியவர்களுக்காக செந்நீர் வடிக்கிறோம். அன்று சிந்திய இரத்தமும் இன்று சிந்திய இரத்தமும் சிவப்புத்தான். நமது ஆட்சியில் ஆவணத்தில் சாட்சிகளோடு உறுதியாய் இருந்த நமது சொந்தமண் மாயப்படை வராது நம் இறைவனிடம் நாம் வேண்டிக்கொள்வோம். அவர் தடுத்தாட்கொள்வார்.

நண்பா!
தொண்டர்களும், பக்தர்களும், யோகிகளும், சித்தர்களும் அணிகளாகவும், பாதுகாப்பாயும், இயங்குவோராயும், பின்னணியாளராயும் செல்வார்களாயின் மாயையாகிய துன்பப்படையை நீக்கி நாட்டை ஆள்வோம். நாம் மாயைகளை விலக்கினால் தான் நம்முடைய ஊரும் உறவும் நிலமும், நலமும் நிர்ணயங்களும் நமக்கே உறுதியாய் வந்து சேரும் என்று மாணிக்கவாசகர், சொல்வதை நாம் நம்பவேண்டும்? ஏன் தெரியுமா? அவர் இளைஞனாய், வளர்ந்த மனிதனாய் அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சரவையில் மந்திரியாய் இருந்தவர். இறைவன் சிவபெருமானால் ஈர்த்து இழுக்கப்பட்டு ஞான முதிர்ச்சி பெற்றவர். இதனாலேயே ஞானவாள் ஏந்தும்படி கூறினார்.

நமக்கு இப்பொழுது தேவையானது அறிவல்ல, ஆற்றல் அல்ல. அனுபவ ஞானமே!

# பிடித்தவர்கள்

31ஆம் பக்கத்தொடர்ச்சி

அந்தச் சாரளம்.

தேவ ஊழியர்களை வழியனுப்பிய பின்னர் வீட்டுக்குள் நுழைந்த சிவா, வீட்டைப் பார்த்தான். வீடு ஏதோ ஒரு புதுப் பொலிவுடன் திகழ்வதுபோல் இருந்தது அவனுக்கு. தலைவலி முற்றாகவே காணாமல் போயிருந்தது. நீலவேணி கூட நிம்மதியாக இருந்தாள். 'ஆண்டவருக்குத் தோத்திரம்' என்றவள், படுக்கைக்கு ஆயத்தங்கள் செய்தாள்.

அன்றிரவு,

பலநாட்களின் பின்னர் நிம்மதியாக அன்றுதான் நித்திரை செய்தார்கள்.

இன்னமும் வரும்.

**50** PARTY HALL EVENT CENTRE MEETING PLACE **AVAILABLE FOR RENT**

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய ***50*** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

*GTA Square Mall (FINCH & MIDDLEFIELD*

தொடர்புகளுக்கு: ***416.917.6883***



# அனைவருக்கும் எமது
# கிறிஸ்மஸ் தின நல்வாழ்த்துக்கள்




Niru Niru
நிரு
பிராண்ட்

**Tel: 416.750.1976**
**Web: www.niru.com**
**E-mail: info@niru.com**

நகைச்சுவைத் தொடர் 258

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



சூழலும் ஊழலும்



உலகர் வீட்டு மேசையில் பல வர்ணத்தில் பற்பல கலண்டர்கள். அது போதாதென ஆட்டிலறி அன்னம்மா செக்கண்ட்புளோர் செல்லம்மா எங்காவது போய் வரும்போது இலவச கலண்டர்களை ஒண்டுக்கு இரண்டாக எடுத்துவரத் தவறுவதில்லை. இலவசம் என்றால் ஒண்டுக்கு இரண்டாக நாம் எடுப்பதில் வல்லவர்கள்.

செய்திகளை விட வதந்திகள் வெகு விரைவாகப் பரவுகின்றன. யார் சொன்னார்கள், எப்போ சொன்னார்கள் என்று தெரியாமல் செய்திகளைப் பரப்பி விடுகிறோம்.

ஓடுகிறோம்… எங்கு… ஓடுகிறோம்……என திவ்வியராஜனின் வில்லுப்பாட்டில் கேட்ட வரிகள் உலகருக்கு ஞாபகம் வந்தது. ஆம் ஓடுகிறோம், ஏன் எதற்காக இது பலருக்கு தெரிவதில்லை. திட்டமில்லாத ஓட்டங்கள். வெள்ளி சனி ஞாயிறு ஆரம்பித்து விட்டால் வேலை நாட்களைத் தவிர வார இறுதிநாட்கள் நாங்கள் ரொம்ப பிஸி…. என்ன பிஸி... எமக்கே தெரியாது.



யாருக்காக இது யாருக்காக? ஒருவருக்குமே தெரியாது. இந்தவருடம் வாகனவிபத்துக்கள் மிக அதிகம். கடந்தவாரம் வீதியைக் கடக்குப்போது பாதசாரிகள் ஒரு மணி நேரத்திற்கிடையில் 6 பேர் காயப்பட்டுள்ளனர்.



கடந்தவாரம் நன்றாக உடையணிந்த குரங்கு விற்பனை நிலையத்தினுள் சென்றது உலகச் செய்தியில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. குரங்கு உடுப்புப் போட்டுக்கொண்டு சென்றாலும் நடிகைகள் அரைகுறை உடையுடன் சென்றாலும் முக்கிய செய்தியாகிவிடுகிறது.

உலகண்ணை 2012 வருடம் முடியும் நேரம் உலகில் எத்தனை நல்லது கெட்டது நடந்திருக்கு.



சூழலைப் பாதுகாக்க வேண்டிய அமைச்சர்கள் மந்திரிமார் மேயர்கள் உலகளாவியரீதியில் ஊழல் தான் செய்திருக்கினம் …..

செக்கண்ட் புளோர் செல்லம்மா சிரிச்சுக்கொண்டே சொன்னா அவர்கள் சூழலைக் கவனிக்கவில்லை.

ஆனால் மக்கள் அவர்களின் ஊழலைக் கவனிச்சுவிட்டினம். உலகர் இந்தவார முக்கிய செய்திகளை அசைபோட்டுக்கொண்டிருந்தார்.

சர்வதேச ஊனமுற்றோர் தினம் அனுசரிக்கும் அதேவேளை யாழ். பல்கலைக்கழக மாணவர்களை அடித்து உதைத்து சித்திரவதை செய்யினம்.



கிழக்கு மேற்கு ஜேர்மனி பெருஞ்சுவரால் பிரிந்திருந்து 1989இல் 30 வருடங்களின் பின் திறக்கப்பட்டது. ஆனால் இலங்கையில் போர் முடிவுக்கு வந்தும் முள்ளிவாய்க்காலில் வாழ்ந்த பலர் முள்வேலிக்குள் முடக்கி வைக்கப்பட்டுள்ளனர். உலகே உனக்கு கண்ணில்லையா!

டிசம்பர் 15 - 31, 2012



16. ஜப்பானில் 1920இல் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டதில் 200,000 பேர் கொல்லப்பட்டனர்.
19. திருவெம்பாவை ஆரம்பம்.
21. வின்ரர் ஆரம்பம்.



22. ஜேர்மனியை கிழக்கு மேற்கு என பிரித்த பேர்லின் சுவர் 30 வருடங்களின் பின் 1989 இல் (பிரான்டன்பேர்க் கதவு) திறந்து விடப்பட்டது.
24. ஈ.வே.ரா பெரியார் நினைவுதினம் (திராவிடர் கழகத்தை தோற்றுவித்தவர்)
24. எம். ஜி. ராமச்சந்திரன் நினைவுதினம். புரட்சித்தலைவர் மக்கள் திலகம் தமிழக முதல்வராக பதவி வகுத்தவர்.
25. நத்தார் பண்டிகை - கிறிஸ்மஸ்.
25. சார்லி சாப்ளின் நினைவுதினம். (சிறியோர் முதல் பெரியோர்வரை ரசிக்கும் நகைச்சுவை நடிகர்) (1889 -1977)
26. சுனாமி பேரலை. பல்லாயிரக்கணக்கான உயிர்களை பலி-கொண்ட 6ம் ஆண்டு. (2004)




31.2012 ஆம் ஆண்டு நிறைவு.
01-01-2013 ஆங்கில புது வருடம்.









# ஒரே இன...

### 35ஆம் பக்கத்தொடர்ச்சி

முன்வைக்கின்றனர்.

மறுபுறத்தில் மிருகங்களிலும் இத்தன்னினச் சேர்க்கை உள்ளதாக வலியுறுத்தப் பட்டுள்ளது. பிராணிகளின் சாம்ராஜ்சியத்தில் Bruce Bagemihl என்பவர் 1999 இல் செய்த ஆய்வில் 1500 பிராணிகள் தன்னின சேர்க்கையுள்ளதாக கூறியுள்ளார். இதுவும் தொடர் ஆய்வுக்கு உட்பட்டுள்ளது.

இப்பாலியல் சம்பந்தமான பிரச்சினைகளை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் இதனை நீக்குவதற்கான வைத்திய காரணங்களை கண்டுபிடித்து ஆலோசனைகளை வழங்க வேண்டியுள்ளது. திருமணம் பற்றிய இயற்கை உண்மைகளை விளக்குதல் அவசியமாகிறது. இயற்கைக்கு மாறாக இச்செயலை கண்டிப்பு செய்ய வேண்டும். பிறழ்ச்சியான நடத்தையால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி விளக்கலாம். வெகுசன தொடர்பு சாதனங்கள் மூலம் இதன் குறைபாடுகளை விளக்க முயலலாம். எயிட் போன்ற நோய்கள் இதனால் அதிகரிப்பதாக விளக்கலாம். பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை இதன் பிரச்சினைகளை எடுத்துக் கூறலாம்.

இன்று எண்ணிக்கையற்ற நாடுகளில் மிகவும் தீவிரமாக இடம்பெற்று வருகின்ற ஓரின சேர்க்கையும், ஒரேபால் திருமணமும் தடுக்க முடியாத அளவுக்கு அதிகரித்து செல்வதினை அவதானிக்க முடிகிறது. ஒரு காலத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இவர்கள் இன்று வெளிப்படையாக கூறுவதில் பெருமையும் கொள்கின்றனர். அருவருப்புடனும், வெறுப்புடனும் பார்க்கப்பட்ட இவர்கள் புதியதொரு இனமாக பெருகி வருகின்றனர். வரலாறு பின்னோக்கி செல்வதில்லை என்பது போல் நிச்சயமாக இவர்களது வேகம் குறைவடையமாட்டாது போலவே தெரிகிறது. எமக்கு இவர்களை பார்க்க ஒரேமாதிரி இருந்தாலும் எதிர்காலம் இவர்களுக்கு போல் தான் தெரிகிறது.

# நடுவுல...

### 25ஆம் பக்கத்தொடர்ச்சி

பார்வையாளர்களுக்கு
அப்படியே கடத்துகிறது பிரேம்குமாரின் ஒளிப்பதிவு.

இசை ஷங்கர், சித்தார்த். நண்பர்கள் நால்வரின் அறிமுக பாடல், 'ப்ரோமோ' பாடல் என மொத்தம் இரண்டே பாடல்கள்தான். என்றாலும் ஷங்கர் கவனிக்க வைக்கிறார். சித்தார்த்தின் முதல் பாதி பின்னணி இசை ஏதோ திகில் படம் போல வெறுப்பேற்றினாலும் பின் பாதி நன்றாக இருக்கிறது. படம் முழுக்க திரும்பத் திரும்ப வரும் வசனங்களுக்கு சோகம், பதட்டம், நெகிழ்ச்சி, வருத்தம் என்று பின்னணி இசையால் அழகாக நிறம் கொடுக்கிறார்.

இயக்கம்: பாலாஜி தரணிதரன். ஏற்கெனவே குறும்படங்கள் தயாரித்து விருது பெற்றவர். கிரிக்கெட் மைதானம், வீடு, மருத்துவமனை, கல்யாண மண்டபம் என நாலு அஞ்சு இடங்கள்தான் படத்தில் வருகிறது. இவற்றிலேயே வைத்து படத்தை முடித்திருப்பது இயக்குநரின் சாமர்த்தியத்தையே காட்டுகிறது. அதிலும், கடைசி காட்சிகள் அரை மணி நேரமாக திருமண மண்டபத்திலேயே நடக்கின்றன. ஆனாலும், எந்தவித சலிப்பும் தெரியாத அளவுக்கு படமாக்கியிருக்கிறார். கதாநாயகனுக்கும் கதாநாயகிக்கும் 'டூயட்' இல்லை படம் துவங்கி சுமார் இரண்டு மணி நேரம் கழித்துதான் அறிமுகமாகிறார் கதாந-ாயகி... என தமிழ் திரைப்படங்களின் வழக்கமான வாய்ப்பாடுகளை



தவிர்த்திருக்கிறார். அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார். இடைவேளை வரையான இழுவையை கொஞ்சம் தவிர்த்திருக்கலாம்.

படத்தின் நீளம், சில இடங்களில் நெளிய வைக்கும் அளவு மீண்டும் மீண்டும் வரும் அதே வசனங்கள், மிதமிஞ்சிய யதார்த்த சூழல்… போன்ற சில குறைகள் இருந்தாலும், நமக்கு தெரிந்த நாலு நண்பர்களை பார்த்து விட்டு வந்த உணர்வை அழுத்தமாக பதிவு செய்த விதத்தில் படம் கொஞ்சமல்ல நிறைவாகவே மனதில் பதிகிறது.

நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம் - பார்க்கலாம்!


TRAFFIC TICKETS
CARELESS DRIVING
IMPAIRED DRIVING
RED LIGHT
REDLIGHT (CAMERA)
SPEEDING
SEAT BELT
NO INSURANCE
STOP SIGN
MOTORVECHILE ACCIDENT
CRIMINAL MATTERS (SUMMARY)
416- 803- 5296
கலகலப்பு தீசன்
DON'T
MISS YOUR TRAIL DATE
LOSE YOUR POINTS
KALAKALAPPU THEESAN
SKTHEESAN@GMAIL.COM
SKTPARALEGAL SERVICE


Markham Rd & 16 Th Ave
Bedrooms: 3 Washrooms: 2 Markham $399,900
White's Hill/Bur Oak
Bedrooms: 3 Washrooms:2 Markham $399,900
9th Line Bypas & 14th Ave
Bedrooms: 3 Washrooms: 3 Markham $429,900
Markham/Denison
Bedrooms: 2 Washrooms: 2 Markham $254,900
Lawrence/Mccowan
Bedrooms: 3+1 Washrooms: 2 Toronto $389,900
Ellesmere/Scar Golf Club
Bedrooms: 3+2 Washrooms: 1 Toronto $389,999
Brimorton/Scar Golf Club
Bedrooms: 3+1 Washrooms: 2 Toronto $399,000
Markham/ Ellesmere
Bedrooms: 3+1 Washrooms: 2 Toronto $389,000
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/GTA
Realty Inc., Brokerage
Independently Owned and Operated
5215 Finch Ave. E. Suite 203
Toronto, ON. M1S OC2
Office: 416-321-6969 Fax: 416-321-6963
Raj Paramasamy
Sales Representative
Cell: 416-587-1619
Email: raj.paramasamy@hotmail.com
"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
Designed by: Qcopy.ca

## MORTGAGE NEEDS....

Subo Thevarajah, AMP
Mortgage Agent
License# M08002859
416.627.2222
subo@bmsic.com
BonaFide Mortgage Solutions Inc. the true freedom...
TD MCAP

---

BonaFide Mortgage Solutions Inc. the true freedom...

Thayalan (Thaya) Gobalakrishnan Mortgage Agent(GTA) Lic No : M12001612

* New Mortgages * Refinance * Second Mortgages

Call me for any Mortgage Financing questions?

Cell: 416-575-3211 ,Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@gmail.com

---

"Let me help you make the right choice"

SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

---

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

## SASI CHELVARATNAM

*Sales Representative*

Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2
*Independently Owned & Operated

---

## TD Canada Trust

Supen Subramaniyam (Manager, Residential Mortgage)

416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com

ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable

Low Mortgage Rates

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit
Consolidation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

---

## RealEstate / Mortgage / Investments

| MINGAY & 16TH AVE FOR LEASE | OSHAWA | MARKHAM & STEELES |
|---|---|---|
| Bedrooms: 2<br>Washrooms: 1<br>$900 | Bedrooms: 3<br>Washrooms: 3<br>Bsmt: Finished<br>$369,900 | For Sale<br>Commercial / Retail<br>$349,900 |

அனைவருக்கும் நத்தார் தின நல்வாழ்த்துக்கள்

## Pre Construction condo.

In Downtown Toronto

Completion 2013 - 2014

Starting From $519 Per sq.ft



RE/MAX Vision Realty Inc. Brokerage.

A. Anton Jeeva B.Eng
416.575.5055
Lic No: M08004376
Real Estate / Principal Mortgage Broker

"When bank says No We say Yes"

*Independently owned and operated
Office: 416.321.2228
E-mail: anton.Jeeva@gmail.com, Web: Antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6

---

## Free Real Estate Class

Free Real Estate Class Call: **416.321.6969**

## Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

## HomeLife/GTA Realty Inc. Brokerage *

5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666

---

ON THE SPOT
## HOME INSPECTIONS INC.

Danny Sripath, B.Sc.
Qualified Home Inspector
Mold Specialist

416.823.3552 / 416.289.0033
onthespothome@yahoo.ca

No 80 Corport Dr, Unit #201
Toronto ON M1H 3G5

InterNACHI IAC2 CERTIFIED Mold CanNACHI

---

## NuTeK COMPUTERS

www.nuTechComputer.com

- Virus Removal
- Internet Sharing
- Computer Tune Up
- Computer Repair

அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்

416.587.1619
techsupport@nutechcomputer.com

Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional

SALES - SERVICE - UPGRADES